KALKI 17.4.88 ரூ. 2.

கல்கி





தில்லி தமிழர்





சிறப்பிதழ்



இனி, வெய்யிலும் கானலும் இனிய நண்பர்கள் உமக்கு.

எந்தப் பவுடரிலும் நீங்கள் கண்டிராத வன்மையோடு வேர்க்குருவை விரட்டு கிறது புதிய ஷவர் டு ஷவர். இதிலுள்ள சிறப்பான மருந்துத் திறன், அரிப்பு நமைச்சல்களை நொடியில் போக்கி ஆறுதலளிக்கிறது. அதே வேகத்தில், வேர்க்குரு பிரச்சினையையே தீர்க்கிறது விருக்கென. ஷவர் டு ஷவர் மூலமாக உங்கள் குடும்பத்தினர் அனைவருக்கும் குன்றாத குளுமை, உலர்வான சுக வசதி, சௌகரியம்—நாள் முழுதும், கோடைகால முழுதும். தூவிக் கொள்வீர் இன்றே துளியளவு. உலாச் செல்வீர் வெளியே, குளிர்காய்வீர் சூரிய ஒளியின் சுகமான நட்பிலே.



உயர்ந்த செயல்திறன்



துரித நிவாரணம்.



ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன்

இரட்டைச் சிறப்பிதழ்!

டில்லி தமிழர் பற்றி அடுத்த இதழிலும் சில சுவையான தகவல்கள் இடம் பெறப் போவதால் 'இரட்டைச் சிறப்பிதழ்' என்றே தில்லி தமிழர் சிறப்பிதழை வர்ணிக்கலாம்!

இந்தச் சிறப்பிதழ்களுக்குத் தகவல்கள் சேகரித்துக் கட்டுரை வடிவம் தரச் சென்னையிலிருந்து சாருகேசி, ப்ரியன், சந்திரமௌலி ஆகிய நிருபர்கள் தில்லி சென்றார்கள். அவர்களுடன் சென்ற கே.வி. ஆனந்த், மேலட்டை வண்ணப் படங்களையும் தில்லி செய்திகள் தொடர்பான இதர புகைப்படங்களையும் எடுத்திருக்கிறார்.

தவிர, தில்லியிலேயே பல காலமாக வாழும் தமிழ் எழுத்தாளர்களும் இந்த இதழ்களின் சிறப்புக்கு உதவியிருக்கிறார்கள். அவர்களுள் வாஸந்தி, தில்லியில் வசிக்கும் சேலத்து மக்களைப் பற்றியும், மத்திய அரசில் உயர் பதவிகளை வகிக்கும் தமிழர்களைப் பற்றியும் எழுதியிருக்கிறார்.

சுப்புடு, தமக்கே உரிய விமர்சனப் பார்வையில் தில்லித் தமிழர்களைப் பற்றி எழுதியிருக்கிறார்.

இந்திரா பார்த்தசாரதியும், ரமாமணி சுந்தரும் சிறுகதைகள் எழுதியிருக்கிறார்கள்.

தில்லித் தமிழர் பற்றிக் கல்கி ஒரு சிறப்பிதழ் வெளியிடுகிறது என்றவுடன் நமது குடியரசுத் தலைவர் ஆர். வி. அவர்கள் வாழ்த்துத் தெரிவித்துப் பாராட்டியிருப்பது எல்லாவற்றுக்கும் சிகரமாக அமைந்திருக்கிறது.



सत्यमेव जयते

राष्ट्रपति
भारत गणतंत्र
PRESIDENT
REPUBLIC OF INDIA



தமிழர்கள் உலகத்தில் பல்வேறு நாடுகளிலும், பாரதத்தின் பல்வேறு பகுதிகளிலும், சீரும், சிறப்புடன் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் எங்கு சென்றாலும், தங்கள் கலை, கலாசாரம், சங்கீதம், நடனம், மொழி, அறுசுவை உணவு எதையும் கைவிடுவதில்லை. அவ்வாறே தில்லியிலும், உயர்நிலைப் பள்ளிகள், சங்கீத சபைகள், திருக்கோயில்கள் முதலியவை அமைத்து, தமிழ் மணம் வீசும் வகையில் தமிழர்கள் திகழ்கின்றனர். குறிப்பாக இத்துறையில் தில்லி தமிழ்ச் சங்கம் ஆற்றும் பணி போற்றற்குரியது. அரசியல், நிர்வாகம், நீதி, இலக்கியம், கலை போன்ற ஒவ்வொரு துறையிலும் தமிழ் மக்கள் உயர் பொறுப்புக்களை ஏற்று, தமிழ்நாட்டிற்குப் புகழ் தேடித் தந்துள்ளனர்.

தமிழ்த் தொண்டினைச் சிறப்புற ஆற்றி வரும் 'கல்கி' தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று "தில்லி வாழ் தமிழர்கள் சிறப்பிதழ்" வெளியிடுவதை நான் பாராட்டுகின்றேன். 'கல்கி' ஏற்றுள்ள பணி போற்றவும், வரவேற்கவும் தக்கது. இதழ் பொலிவுடன் விளங்கிட எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்.

ஆர். வெங்கட்ராமன்

(ஆர். வெங்கட்ராமன்)

தில்லியில் எந்தக் காலனிக்குச் சென்றாலும் அநேகமாய் எல்லா வீடுகளிலும் வேலைக்கு இருப்பவர்கள் சேலத்தைச் சேர்ந்த தமிழ்ப் பெண்கள். பளிச்சென்று உடை உடுத்திக் கொண்டு, சரளமாக இந்தி பேசிக் கொண்டு, கடிகாரச் சுறுசுறுப்புடன் ஐந்து, ஆறு வீடுகளில் வேலை செய்து மாதத்திற்குக் கணிசமான தொகையைச் சம்பாதிக்கும் ஆற்றல் கொண்ட ஆச்சரியமான பெண்கள். வடக்கத்திக்காரர்கள் கூட 'மதராஸி' வேலைக்காரிகள் சண்டை போட மாட்டார்கள், நாணயமானவர்கள் என்று விரும்பி அவர்களை வைத்துக் கொள்கிறார்கள்.



சக்கர்பூர் தமிழர் காலனி.

சேலத்து ஜனங்களின் தொகை இப்பொழுது கிட்டத்தட்ட தில்லியில் ஐம்பதினாயிரம் என்று கூறப்படுகிறது. இந்த அளவுக்கு அவர்கள் இங்கே பெருகி இருப்பதற்குச் சேலம் மாவட்டத்தின் வறட்சி காரணமா அல்லது இந்த ஜனங்களின் சுபாவமான சுறுசுறுப்பும் தீரமும் காரணமா அல்லது இரண்டுமா என்று தெரியாது. படித்தவர்கள் கூட மொழி தெரியாமல் தில்லியில் திண்டாடும்போது, தமிழகத்தின் சின்னச் சின்ன கிராமங்களிலிருந்து தமிழ் மட்டுமே தெரிந்த இந்த எளிய மக்கள், எந்தத் துணிச்சலில் முற்றிலும் வித்தியாசமான கலாசாரம் கொண்ட தில்லி மாநகருக்கு வந்து சேர்ந்தார்கள்? அதுமட்டுமல்ல; இன்று அதன் அங்கமாகவே விளங்குகிறார்கள் என்பது ஆச்சர்யமான விஷயம்.

இன்று அவர்களது வீடுகளில் ரேடியோ, டி. வி., காஸ் அடுப்பு போன்ற பல வசதிகளைச் சர்வ சகஜமாகப் பார்க்கலாம். குழந்தைகள் பள்ளிக்குச் செல்கிறார்கள். அநேகம் இளைஞர்கள் மாலிகளாகவும், ப்யூன்களாகவும், சப்ராசிகளாகவும், மெக்கானிக்குகளாகவும் வேலை பார்க்கிறார்கள். முன்பு ஆங்காங்கே சிறுசிறு கும்பல்களாக ஜுக்கிகள் (குடிசைகள்) போட்டு வசித்து வந்தார்கள். சில வருஷங்களுக்கு முன்னால் தில்லியில் குடிசைகளையெல்லாம் எடுத்துவிட வேண்டுமென்ற இயக்கம் மும்முரமானபோது, இவர்களுக்கு அரசாங்கம் நகரைவிட்டுச் சற்றுத் தொலைவில் இருக்கும் இடங்களான சக்கர்பூர், திருலோக்புரி ஆகிய இடங்களில் வீடு கட்டிக் கொள்ள இடம் கொடுத்தது.

இவர்களெல்லாம் எப்படி வாழ்கிறார்கள் என்று பார்க்க சக்கர்பூருக்கு நேரில் விஜயம் செய்தபோது தமிழ்நாட்டில் ஒரு பகுதிக்குச் சென்றது போல் பிரமை ஏற்பட்டது. முகப்பிலேயே இவர்கள் கட்டி இருக்கும் காளி

“தமிழ்


பழனியும் அவரது குதிரை வண்டியும்

சேலம் காலனியில் காய்கறிக்கடை ...





பழனியின் மனைவி

ரத்தினம்:
''பாஷைப் பிரச்னைங்க...''



கோவில் கண்ணில் படுகிறது. வழிகாட்டிக் கொண்டு வந்த பழனி, இருபத்தொன்பது வருடங்களாகத் தில்லியில் இருக்கிறாராம். திருச்செங்கோடு பக்கம் இருக்கும் பெருமாம் பாளையத்தைச் சேர்ந்தவர்.

''நான், என் சம்சாரம், இரண்டரை வயதுப் பெண் குழந்தை மூன்று பேரும் வந்தோமுங்க. அப்ப தில்லியில் அதிக ஜனங்களே கிடையாது. ஊரிலே சாப்பாட்டுக்குக் கஷ்டம். சொந்தக்காரங்க யாரோ தில்லிக்குப் போனால் பிழைச்சுக்கலாம்னு சொன்னாங்க. சரின்னு கிளம்பி வந்துட்டோமுங்க. முதல்லே லட்சுமிபாய் நகர்லே ஜுக்கி போட்டுக்கிட்டோமுங்க. மெல்லமெல்ல அங்கேயே எங்க பக்கத்து ஜனங்க வந்து சேர்ந்து, நூறு வீடுகள் ஆயிட்டதுங்க. எல்லோரும் வீட்டு வேலைதான் செஞ்சோமுங்க. அதாவது பத்துப் பாத்திரம் தேய்க்கிறது; வீடு மெழுகுகிறது; துணி துவைக்கிறது... மாசம் முந்நூறு ரூபாய் சம்பாதிச்சுடுவோமுங்க. அப்பெல்லாம் எல்லாச் சாமானும் ரொம்ப மலிவு. சௌகரியமா இருக்க முடிஞ்சது.''


''பாஷை தெரியாம கஷ்டமாய் இருக்கலையா?''

''கஷ்டம்னு ஒண்ணுமில்லைங்க; மெல்ல மெல்லப் பழகிட்டோம். பாஷை தெரிஞ்சதும் ஆபீஸ்களுக்குச் சாப்பாடு கொடுக்க ஆரம்பிச்சேன். மதராஸி ஸ்கூலுக்குப் போகிற குழந்தைகளைக் குதிரை வண்டியிலே அழைச்சுப் போவேன்...''

இன்றும் பழனி குதிரை வண்டி ஓட்டுகிறார். ஆனால் சாமான்களைக் கொண்டு போவதற்காக மட்டும் உபயோகிக்கிறார். கேட்டரிங் தொழில் நடத்துவோருக்கு உதவும் இந்த வேலையில் மாதம் இரண்டாயிரம் ரூபாய் முதல் மூவாயிரம் வரை சம்பா

ஊர்ல சேர்க்க மாட்டாங்க. இங்கு இருக்கிற பெரிய மனுஷ தமிழ்க் குடும்பங்களிலே நிறையக் கலப்பைப் பார்க்கும்போது எனக்கு அதிசயமாக இருக்கு... நாங்க வரதட்சணையொன்னும் வாங்குகிறது கிடையாது. எங்களுக்குள்ள ஒரு கட்டுப்பாடு உண்டு... பொங்கல் திருவிழாவும், ஸ்கந்த சஷ்டி விழாவும் பெரிசாக் கொண்டாடுவோம்... எங்களுக்குள்ளே பஞ்சாயத்து உண்டு.

காளி கோவில்



அரசியல்வாதிகள் உதவவேயில்லை''

—தில்லியில் வாழும் சேலத்து மக்கள் கூறுகிறார்கள்—

திப்பதாகச் சொல்லுகிறார்.

''இப்போ இருக்கிற விலைவாசியிலே இதுவும் பத்தலைங்க... குதிரைக்கே ஒரு நாளைக்கு இருபத்தஞ்சு ரூபாய்க்குத் தீனி போடணுங்க...'' என்கிறார்.

இன்று பிள்ளைக்கு, பெண்ணுக்கெல்லாம் திருமணம் செய்து விட்டாராம். சேலத்து ஜனங்களுடன்தான் சம்பந்தமாம்.

''எங்க ஜனங்களில் கலப்புத் திருமணம் கிடையாதுங்க. அப்படிச் செஞ்சிக்கிட்டா

ஏதாவது தகராறு என்றால் நாங்களே தீர்த்துக் கொள்வோம். போலீஸ்வரை போகாமல் பார்த்துக்குவோம்!''

''குடிக்கிறது உண்டா?''

''குடிச்சாலும் மிதமாக் குடிப்போம். ஒன்றும் கலாட்டா கிடையாது.''

''தமிழ்நாட்டு அரசியலில் ஆர்வம் உண்டா?''

''நிறைய உண்டு. எம். ஜி. ஆர். இறந்த போது மூன்று நாட்கள் யாரும் வேலைக்குப் போகலை. அவர் படத்தை வைத்து, விளக்கு



☆ பொழுது போக்கு...

ஏற்றித் துக்கம் காத்தோம். சில பேர் மொட்டை கூட அடிச்சிக்கிட்டாங்க...''

பழனியின் மகன் ரத்தினத்துக்கு இருபத்தைந்து வயது. இந்தியன் ஏர்லைன்ஸில் லோடராக வேலை பார்க்கிறார். தமிழர் நல வளர்ச்சி சங்கம் என்ற சங்கத்தைச் சுறுசுறுப்புடன் இயக்கி வருகிறார்.

''எங்களுக்கு நிறைய பிரச்னைகள்...'' என்கிறார்கள் அங்கிருக்கும் ஒவ்வொருவரும்.

''நாங்கள் தமிழர்கள் என்கிற காரணத்தினாலே இந்த ஏரியாவிலே ஒதுக்கப்பட்ட ஜனங்கள் போல இருக்கோம்... இங்கே இருக்கிற இந்திப் பள்ளிக்கூடத்திலே எங்க குழந்தைகளுக்கு இடம் கிடைக்கிறதில்லை.

''ஊருக்கு ஒதுக்குப்புறமான இந்த இடத்திற்கு நாங்க அனுப்பப்பட்டதாலே வேலை பார்க்குமிடத்திற்குப் பஸ்ஸில் போய் வருவதிலேயே நாங்கள் சம்பாதிக்கிற காசு போயிடறது... தாய்மொழிதான் முக்கியம் என்கிற எண்ணத்திலே தமிழ் ஸ்கூல்லதான் குழந்தைகளைச் சேர்க்கப்பார்க்கிறோம். அதுக்கும் பக்கத்திலே வசதி இல்லே. இங்கே சுகாதார வசதி இல்லே; மருத்துவ வசதி இல்லே... சாப்பிட ரொட்டி கூடக் கிடைக்கிறதில்லே. மத்த பகுதிக்கெல்லாம் கிடைக்கிறது. ஆனால் தமிழ்க்காரங்க இருக்கிற இந்தப் பகுதிக்கு மட்டும் கிடைக்கிறதில்லை...

''இந்திக்காரங்க இந்திக்காரங்களுக்குத்தான் உதவுவாங்க. எங்களுக்கென்று ஒரு தமிழ்த் தலைவர் கூட இல்லை. தில்லியிலே எல்லா இடத்திலேயும் தமிழ்க்காரங்க இருக்காங்க. ஆனால் ஒரு தமிழ் அரசியல்வாதியும் எங்களுக்கு உதவுறது இல்லே... எங்க பிரச்னைகளையெல்லாம் சொல்லி, இங்கே வந்து பார்க்கும்படியும் எங்களுக்கு அரசாங்கத்தின் மூலம் ஏதாவது உதவும்படியும் தலைவர்களிடம் எவ்வளவோ முறைசொல்லிட்டோம். அவங்களுக்கெல்லாம் எத்தனையோ வேலை. எங்களைப் பற்றி நினைப்பு எப்படியிருக்கும்? போன வருஷம் ஒருமுறை மூப்பனாரை எங்கள் சங்கத்துத் துவக்க விழாவிற்காகவும் இந்தக் காளி கோவிலைப் பார்க்கிறதுக்காகவும் அழைத்திருந்தோம். தேதி கொடுத்தாங்க. அவரை வரவேற்க ஐயாயிரம், ஆறாயிரம் என்று செலவு செய்து ஏற்பாடு பண்ணினோம். கடைசியிலே அவர் வரல்லே. அவருக்கும் பாவம், எத்தனையோ வேலை! அதற்கு வாங்கின கடனே இன்னும் அடையலே...'' என்று குறைகளை அடுக்கிக் கொண்டே போனார் ரத்தினம்.

இவ்வளவுக்கும் ரத்தினத்தின் முகத்தில் எரிச்சலோ கோபமோ இல்லை; சிரித்த முகத்துடன் அமைதியாகவே சொன்னார்.

''இந்திக்காரர்கள் தங்கள் ஜனங்களுக்கு உதவுகிற மாதிரி, நம்ம ஜனங்களும் இருந்தாங்கன்னா எங்களுக்குக் கஷ்டமே இருக்காது...'' என்கிறார்கள்.

அங்கிருந்த எல்லாருக்குமே தமிழ்நாட்டு அரசியலில் மிகுந்த ஆர்வம் இருப்பது தெரிந்தது. தமிழ்நாட்டு மண்ணையே மிதித்திராத அநேக இளைஞர்கள் எம். ஜி. ஆரைப் பற்றி ரொம்பவும் பெருமிதத்துடன் பேசினார்கள்.

பெண்கள் தங்கள் தங்கள் வீட்டு வாசலில் அமர்ந்து கொண்டு அரிசியில் கல் பொறுக்கிக் கொண்டோ, கறிகாய் நறுக்கிக் கொண்டோ இருந்தார்கள். ''தமிழ்நாட்டுச் சமையல்தான் சமைக்கிறோம்'' என்றார்கள்.

அநேகமாகஎல்லோருமேகுடும்பக்கட்டுப்பாட்டை அனுசரிக்கிறவர்கள். யாருக்குமே மூன்று நான்கு குழந்தைகளுக்கு மேலே இல்லை. சமீபத்திய ஒரு சர்வேப்படி, தில்லியில் இருக்கும் குடிசை வாழ் மக்களில் தமிழ்நாட்டுச் செல்வத்துப் பெண்கள்தான் குடும்பக் கட்டுப்பாட்டை அனுசரிப்பவர்கள் என்றும் அதிகம் பொது அறிவு உள்ளவர்களென்றும் தெரிய வருகிறது.

ஆளுக்கு ஆள் ''டீ சாப்பிட்டுப் போங்க; பலகாரம் சாப்பிட்டுப் போங்க...'' என்று உபசரிக்கிறார்கள்.

ஒரே ஓர் அறை கொண்ட வீடுகள். வீடுகள் இருக்கும் சந்துகள் எல்லாம், ஒரே அசுத்தம்!

சுபாவமாகவே நல் இயல்பு உள்ள இவர்களுக்காக வாதாடக் கூடிய ஒரு தலைவர் இங்கு இல்லாதது இவர்களைக் கவனிப்பாரற்ற இனமாக ஆக்கி இருப்பது பரிதாபகரமானது. இந்தப் பிரச்னை பெரியவர்களின் முகங்களில் நிழலாடுவதையும் சுற்றிலும் நிற்கும் குழந்தைகளின் கள்ளமில்லாச் சிரிப்பையும், கண்களில் ஒளிரும் அன்பையும் பார்த்து, நாம் ஒரு கையாலாகாத்தனச் சோர்வுடன் விடைபெற்றுக் கொண்டு திரும்புகிறோம்.

புரியாமல் புலம்புகிறார்கள் புல்லர்கள்

தளபதி இடமதி:

இடமதி: நான் பத்து லட்சம் பதினைந்து லட்சம் லஞ்சம் வாங்கியதாகச் சில பத்திரிகைகள் எழுதுகின்றன... கையூட்டு என்ற அழகான தமிழ்ப் பதம் இருக்க, லஞ்சம் என்ற சொல்லைக் கட்டிக் கொண்டு அழும் இந்தத் தமிழ்த் துரோகிகளை நீங்கள் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்...

— டி. லக்ஷ்மிநரசிம்மன், கும்பகோணம்.



வேட்பாளர்: உம்மால என் வெற்றி வாய்ப்பே பறி போயிடும் போல இருக்குய்யா...

இடமதி: அடடா, அப்படி என்ன செய்துட்டேன்?

வேட்பாளர்: எங்கள் கட்சி ஆட்சிக்கு வந்தால் ஒவ்வொரு குடும்பத்துக்கும் குறைந்த செலவில் வீடு கட்டித் தருவோம்னு பேசித் தொலைக்க வேண்டியதுதானே? ஞாபக மறதியா சின்ன வீடு கட்டித் தருவோம்னு சொல்லியிருக்கிறீரே...!

— எஸ். சுந்தரராஜ், பாளையங்கோட்டை

தொண்டர்: நம்முடைய ஆட்சியில் தொழில் வளர்ச்சி இல்லாததைப் பெரிய குற்றமாகச் சொல்கிறார்கள், தலைவரே!

இடமதி: புரியாமல் புலம்புகிறார்கள் புல்லர்கள்! தொழில் வளர்ச்சி ஏற்பட்டால் தொழிற்சங்கங்கள் வளரும். தொழிற்சங்கங்கள் வளர்ந்தால் வேலை நிறுத்தங்கள் அதிகரிக்கும். வேலைநிறுத்தங்கள் அதிகமானால் உற்பத்தி பாதிக்கப்படும். நாட்டின் தொழில் உற்பத்தி பாதிக்கப்பட அனுமதிக்கலாமா? அதனால்தான் தீர்க்கதரிசனத்துடன் நம் தலைவர் தொழில் வளர்ச்சியில் கவனம் செலுத்தாமல் இருந்திருக்கிறார்!

— வி. முத்துசாமி, தூத்துக்குடி.

(இடமதி மேடையில்)

"இவர்கள் என்னமோ தண்டி யாத்திரையை மறுமுறை நடத்திக் காட்டிவிட்டதாக இத்தனை பெருமைப்படுகிறார்களே... எங்கள் கட்சி மத்தியில் ஆட்சியில் இருந்திருந்தால் நாங்கள் ஜாலியன்வாலா பாக்கையே மறுபடியும் நடத்திக் காட்டியிருக்க மாட்டோமா...!"

— எஸ். கிருஷ்ணன், நான்தெத் (மகாராஷ்டிரா).



காவிரியை நம்பித்தான்

"ஒரு முறை நான் அமெரிக்காவிலிருந்து இந்தியா வந்திறங்கிய போது, விமான நிலையத்தில் ஏகப்பட்ட கூட்டம். விசாரித்த போது ராஜ ராஜ சோழன் சிலை திறக்கப் பிரதமர் இந்திரா காந்தி தமிழகம் வரப் போகிறார். அதனால்தான் கூட்டம் என்று சொன்னார்கள்... அடுத்த முறை நான் தாய் நாடு வந்திறங்கிய போது அதே மாதிரிக் கூட்டம்; இம்முறை எம்.ஜி.ஆர்., பாரதி சிலை திறப்பு விழாவுக்காகத் தில்லி சென்று கொண்டிருக்கிறார் என்றார்கள். மூன்றாவது முறையாக நான் வந்த போது மீண்டும் கூட்டம்...! கத்திப்பாரா சந்திப்பில் நேரு சிலை திறக்க ராஜீவ் காந்தி வருகிறார் என்று செய்தி கிடைத்தது! இப்படிப் பழைய பெருமைகளில் குளிர் காய்ந்து கொண்டிருக்கிறோமேயொழிய நாம் நமது நாட்டு முன்னேற்றத்துக்கு விஞ்ஞான பூர்வமாகச் சிந்தித்து, திட்டமிட்டு எதையும் செய்யவில்லையே...." என்று வருத்தத்துடன் கூறினார் டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி.

நம்மில் பலரும் உணர்ந்து, பேசி, எழுதி வரும் குறைதான் இது. ஆனால் டாக்டர்



உதயமூர்த்தி, பேசுவதுடன் நிறுத்திக் கொள்ளாமல் 'களத்திலும் இறங்கியுள்ளார்' என்பதுதான் மகிழ்ச்சிக்கும் பாராட்டுக்கும் உரிய விஷயம்:

'தஞ்சை மாவட்டத்தில் பட்டினிச் சாவு' என்ற செய்தியைப் படித்து அதிர்ந்தவர், உடனே பாதிக்கப்பட்ட பகுதிக்குச் சென்று பார்த்திருக்கிறார். அங்கு இரண்டு நாட்களாக மழை பெய்திருந்ததால் நாற்று நடவுப் பணிகள் தொடங்கியிருந்தன; பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வேலை கிடைத்து நிலைமை சிறிது சீரடைந்திருந்தது.

ஆனால் டாக்டர் உதயமூர்த்தியின் மனம் அமைதியடையவில்லை. தமது சொந்த ஊரான மயிலாடுதுறைக்குச் சென்றார். அங்கு தமக்குத் தெரிந்த ஊர்ப் பெரியவர்களை அழைத்தார். 'இந்தியாவின் நெற்களஞ்சியமான நமது மாவட்டத்தில் இப்படி பட்டினிச் சாவு நிகழ, நாம் பார்த்துக் கொண்டிருப்பதா....? உடனடியாக ஏதேனும் செய்ய வேண்டாமா' என்று பேசினார்.

"என்ன செய்வது தம்பி! காவேரியில் தண்ணீர் வரவில்லை. குறுவைச் சாகுபடி செய்ய முடியவில்லை..." என்று ஒட்டு மொத்தமாக எல்லாப் பண்ணையார்களும் சொன்ன போது அவர்களது சிந்தனையைத் தூண்டிவிட்டு நிமிர்ந்து உட்காரச் செய்தார் உதயமூர்த்தி.

"காவேரி நதி நீர் தாராளமாகக் கிடைத்த காலத்தில் நீங்கள் எல்லோரும் என்ன செய்தீர்கள் ...? வாய்க்காலில் தண்ணீர் வந்ததும் காலால் மண்ணை இடறி மடையைத் திறந்து விட்டு விட்டுத் திண்ணையில் போய் உட்கார்ந்து கொண்டீர்கள். பூமி விளைந்தது; உங்களுக்கு வளம் கொழித்தது. அந்த வளத்தையெல்லாம் பலன் தரும் முறையில் தொழில்களில் முதலீடு செய்தீர்களா...? அதுதான் இல்லை! சினிமா தியேட்டர்கள் கட்டுவதைத் தவிர வேறெந்த புது முயற்சியும் செய்யப்படவில்லை. அதனால்தான் இப்போது தண்ணீர் பற்றாக்குறையாக உள்ள போது நாம் தவிக்க வேண்டியிருக்கிறது; பட்டினிச் சாவு போன்ற அவலங்கள் நிகழ்கின்றன." என்றார்.

'சரி, அதற்கு நாம் இப்போது என்ன செய்ய...?" என்று சந்தேகத்துடன் இழுத்தனர் கூடியிருந்த சுமார் முப்பது பெரிய மனிதர்களும். உரையாடல் தொடர்ந்தது.

"தஞ்சை மாவட்ட வளர்ச்சித் திட்ட கருத்தரங்கு ஒன்று நடத்துவோம்.."

"ஏற்கெனவே அரசாங்கத்தின் மாவட்ட வளர்ச்சி கவுன்சில்கள் இருக்கின்றனவே..."

"அரசாங்கம் வந்து நமக்கு உதவ வேண்டும், முதல் முயற்சியை எடுக்க வேண்டும் என்று காத்திருந்தால் எதுவும் நடக்காது. அரசாங்க அதிகாரிகள் சம்பளத்துக்காக உழைக்கும் ஊழியர்கள். நமது மாவட்டத்திடம் நமக்கு இல்லாத அக்கறை அவர்களுக்கு வந்து விடாது!"

. . . .

'உங்களில் ஒவ்வொருவரும் உங்களுக்குத் தெரிந்த பத்து தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு அழைப்பு விடுங்கள். அவர்களை இங்கு வரவழைத்து நமது மாவட்ட வளர்ச்சித் திட்ட கருத்தரங்கு ஒன்றை நடத்துவோம்."

எவ்வளவு பணம் செலவழிப்பது என்

தஞ்சை வாழவேண்டுமா?



காவிரியை நம்பித்தான்...?

பதில் தொடங்கிப் பல விஷயங்களிலும் எழுந்த கருத்து வேற்றுமைகளை எல்லாம் வென்று மயிலாடுதுறையில் கடந்த ஜனவரி 2, 3 தேதிகளில் கருத்தரங்கு நடந்தது.

பெரிய செல்வந்தர்களான தஞ்சை விவசாயிகள் சுமார் முந்நூறு பேர் மயிலாடுதுறையில் கூடினர். ஒரு பகுதியினர் இரண்டு நாட்களுக்கு அந்தச் சிறிய நகரின் ஒரு சில எளிய ஓட்டல் அறைகளில் தங்கினர். மற்றவர்கள் உள்ளூர் பெரிய மனிதர்கள் வீட்டில் விருந்தாளிகளாக ஏற்கப்பட்டனர். தலைக்கு ஐம்பது ரூபாய் நுழைவுக் கட்டணம் செலுத்திக் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

1. காவிரி நீர்ப் பிரச்னை, கங்கை காவிரி இணைப்பு, ஏனைய நீர் நிலைத் திட்டங்கள்;

2. தஞ்சையைத் தொழில் மயமாக்கும், நடுத்தர, கனரகத் தொழில்களை நிறுவும் வாய்ப்புக்கள்.


3. கிராம அபிவிருத்திக்கும் கிராம மக்கள் (குறிப்பாகப் பெண்கள்) வேலை வாய்ப்புக்கும் உதவும் சிறு தொழில் திட்டங்கள்.

ஆகியவை குறித்துக் கலந்து பேசி, ஆலோசித்தனர். தாங்கள் எடுக்கும் முடிவுகளை நடைமுறைப்படுத்தவும் தங்களுக்காக உரிய இடங்களில் குரல் எழுப்பவும், திறவாத அறைக் கதவுகளைத் தொடர்ந்து தட்டித் திறக்கச் செய்யவும் ஒரு பிரதிநிதியை (lobbyist) நியமித்தனர். மீண்டும் சந்தித்து, திட்டங்களைச் செயல்படுத்த என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று தீர்மானிக்கும் உறுதியுடன் பிரிந்தனர்.

ஏப்ரல் இரண்டாம் வாரத்தில் கூடவிருக்கும் தஞ்சை மாவட்ட வளர்ச்சித் திட்ட கருத்தரங்கின் இரண்டாவது கூட்டத்துக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த அதன் அமைப்பாளர் டாக்டர் உதயமூர்த்தியிடம் கேட்டோம்: "உங்கள் திட்டங்களைப் பற்றி இன்னும் கொஞ்சம் விரிவாகச் சொல்ல முடியுமா?"

"அதையெல்லாம் வெளியிட்டால், அரசியல் கட்சித் தலைவர்கள் தங்கள் தேர்தல் வாக்குறுதிப் பட்டியலில் சேர்த்துக் கொண்டு அதைத் தங்கள் யோசனையாகவே காட்டிக் கொள்வார்கள். அதனால் அதற்கென்று ஒரு பத்திரிகையாளர் கூட்டம் நடத்தி அதில்தான் விவரங்களை வெளியிடுவோம்" என்றார் அவர்!

சந்திப்பு: சீதா ரவி



சுப்புடு பார்வையில் தில்லித் தமிழர்கள்

தியாகராஜ சுவாமிகள், அடாணாவில் ஒரு கீர்த்தனை இயற்றியிருக்கிறார். அதில் ஒரு வரி வருகிறது. அதாவது —

"பாலகநக மய சேலஸேஜனபரிபால..!"

அர்த்தம் புரியாமல் நமது வித்வான்கள் பாடும்போது நான் யோசனை செய்தது உண்டு. 'ராமனை வர்ணிக்கும் இந்தப் பாட்டில் சேலத்து நன்மக்கள் எங்கு வந்தார்கள்?' என்று!

இப்போது புரிகிறது! தில்லித் தமிழர் ஜனத்தொகையில் சுமார் நான்கு லட்சம் பேர் சேலத்து ஜனம்தான்! அவர்களைப் பரிபாலிக்க வேண்டியவனும் சாட்சாத் அந்த ராமன்தான். ஏனெனில் அரசோ வேறு சமூகப் பார்வையுடைய நிறுவனங்களோ, அவர்கள் பக்கம் தங்கள் கவனத்தைத் திருப்புவதாகத் தெரியவில்லை.

இருபது இருபத்திரண்டு வருடங்களுக்கு முன் சேலம் மாவட்டத்தில் ஏற்பட்ட வறட்சியின் காரணமாக இங்கு வந்து குடியேறிய இவர்கள், இங்கேயே நிரந்தரமாகி, வீடுகளும் கட்டிக் கொண்டு இருக்கிறார்கள். இவர்கள் தில்லியில் போகாத இடமில்லை. இவர்களின் உழைப்பைப் பயன்படுத்திக் கொள்ளாத துறை இல்லை. ஆனால் துர்பாக்ய வசமாக அவர்களில் பெரும்பாலோர் குடிப் பழக்கத்திற்கு அடிமையாகி விட்டார்கள்.

தலைநகரில் நடத்தப்படும் பல தமிழ்ப் பள்ளிகளில் இவர்களுக்கு இடஒதுக்கீடு கொடுத்திருந்தும் அதைப் பயன்படுத்திக் கொள்வதில்லை. இவர்களில் சிலர் கள்ளச் சாராயம் காய்ச்சுவதில் நிபுணர்களாகி அதையே ஒரு வியாபாரமாகவும் நடத்தி வருகிறார்கள் என்பதும் வருந்தத்தக்க விஷயம்.

இதற்கு நேர்மாறாக, இவர்களைவிட மோசமான நிலையில் பாகிஸ்தானிலிருந்து வந்த பஞ்சாபியர் ஊக்கத்துடன் தொழில் செய்து சீரும் சிறப்புமாய் இருக்கிறார்கள் என்பதைக் கவனிக்க வேண்டும். குறை சொல்வதே சுப்புடுவுக்குக் காரியம் என்று எண்ணக் கூடாது. நன்நோக்குடன் செய்யப்படும் விமர்சனமாக எடுத்துக் கொள்ள வேண்டும். இவர்கள் நிலைமையை அனுதாபத்துடன் புரிந்து கொண்டு அறிவுரைகள் வழங்கி, கைகொடுத்துத் தூக்கிவிட ஓர் இயக்கம் தேவை. அதை ஏன் வசதியாக வாழும் தில்லி தமிழர்களோ — படித்த இளைஞர்களோ — செய்யக்கூடாது?

இன்னொன்று கேட்டால் மேலும் வருத்தப்படுவீர்கள். தில்லியில் இருக்கும் முக்கால் வாசிப் பிச்சைக்காரர்கள் தமிழர்கள்தான். இந்தத் தொழிலிலேயே அவர்களுக்கு உண்டு. உறங்கப் போதிய ஊதியம் கிடைத்து விடுகிறது. பிச்சை எடுத்தே பிள்ளையைப் படிக்க வைத்து உத்தியோகத்தில் அவன் அமர்வதைப் பார்த்து விட்டவர்களும் உண்டு! இவர்களுடைய மேம்பாட்டிற்கும் மேல் மட்டத்திலிருக்கும் எந்தத் தமிழ் ஸ்தாபனமும் சமூக நலத் திட்டங்கள் வகுக்காதது மேலும் வருத்தத்திற்குரிய விஷயம்.

தில்லி தமிழர்களை ஐம்பது வருடங்களுக்கு முன் **'Tins and Tans'** என்றுதான் சொல்லி வந்தார்கள். அதாவது திருநெல்வேலி — தஞ்சாவூர். **Tin** கள்தான் முதலில் வந்தனர். அதனையடுத்து, சிவராமசுப்பிரமணியன், கணபதி சங்கரன், கோமதி ராமஸ்வாமி என்ற தஞ்சைப் புள்ளிகளின் படையெடுப்பு நடந்தது.

ரொம்பவும் முதுமையான கர்நாடக சங்கீத சபையில் பணியாற்ற வந்த இசை வல்லுனர்கள் எல்லாம் அந்தப் பகுதியிலிருந்துதான் வந்தார்கள். அதே போன்று பழமையான தென்னிந்தியச் சங்கமும் இவர்களின் ஆதிக்கத்தில்தான் இருந்தது.

தமிழர்கள் நல்ல நிலையிலிருந்தும் அவர்களுக்கு என ஒரு சொந்தக் கட்டடத்தை நிர்மாணம் செய்ய வெகு நாட்கள் வரை முயற்சி செய்யவில்லை. இதற்கு மாறாக இதர மாகாணத்தவர்கள் சத்திரங்கள் கட்டி, அவர்கள் மாநிலங்களிலிருந்து யார் புதிதாகத் தில்லிக்கு வந்தாலும் மூன்று நாட்கள் இலவசமாகத் தங்க ஏற்பாடு செய்கிறார்கள்.

வெகு நாட்கள் கழித்துத்தான் தென்னிந்

தியச் சங்கம் ஒரு கட்டடத்தையும் ஓர் அரங்கையும் உருவாக்கியது. அரங்கத்தின் பெயர் சத்தியமூர்த்தி அரங்கம். தில்லியின் கலை அரங்குகளுக்கு ஏக டிமாண்ட் இருந்தும் இந்த அரங்கிற்கு யாரும் வருவதில்லை. காரணம் அந்த அரங்கத்தில் சென்று உட்கார்ந்தால், எழுந்திருக்க முடியாது; எழுந்திருந்தால் வெளியே வர முடியாது. அதைப் பற்றி யாரும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை!

முன்பு ஒரு காலத்தில் அங்கு ஒய். ஜி. பி., ராஜு, ஜெகந்நாதன் போன்ற நபர்கள் நிறைய நாடகம் போட்டார்கள். அதெல்லாம் பழைய கதை. இப்போது அங்கு ஓரளவு விளையாட்டுப் போட்டிகள் நடக்கின்றன. கச்சேரிகளும் நடக்கின்றன. அதாவது சீட்டுக் கச்சேரி!

தில்லி தமிழர்கள் ஆறு பள்ளிக்கூடங்கள் நடத்துகிறார்கள். இவை மத்தியதர வர்க்கத் தமிழ் அதிகாரிகளால் உருவாக்கப் பட்டவை. பெரிய பதவி வகிக்கும் தமிழர்கள் இவற்றின் பக்கம் தலைவைத்துக் கூடப் படுப்பதில்லை. அவர்கள் தம் குழந்தைகளை மேல் மட்டப் பள்ளிகளுக்குத்தான் அனுப்புகிறார்கள்.

அவர்கள் மனம் வைத்திருந்தால், ஆறு தமிழ்க் கல்லூரிகளே உருவாகியிருக்கும். இத்தனைக்கும் இங்கு போதனா முறை ஒன்றும் சோடை போனதாகக் கருத முடியாது. லோடி ரோடு பள்ளிக்கூடத்தில் நுழைந்தால் ஒரு பெரிய பலகையில் இதுவரை ஐ. ஏ. எஸ். தேறிய மாணவர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டிருக்கும்.

ஆனால் ஒன்று. இங்கு படிப்போடு சரி. விளையாட்டுகளிலோ, இதர கலைநிகழ்ச்சிகளிலோ இந்தப் பள்ளிக்கூடங்கள் ஈடுபடுவதில்லை. வருடா வருடம் நடக்கும் குடியரசு தினக் கலைநிகழ்ச்சிகளில்கூட இந்தப் பள்ளி மாணவர்களை ஈடுபடுத்துவதில்லை. எப்படியாவது தேறி உத்தியோகத்தில் அமர்ந்து சம்பாதிப்பதுதான் குறிக்கோளாக இருக்கிறது. இதுவும் ஒரு வருந்தத்தக்க விஷயம்தான்.

சேலத்துக்காரர்களைப் பற்றி நான் கூறியது எல்லாத் தமிழர்களுக்கும் பொருந்தாது. திருநெல்வேலி, இராமனாதபுரம், மதுரை முதலிய பகுதிகளிலிருந்து வந்திருக்கும் தமிழர்கள் பலர், வியாபாரத்தில் ஈடுபட்டுச் செழிப்பாக இருக்கிறார்கள். விரிந்து பரந்து கிடக்கும் தில்லியில் ஆங்காங்கு சிறிய பெட்டிக்கடைகளை வைத்த அவர்கள் இப்போது பெரிய பெரிய கடைகளுக்கு முதலாளிகளாக முன்னேறி இருக்கிறார்கள். தமிழ்நாட்டுப் பொருள்கள் எது வேண்டுமானாலும் கிடைக்கும்.

நம் தமிழ்நாட்டு எம். பிக்களுக்கு இங்கு தமிழர்கள் இருப்பதாகவே பிரக்ஞை கிடையாது. ஆறடி அருணா, ஏழடி ஏகாம்பரம் இவர்களுக்கெல்லாம் அவர்களுடைய கட்சி உட்பூசல்களைக் கவனிப்பதற்கே நேரம் சரியாக இருக்கிறது. இவர்கள் மனம் வைத்தால் தில்லி தமிழ் மக்களுக்குக் குறிப்பாகக் கீழ்மட்டத்தில் இருப்பவர்களுக்கு எவ்வளவோ நன்மைகள் செய்யலாம்.

மத்திய சமூகநல இலாகாவிடம் பேசி, இவர்கள் குடியிருக்கும் பகுதிகளில் 'தீய' பழக்கங்கள் பரவாமல் இருக்க அமைப்புகள் ஏற்படுத்தலாம். அவர்களுக்கு ஏது நேரம்? தமிழ்நாடுதான் சந்தி சிரிக்கிறதே!

இதைக் கூறும்போது நான் ஏதோ வடக்கில் லஞ்ச ஊழலே கிடையாது என்று சொல்லவரவில்லை. ஆனால் இங்கே அந்த ஊழலிலும் ஒரு நாணயம். இருக்கிறது; நாக்கு இருக்கிறது. இங்கு லஞ்சம் கொடுத்தால் காரியம் நடக்கும்-ஏப்பமும் விடமாட்டார்கள்; ஏமாற்றவும் மாட்டார்கள்.

தமிழ்நாட்டுக்குச் செல்லும் ரயில்களைப் பற்றிக் கூட நமது எம். பிக்கள் கவனிப்பதில்லை. இன்று ரொம்ப மோசமாக நிர்வகிக்கப்படும் ரயில்கள் கிராண்ட் ட்ரங்கும், தமிழ்நாடு எக்ஸ்பிரஸும்தான். அதுவும் கிராண்ட்ட்ரங்க் மகா ஆபாசம். அசுத்த மயம். கேட்பார் கிடையாது. பாதி நாட்கள் தண்ணீரும் கிடையாது.

ஆலாய்ப் 'பறக்கும்' தமிழ்நாட்டு எம். பிக்களுக்கு ரயில் பயணத்தைப் பற்றி என்ன கவலை? அகமதாபாத்திற்கும், பம்பாய்க்கும் போகும் ரயில்கள் எவ்வளவு சுத்தமாக, குறித்த நேரத்தில் போகின்றன! அதற்குக் காரணம் அந்தத் தொகுதி எம். பிக்கள் சிறு தவறு நேர்ந்தாலும் ரயில் மந்திரி சிந்தியாவைச் சந்திக்கு இழுத்து விடுவார்கள் என்பதுதான்.

தமிழரின் தன்மானம் எந்த அளவில் இருக்கிறது என்பதற்குத் தம்பி தங்கராஜுவின் சமீபத்திய செய்கையே ஓர் எடுத்துக்காட்டு. ஐந்து லட்சம் ரூபாய் கொண்ட சூட்கேஸைச் சபாநாயகரிடம் சமர்ப்பித்ததோடன்றித் தாம் எப்படி போதையில் ஜெயலலிதாவின் வீட்டில் தரிசனம் தந்தார் என்பதையும் அவர் பிரகடனப்படுத்திய போது தமிழரின் தன்மானம் தலைகுப்புறத் தடால் என்று விழுந்துவிட்டது.

இந்தியாவில் ஒவ்வொருவருக்கும் இந்தி தெரிந்திருக்க வேண்டும் என்பது என் கட்சி. ஆனால் அதை அமுல்படுத்தும் முறையில்தான் கோளாறு. ஜனதா ஆட்சி நடந்து

* ஸ்ரீ சங்கரா ஹெல்த் சென்டர் (ராத்தோடா).



கொண்டிருக்கும் போது, இப்போது அத்வானத்தில் இருக்கும் அத்வானியைப் பேட்டி கண்டேன்.

அப்போது அவர் தகவல் — ஒலிபரப்பு இலாகாவில் மந்திரி. நான் அவரிடம் சொன்னேன்: ''டில்லியில் இந்திக்காரர்களைவிட இந்தியில் திறமை வாய்ந்த சகலகலா வல்லுனர்களான தென்னிந்தியர்கள் இருக்கின்றார்களே அவர்களுக்கு வேலை வாய்ப்புத் தர என்ன ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்? என்று. ''உங்கள் இலாகாவிலேயே அறிவிப்பாளர்கள், செய்தி வாசிப்பவர்கள் எல்லாம் உல்ட்டாப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாகத்தானே இருக்கிறார்கள். இது முறையா? இது அடுக்குமா? இந்தி படித்து என்ன பயன்?'' என்று கேட்டேன்.

''ஓ! இது நல்ல யோசனை!'' என்று அவர் வாயளவில் கூறினாரேயொழிய நடைமுறையில் எதுவும் செய்யவில்லை.

இப்போதும் ஒன்றும் வாழவில்லை. இந்த விஷயத்தில் தமிழர்கள் பெருமளவு புறக்கணிக்கப்படுகிறார்கள் என்றே சொல்ல வேண்டும். நமது தமிழ் நாட்டு எம். பி. களுக்கு இந்த அம்சத்தைப் பற்றித் துளியாவது பிரக்ஞை இருந்தால் இதற்கு நிவாரணம் தேடியிருக்கலாம். ஒன்று மட்டும் சொல்லுகிறேன்; மரியாதையைக் கேட்டு வாங்க முடியாது. தமிழனுக்கு விழிப்புணர்ச்சி ஏற்பட வேண்டும். தன் உரிமைக்காகப் போராட வேண்டும். அது நம் கையில்தான் இருக்கிறது.

எப்போதுமே பாதி தம்ளர் பாலை 'பாதி தம்ளர் காலி' என்றே விமர்சித்துப் பழக்கப்பட்ட எனக்கு ஒரு மாறுதலுக்காக இந்தக் கட்டுரையிலாவது ஒரு நல்ல அம்சத்தைச் சொல்லி முடிக்கலாமே என்று எண்ணம்.

காஞ்சிப் பெரியவர்கள் சில வருடங்களுக்கு முன் பாத யாத்திரை செய்த போது கடுவாலிலும் மற்றும் மதுராவிலும், ஹரித்துவாரிலும், காசியிலும், சமூக உயர்வுக்காகப் பல நல்ல கைங்கரியங்களைச் செய்து விட்டுப் போயிருக்கிறார்கள். மருத்துவ மனைகள், ஊனமுற்றோருக்குப் பள்ளிக் கூடங்கள் வயோதிகர்களுக்கு இருப்பிடம் ஆகியவை அவை. இந்த அம்சங்களில் சில வற்றைத் டில்லியில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் காஞ்சி காமகோடி சேவா அறக்கட்டளை வெகு சிறப்பாக நடத்தி வருகிறது.

இது தவிர, டில்லித் தமிழ் நாட்டுப் பெண்மணிகள் கடந்த இருபது வருடங்களாகப் பிடி அரிசித் திட்டத்தின் மூலம் ஏழைகளுக்கு உணவு அளித்து வருகிறார்கள். நவராத்திரி பூஜைகள், மாதந்திர பஜனைகள் எல்லாம் வெகு சிரத்தையுடன் நடத்தி வருகிறார்கள்.

காஞ்சி மாமுனிவரால் நிர்மாணிக்கப்பட்ட புதிய காமாட்சி அம்மன் கோவில் டில்லியில் இன்று வெகு பிரசித்தமாகிக் கலை அழகுடன் மிளிர்கிறது.


எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற் போல் ஒரு தனி நபர், எளியவர், பொள்ளாச்சி கணேசன், ஆதரவில்லாமல் இறந்தவர்களுக்கு ஈமக் கடன்களைச் செய்து வருகிறார். இந்தச் சேவை எவ்வளவு மகத்தானது என்று சொல்லத் தேவையில்லை. மேலும் வாரா வாரம் மருத்துவ மனைகளுக்குச் சென்று, நோயாளிகளுக்குக் குங்குமப் பிரசாதமும், ஆத்மாவிற்கு ஆறுதலாகப் பக்திப் பாடல் புத்தகங்களும் வழங்குவது எத்தனை பெரிய தருமம்! கணேசனின் சேவை ஜாதி, மத இன வேறுபாடு இல்லாதது. 'நூறு யாகங்கள் செய்வதைக் காட்டிலும் ஓர் ஈமக் கடனுக்கு உதவி செய்வது சாலவும் சிறந்தது' என்று வேதமே சொல்லுகிறது.

பிக்பாக்கெட்காரன் 1: எவனோ படு பாவிப்பய என்கிட்டேயே பர்ஸைப் பிக்பாக்கெட் அடிச்சுட்டுப் போயிட்டான்!

பிக்பாக்கெட்காரன் 2: அதிலே என்ன வச்சிருந்தே?

பிக்பாக்கெட்காரன் 1: தொழிலுக்குத் தேவையான புது பிளேடு நாலு!





புரோக்கர்: என்னங்க உங்க பையன் தனக்குக் குடிப்பழக்கம் உண்டுன்னு பெண் வீட்டாரிடமே சொல்லிட்டான்!

தந்தை: குடிபோதையில் சொல்லியிருப்பான் நம்பாதீங்க!

— கடுவை. கோபால்சாமி.

எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்:

ஃபைப்ரோஃபிளெக்ஸ்

குவில்ட்

மெத்தைகள், தலையணைகள் மற்றும் குஷன்களின்

சுகத்தை அனுபவியுங்கள்

ஃபைப்ரோஃபிளெக்ஸ்
ஓய்வு
நேரமெல்லாம்
சுகமயமாக்கிட
உங்களுக்கோர்
உறுதுணை
வாழ்நாள்
முழுதும்!



Manufacturers:

BHARAT MOTORS

SALES & ADMINISTRATIVE OFFICE
151, Mount Road, Madras-600 002
Phone: 861923/863250/865512
Tlx: 41-6136 BM IN

FACTORY:
Industrial Estate,
Pettai,
Tirunelveli-627 010
Tel: 23622
Tlx: 0433 225 BM IN

DEALERS IN TAMILNADU

MADRAS CITY : ANNA NAGAR : Ruskos, Ph : 613042 • **ANNA NAGAR EAST** : M.A. Varghese & Sons. Ph : 612984 • **BROADWAY** : Ramji Steel Furniture. Ph : 21986 • **CHETPUT** : Nathan Furniture House. Ph : 663962 • **CHROMEPET** : Alankar. Ph : 403972 • **EGMORE** : New Foam Palace. Ph : 566288 • **ROYAPETTAH** : Jaya Bharatham Furniture. Ph : 861384 • A.K.K. Traders. Ph : 843745 • Arasan Engg. Enterprises. Ph : 862020 • TANSI Sales Centre Ph : 862161 • **TAMBARAM** : Alankar. Ph : 403762 • **THOUSAND LIGHTS** : TANSI Sales Centre Ph : 860816

COIMBATORE : TANSI Sales Centre. Ph : 30755 • **CUDDALORE** : Mahalakshmi Traders, 22-A, Car St. • **CUMBUM** : Jeya Coirs. Ph : 466 • **ERODE** : Rani Furnitures. Ph : 78684 • **KARAIKUDI** : Saravana Associates, 116, Kallukatti West • **KUMBAKONAM** : Mathivanan & Co., Ph : 21311 • Lakshmi Furnitures, Ph : 20591 • TANSI Sales Centre Ph : 21605 • **MADURAI** : Joy Enterprises. Ph : 25558 • AR. AS. & PV. PV. Ph : 25231 • Raja Furniture, 12, West Avanimoola St. TANSI Sales Centre Ph : 43832 • **MANNARGUDI** : Royal Furniture Mart, 19, Municipal Bldg. VOC Road. • **MYLADUTHURAI** : K.V.S. & CO. Ph : 2785 • Maruti Rexine Centre, 112-A, First Floor, No. 2, Road. (Near Sundaram Theatre) • **NAGAPATTINAM** : Kaleeswari Enterprises. Ph : 744 • **NAGERCOIL** : Santhosh Agencies. Ph : 3216 • **NAMAKKAL** : Nirmal Enterprises. Ph : 2932 PP • **OOTY** : Meena Enterprises, 10, Municipal Buildings, MS Lane, Upper Bazaar Road. • **PARAMAKUDI** : M.S.K. Traders, 5/209-B, Shoukathali St. • **POLLACHI** : Sri Sakthi Agencies, Ph : 5096 • **SALEM** : Gupta Furnitures, Ph : 62065 • **SATHYAMANGALAM** : P.N.N. Enterprises, 388-D, Bazaar Main Road. • **THANJAVUR** : Vinoth Agencies, 1647, South Main St. • Sri Devi Agencies 1514, South Rampart. Opp : Thiruvalluvar Theatre • **TIRUNELVELI** : AR. AS. & PV. PV. Ph : 24541-3 • TANSI Sales Centre Ph : 23880 • **TIRUVANNAMALAI** : Jai & Co., Ph : 2988 • **TRICHY** : Jyothi Furnitures. • Ph : 26523 • **TUTICORIN** : Sathya Agencies, Ph : 20161 • **VELLORE** : Sabari Agencies, Shop : 2, Kartik Building, Near Sathuvachari Bus Stop. • **VILLUPURAM** : Siva Steel House, 172, Nehruji Road. • **VIRUDUNAGAR** : Raja Furniture, Ph : 4873 • Jebam Enterprises, Ramamoorthy Road.

PONDICHERRY : Home Decors. Ph : 4616 • Sundaram & Co., Ph : 4310 • Vinod Steel Agencies. Ph : 3168.

adsindia

தில்லிக்கு வந்து சேரும் இளம் தமிழர்கள்

அனைத்திந்திய அளவில் ஐ. ஏ. எஸ். தேர்வில் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் அதிகம் பேர் வராமல் போனாலும், அனைத்திந்திய அளவில் யு. டி. சி., எல். டி. சி. என்கிற குமாஸ்தா வேலைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுபவர்களின் பட்டியலில் தமிழ்நாட்டு ராமச்சந்திரன்களும், கற்பகங்களும் கணிசமாகவே இருக்கிறார்கள். ஆமாம்! ஆண்டுக்குச் சுமார் ஆயிரத்து எழுநூறு பேர் அப்படித் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

இப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டுத் தில்லிக்கு வருகிற பலர் மத்தியதரக் குடும்பத்துப் பெண்களும், ஆண்களும்தான். இவர்களுக்கு முதல் பிரச்னை தங்க இடம்.

முதலில் உறவுக்காரர்கள், ஊர்க்காரர்கள், நண்பர்கள், என்று யாராவது இருந்தால் அவர்களுடன் தங்கிச் சில காலத்தை ஓட்டுவார்கள். அங்கிருந்து கொண்டே ஜாகை பார்க்கிற படலம் ஆரம்பமாகும். பெண்களுக்கென்று சில ஹாஸ்டல்கள் இருக்கின்றன. சிலவற்றில் தானே சமைத்துச் சாப்பிட வசதி இருக்கும். சிலவற்றில் மெஸ் வசதி இருக்கும். ஆண்களுக்கு மாத வாடகைக்கு ஹோட்டல் ரூம்கள் கிடைத்தாலும், பெரும்பாலானவர்கள் ஒரு சில மாதங்கள் மட்டுமே இந்த வசதியைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். பிறகு ஆண்கள், நான்கைந்து பேராகச் சேர்ந்து, ஒரு ஃப்ளாட்டையோ, வீட்டையோ வாடகைக்கு எடுத்துக் கொண்டு விடுகிறார்கள். சில வீடுகளில் ஏழெட்டுப் பேர் வரை தங்குவதும் உண்டு. இதேபோல் ஐந்தாறு பெண்கள் ஒன்றாய்ச் சேர்ந்து ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொள்வதும் உண்டு.

ஆண்கள் கூட நாளடைவில் சமையல் கற்றுக் கொண்டு விடுகிறார்கள். சேர்ந்து வசிக்கும் பெண்களுக்குச் சாப்பாட்டுப் பிரச்னையில்லையென்றாலும், பாதுகாப்பு ஒரு பிரச்னையே.

இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்களுக்கு இந்தியைச் சொல்லித் தந்துவிட்டுத்தான் மறுவேலை என முழு மூச்சுடன் மத்திய அரசின் ஓர் இலாகா இயங்குகிறது. அதன் உபயத்தில் ஆபீஸ் நேரத்திலேயே இந்தி கற்றுப் பாஸ் செய்ததும் போனஸ் போல ஓர் ஊக்கத் தொகை கிடைக்கிறது. பணத்துக்கு ஆசைப்படாவிட்டாலும், அவசியத்தை உணர்ந்து நம் ஊர் இளைஞர்கள் இந்தி வகுப்புக்குப் போகிறார்கள்; நாளடைவில் சக இந்திக்காரர்களே, ஆச்சரியப்படுமளவுக்கு இந்தியில் பேசுகிறார்கள். தவிர, தமிழ்நாட்டுக்காரன் என்றால், 'சின்சியராய் உழைப்பான்; அவன் இங்கிலீஷில் ஸ்டிராங்' என்பதும் தில்லி வாழ் தமிழரல்லாதோரின் பொதுவான அபிப்பிராயம்.

தில்லியின் கடுங்குளிரும், கடும் வெயிலும் பிரச்னைதான். வெயிலையாவது சமாளித்து விடலாம். குளிர் காலத்தில் ரொம்பக் கஷ்டம். நாலைந்து பேராய்ச் சேர்ந்து வசிக்கும் போது மின்சார ஹீட்டர், மிக்ஸி, அயர்ன் பாக்ஸ் போன்றவற்றைப் பொதுவாக வாங்கி வைத்துக் கொண்டு பயன்படுத்துகிறார்கள்.

தில்லியில் மாலை நேரங்களில் பலவிதமான வகுப்புகள் நடக்கின்றன. தமிழ் இளைஞர்கள் பலர் இந்த வகுப்புகளுள் ஏதாவது ஒன்றில் சேர்ந்து, தங்கள் கல்வித் தகுதியை அதிகரித்துக் கொள்கிறார்கள். டிகிரிகூட முடிக்காமல், தில்லிக்கு வந்து வேலையில் சேர்ந்தபின், டிப்ளமாக்களும் டபுள் எம். ஏ.வும், வாங்கினவர்கள் பலர்.

இவர்களுக்குத் தமிழ் ஆர்வமும் குறைந்துவிடவில்லை. எட்டுப் பேர் சேர்ந்து ஓர் இலக்கியக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்துவிடுகிறார்கள்; கவிதைகள், கதைகள் எழுதுகிறார்கள்; கையெழுத்துப் பத்திரிகைகள் நடத்துகிறார்கள். இளங்குருத்து, அருவி, இளைய பாரதம், உதயம் ஆகிய கையெழுத்துப் பத்திரிகைகளில் எழுதப்படும் கட்டுரைகளிலும், கவிதைகள், கதைகளிலும் சமுதாயப் பார்வை இருக்கிறது. அநீதியை எதிர்க்கும் ஆவேசம் இருக்கிறது. தில்லி இளைஞர்களிடையே ஆன்மீகப் பார்வையும் பகுத்தறிவுப் பாசறைகளும் உண்டு. ஆனால் மோதல் இல்லை.

தில்லிக்கு வந்து சேரும் இளைஞர்களிடையிலும் பெண்களிடையிலும் காதல் மலர்ந்து கல்யாணத்தில் முடிகிற சம்பவங்களும் அடிக்கடி நிகழ்வனதாம். "வாட் ஈஸ் ராங் இன் திஸ்?" என்று அழுத்தமாய்க் கேட்டார் இன்னும் திருமணமாகாத தில்லி வாழ் இளம் பெண் ஒருவர். அவர் கேட்டதில் தவறென்ன?

● டில்லியில் தனியாக இருந்து வேலை பார்க்கும் மகளிர்...





பிரபாகரன்
ரூ 50,00,00
கொள்ளையடிக்கிறதை நிறுத்தறதுக்கு ஈடாக லட்சம் லட்சமா கொட்டிக் கொடுத்தேனே!.. என்னை ஏமாத்திட்டியே!.. இது தர்மமா? நியாயமா?
காங்கிரசுக்கு இவரை போடுங்கள்!
மறைமலை நகர் காங்கிரஸ் சர்க்கல்
அவர் செத்தே போகல்லே! இதுலே ஏதோ மர்மம் இருக்கு! கண்டு பிடிக்காமெ விட மாட்டேன்!
ரொம்ப சரி!
எம்.ஜி.ஆர் சமாதி
எம்.ஜி.ஆர். மரணத்தில் மர்மம் இருக்கிறது. விசாரணை நடத்த வேண்டும் — ஜெயலலிதா அறிக்கை.



கல்கி

1988 ஏப்ரல் 17
மலர் 46 இதழ் 38
விபவ சித்திரை 5



பிரபாகரனுக்குத் தரப்பட்ட பணம்!

ஓர் உண்மையை வெளியிட்டதன் மூலம், தெரிந்தோ தெரியாமலோ இலங்கையில் உள்ள இந்தியத் தூதர் தீக்ஷித் ஒரு பெரிய நன்மை செய்திருக்கிறார். பிரபாகரன் எவ்வளவு மோசமானவர் என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டுவதாக நினைத்துக் கொண்டு அந்த உண்மையை தீக்ஷித் வெளியிட்டிருக்கலாம். ஆனால் பி. பி. ஸி. யிலும் லண்டன் அப்ஸர்வரிலும் முதலில் வெளியான அந்தச் செய்தி, ராஜீவ் காந்தியை ராஜதந்திரமற்றவராகவும் அரசியலின் அடிப்படைகளைக் கூட அறியாதவராகவும் உலகுக்கு உணர்த்துவதில் மாபெரும் வெற்றி பெற்றிருக்கிறது. இதன் விளைவாக தீக்ஷித்தின் எதிர்காலம் ஏ. பி. வெங்கடேசுவரனுடையது போல் பாதிக்கப்படலாம்; ஆனால் இந்திய ஜனநாயகம் பலம் பெறுகிறது: இங்கு மக்களிடமிருந்து எதையும் மறைக்க முடியாது; கூடாது என்பது உறுதிப்படுகிறது.

இந்தியா — இலங்கை ஒப்பந்தத்தை ஏற்கப் பிரபாகரனுக்கு இந்திய அரசு பணம் தந்தது, லஞ்சம் கொடுத்தது என்பதுதான் அந்தச் செய்தி. இப்போது இந்திய அரசு இதனை மறுத்து, விளக்கம் அளித்திருக்கிறது. அதாவது, பிரபாகரனுக்கு மாதா மாதம் ஐம்பது லட்சம் ரூபாய் தருவதாக ஒப்புக் கொள்ளப்பட்டதும் முதல் தவணையாக ஐம்பது லட்சம் தரப்பட்டதும் உண்மை; ஆனால் இது, இந்தியா — இலங்கை ஒப்பந்தத்தை அவர் ஏற்க வேண்டும் என்பதற்காகத் தரப்பட்ட லஞ்சம் அல்ல; பிரபாகரன் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் வரி வசூலித்து வந்தார்; அதைக் கொண்டு தமது விடுதலைப் புலிகள் படையைப் பராமரித்து வந்தார்; இந்தியா — இலங்கை ஒப்பந்தத்துக்கு ஆதரவு தரும் பட்சத்தில் பிரபாகரன் இந்த வரி வசூல் உரிமையை இழப்பார்; அந்த நஷ்டத்தை ஈடுகட்டவும் படைகளின் பராமரிப்புக்குத் தாற்காலிகமாக உதவவும் இந்தியா மாதா மாதம் பணம் தருவதாக ஒப்புக் கொண்டது; இது இலங்கை அரசுக்கும் தெரியும்; ஆனால் பிரபாகரன் ஏமாற்றி விட்டார்; இந்தியா — இலங்கை ஒப்பந்தத்துக்கு ஆதரவு தருவதாகச் சொன்னவர், வாக்குத் தவறிவிட்டார்......

விடுதலைப் புலிகளும் உறுதிப்படுத்தியுள்ள இந்த விளக்கமானது, முதலில் வந்த செய்தியைவிடப் பல மடங்கு படுமோசமானது. இந்தியா — இலங்கை ஒப்பந்தத்தை ஒப்புக் கொண்டு கையெழுத்தும் போட ஒரு விலை பேசி, பிரபாகரனும் அதற்குச் சம்மதித்திருந்தால், அதைக் கூட ஏற்றுக் கொள்ளலாம் — 'இலங்கையில் அமைதி திரும்ப இது ஒரு பெரிய தொகை அல்ல' என்று மனத்தைத் தேற்றிக் கொள்ளலாம். அரசின் அந்தச் செலவை வரி செலுத்தும் குடிமகன் சந்தோஷமாகவே ஏற்றுக் கொள்ளக்கூடும்.

ஆனால் பிரபாகரன் எந்த அடிப்படையில் அல்லது எந்த உரிமையில் வரி வசூலித்து வந்தார்? அந்த வரி வசூலை ஈடுசெய்வது எனில் இதுவரை அவர் வரி வசூல் செய்து வந்ததை அரசு நியாயப்படுத்தியதாக அல்லவோ ஆகும்? அவ்வாறெனில் பிரபாகரனின் 'ஆட்சி'யை இந்திய அரசு ஒப்புக் கொண்டு விட்டதாக அல்லவோ கருதப்படும்? 'தனித் தமிழ் ஈழம்' என்ற அடிப்படையையும் இந்திய அரசு ஏற்றுக் கொண்டதாகி விடுமே? இதன் பிறகு இந்தியா — இலங்கை ஒப்பந்தம் என்ற ஒரு சடங்கு எதற்கு? அந்தச் சடங்கின் பின்விளைவாக ஏற்பட்டுள்ள சிக்கல்கள் எல்லாவற்றையும் தவிர்த்திருக்கலாமே?

நாட்டைத் துண்டாடச் சொல்கிற ஓர் இயக்கத்தையும், பயங்கரவாதத்தால் அதைப் பெற நினைக்கிற தலைமையையும் துப்பாக்கி முனையில் வரி வசூல் செய்கிற கொடுமையையும் இந்திய அரசு ஒப்புக் கொண்டு, இழப்பை ஈடுசெய்ய முன்வந்தது என்ற செய்தி இந்தியன் ஒவ்வொருவனுக்கும் தலைகுனிவை ஏற்படுத்துவதாகும். இந்தச் செய்தி வெளியான பிறகு இந்தியா — இலங்கை ஒப்பந்தம் என்பதே செல்லாக் காசாகிவிட்டது. 'உயர் லட்சியத்தை அடையும் மார்க்கம் சரியில்லையெனில் லட்சியத்தை அடையவே முடியாது' என்ற காந்திஜியின் அமுதவாக்கு, தண்டி — வேதாரண்ய யாத்திரைகளை மறுபடி நடத்திக் காட்டுவதாக நாடகமாடுகிறவர்களுக்குத் தெரியாமல் போனதில் அதிசயமில்லை.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.



கலாநிதி: தமிழகத்தின் தனிக்குரல்!

இவர்தான் முதல்வர்:

பத்தாண்டுகளுக்கும் மேலாக மூளைச் சலவை செய்யப்பட்ட தமிழக மக்களுக்குப் புத்துயிர் அளிக்கப்பட வேண்டிய தருணம் இது. கவர்ச்சி அரசியலால் கவரப்பட்டுத் தன்மானம் இழந்து, தலைவர்களின் பின்னால் ஓடியவர்கள் சற்றே நிதானிக்க வேண்டிய சமயம் இது. கோடி, கோடி என்று பேசிக் கொள்ளும் அரசியல்வாதிகளை யெல்லாம் கோடியில் ஒதுக்க வேண்டிய சந்தர்ப்பம் இப்போது வந்துள்ளது.

நாட்டின் நலனுக்கும், தமிழகத்தின் நலனுக்கும் தமிழக மக்களின் உண்மையான மேம்பாட்டுக்கும் உழைப்பவர்கள் யார் என்பதனை மக்கள் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும். கட்சிக்கு மேம்பட்டு, தான் கொண்ட கொள்கையை, அஞ்சாது மக்களுக்காக எடுத்துரைப்பவர் யார் என்பதை ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். அரசியல் ஆதாயங்களுக்காகக் கட்சி மாறுபவர்களையும், பதவிக்காகப் பண்பு கெட்டவர்களையும் வாக்காளர்கள் புறக்கணிக்க வேண்டும்.

இந்தக் கோணத்தில் சிந்தித்துப் பார்த்ததில் என் மனத்தில் தோன்றும் ஒரே தமிழகத்து அரசியல்வாதி டாக்டர் கலாநிதி அவர்களே. தமிழகத்தின் அடுத்த முதல்வராக வருவதற்கான அத்தனை தகுதிகளையும் பெற்றவர் டாக்டர் கலாநிதி. ஏன்? எப்படி?

டாக்டர் கலாநிதி இளைஞர்; படித்தவர்; ஆரோக்கியமானவர். சொந்தத் தொழிலில் நல்ல வருமானம் இருந்தும் அதனைப் பொருட்படுத்தாமல் சேவை மனப்பான்மையுடன் அரசியலில் குதித்தவர். எல்லாத் தரப்பு மக்களிடமும் நல்லவர் என்று பெயர் வாங்கியவர். பெரிய பெரிய கட்சிகள் அனைத்தும் அவரை எதிர்த்துப் போட்டியிடத் தகுந்த வேட்பாளரின்றித் தவிக்க வைக்கும் அளவுக்குச் செல்வாக்கு மிகுந்தவர். நாட்டில் ஏதேதோ அலைகள் எல்லாம் வீசினாலும், தாம் சார்ந்து நின்ற கட்சியுடன் இன்றளவும் தம்மை ஐக்கியப்படுத்திக் கொண்டுள்ளவர். நாடாளுமன்றத்தில் தமிழகத்தின் சார்பாக எல்லாப் பிரச்னைகளுக்கும் தனிக்குரல் கொடுக்கும் தகைமையாளர். தமிழகத்தின் உரிமைக்காக ஆளும் கட்சியினரே குரல் கொடுக்கத் தயக்கம் காட்டிய சந்தர்ப்பங்களில்கூட, எதிர்க்கட்சியினரான டாக்டர் கலாநிதி அவர்கள் குரல் கொடுத்ததை நாடே அறியும்.

டாக்டர் கலாநிதி அவர்களின் பேச்சில் விஷயமிருக்கும். அத்தனை புள்ளி விவரங்களையும் விரிவாகத் தெரிந்து வைத்துக் கொண்டு மட்டுமே அவர் பேசுவார். அவர் மனிதர்களின் உளவியல் அறிந்தவர். டாக்டர் தொழிலில் நேர்மையையும், உயர் பண்பாட்டையும் கடைப்பிடிப்பவர். வசதியற்ற ஏழைகளுக்கு இலவசமாக அவர் மருத்துவம் பார்ப்பவர். நேரம் தவறாத நெறியாளர். அரசியல்வாதி என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் என்றும் எந்தவிதமான பந்தாவும் இல்லாதவர்.

தமிழகத்துக்குத் தற்போது தேவையானவர்கள் நல்லவர்கள்தாம். ஆதாயம் தேட மட்டுமே அரசியலுக்கு வருபவர்களை மக்கள் இனம் கண்டு கொள்ள வேண்டும். பணம், பகட்டு, புகழ்ச்சி வார்த்தைகள், நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகள்; உதட்டிலே புன்னகையோடும் உள்ளத்தில் வஞ்சத்தோடும் உலா வரும் அரசியல் நரிகளை மக்கள் விரட்டியடிக்க வேண்டும். நமக்கு நல்லது நடக்க வேண்டுமானால், நாம் நல்லவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டியது மிகவும் முக்கியம். இளைஞர்களையும், படித்தவர்களையும், பண்புள்ளவர்களையும் சமூக சிந்தனை கொண்டவர்களையும், தொகுதிகளுக்காக உழைத்த தொண்டர்களையும், நாட்டிற்காக வீட்டையும் புறக்கணித்தவர்களையும் தேடிப் பிடித்து நாம் தேர்ந்தெடுக்க வேண்டும். அடக்கமில்லாதவர்களை, கயமையாளரை, இல்லாதவர்களை நாம் தேர்ந்தெடுக்கக் கூடாது. ஜனநாயகம் மிகவும் அழகானது. அதனை அழுக்குப்பட நாம் விட்டுவிடக் கூடாது. சேர்ந்துவிட்ட அழுக்குகளையெல்லாம் நாம் நினைத்தால் களைந்துவிடலாம். வாக்குரிமை நம்மிடம் உள்ளபோது நாம் வாக்குத் தவறியவர்களையெல்லாம் வளர விடலாமா?

தமிழக மக்கள் அனைவரும் சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்த்து, நல்லவர்களை வரவிடுங்கள். அவர்கள் வல்லவர்களாக மாறி அயோக்கியர்களை அழித்து விடுவார்கள். இளைஞர்களிடம் நாட்டைக் கொடுங்கள். அனுபவசாலிகள் வழிகாட்டுங்கள்; தெரிந்தவர்கள் தெரியாதவர்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள். பாதை மாறிப் போன தமிழக மக்களுக்கு மறுபடியும் சீரான பாதை அமைத்துக் காட்டுங்கள். தமிழகமே நாட்டுக்கு முன்னோடியாகத் திகழ வேண்டுமாயின் டாக்டர் கலாநிதி போன்றவரைத் தமிழகத்தின் முதல்வராக்கிப் பாருங்கள்!

— ஐ. கே. ஷாரிஃப், சென்னை – 103.



Godrej
Marvel
மார்வல்-இதம் தரும் தன்மை
காஞ்சிப்பட்டுப் போன்ற மென்மை.


PHILIPS
GRAPHIC EQUALIZER
PHILIPS
HIGH SPEED DUBBING
Wow! Whatta range of
Stereo and Mono Two-in-Ones.
A choice that includes
Graphic Equalizers, Double Decks,
Detachable Speakers and lots more.
Without costing the earth. Yes,
you've got it all.
Now, Go tell the World
You've Got a Philips!
CLARION/B/P/238/194
Philips — the trusted Indian household name for over fifty years

இருள் வரும் நேரம்

சுஜாதா

1



ராத்திரியே பேசி வைத்தாற் போல அத்தனை மரங்களும் காலை பூத்திருந்தன. உடலில் ஓர் இலை இல்லாமல் எதற்காக இந்த மஞ்சள் ஆரவாரம்? எதற்காக உலகுக்குத் தன் வனப்பைத் தெரிவிக்கும் ஆர்வம்?

இந்த வீட்டுக்கு வந்து இரண்டரை வருஷமாச்சு. இந்த மரத்தின் பெயர் கூடத் தெரிந்து வைத்துக் கொள்ளவில்லை.

''ஏ பெயரில்லாத மரமே மார்ச் ஒன்பது புதன்கிழமை காலையைப் பளிச்சென்று எடுத்துச் சொல்லும் மஞ்சள் மரமே உனக்கு வந்தனங்கள்.''

ராம்பிரகாஷ் சன்னல் திரையை முழுவதும் விலக்கி சூரியனை எதிரே படுத்திருந்த அம்ருதாவின் மேல் அனுமதித்தார்.

இதோ இந்த மென்மையான பிரகிருதிக்காக இன்னொரு வந்தனம். அதிகாலைக் கனவிலிருந்து விடைபெற்று வந்து இவள் உதட்டோரம் படிந்திருக்கும் புன்னகைக்காக.

I Sing the body electric!

''அம்ரு அம்ரு எழுந்திரு.''

புன்னகை சற்று விரிந்தது. கைகளை முழங்காலுக்கு இடையில் இடுக்கிக் கொண்டு இன்னும் தன்னைப் பந்தாக்கிக் கொண்டு இன்னும் தூங்கினாள்.

''அம்ரு நல்லாத் தூங்கறயாக்கும். அப்ப நான் கிளம்பி நேரா எம்.டி.ஆர். போயி டிபன் சாப்பிட்டுட்டுக் கபன் பார்க்கில் டென்னிஸ் ஆடிட்டு...''

விருட்டென்று எழுந்து விட்டாள். ''நானு?''

ராம்பிரகாஷ் அவளருகே சென்று படுக்கை விளிம்பில் அசௌகரியமாக உட்கார்ந்து கொண்டு அவள் நெற்றியை, மூக்கை, கன்னத்தை, தாடையை, கழுத்தை வாசனை பார்த்தார்.

பிடித்துத் தள்ளினாள். ''வம்பு வேண்டாம்பா. இந்தச் சமயம்தான் ஆபத்தான வேளை. போன தடவை இந்த மாதிரித்தான் ஆரம்பிச்சு டாக்டர் மஞ்சுஷா வரை கொண்டு விட்டது.''

நைட் கவுனின் ஸாட்டின் மழுப்பலில் அவள் அடையாளங்கள் புரிய, ''அம்ரு ப்ளீஸ்'' என்று இழுத்த போது,

''நோ வே'' என்று அவரது அமெரிக்கத்தனத்தை பரிகசிக்கிற தொனியில் சொன்னாள். ராம்பிரகாஷ் தரையில் மண்டி போட்டுக் கொண்டு ரோமியோ போலக் கெஞ்ச, ''வெக்கமா இல்லை? அமெரிக்காவில் பி. எச்டி. பண்ணின ஓர் ஆசாமி கேவலம் ஒரு செகண்ட் கிளாஸ் பி.எஸ்.ஸி. பாட்டனிகிட்ட தரையில் மண்டி போட்டுக்கிட்டுக் கெஞ்சறதாவது? ஸார் நீங்க படிச்ச படிப்புக்கு மரியாதை கொடுங்க ஸார். என்ன மாமா நீங்க நான் உங்களை விட எவ்வளவு சின்னவ?''

''பாரு. இன்னும் ஒரு முறை என்னை மாமான்னு கூப்ட்ட?''

''மாமோய்...!''

டாக்டர் ராம்பிரகாஷ் தன்னுடைய பி. எச்.டி. டி.லிட்., எல்லாவற்றையும் மறந்து அவள் இடுப்பில் முகம் புதைத்தார்.

காரில் யூனிவர்ஸிட்டி வாசலைக் கடக்கும் போது மறுபடியும் அந்த மஞ்சள் மர ஸோல்ஜர்கள். பெங்களூர் முழுவதுமே செய்தி போயிருக்கிறது... ''இதனால் தெரிவிப்பது என்னவென்றால் பேர் தெரியாத மஞ்சள் மரங்கள் அனைத்தும் புதன் கிழமை காலை பூக்க வேண்டியது...''

டிப்பார்ட்மெண்ட் வாசலில் வர்ஷாவும் பாலசுப்ரமணியனும் காத்திருந்தார்கள். வர்ஷா கதர் முரட்டுக் கமீஸ் அணிந்து ஓர் இம்மியும் மேக் அப் இல்லாமல், ''மார்னிங்

டாக்டர்'' என்ருள்.

''மார்னிங் வர்ஷா, மார்னிங் பாலா. எல்லாரும் வந்தாச்சா?''

''காத்திருக்காங்க டாக்டர்.''

ராம் பிரகாஷ் ஹாலில் நுழைந்த போது இயல்பாக மாணவர்கள் கை தட்டினுர்கள். அஸோஸியேஷன் செக்ரட்ரி மிகுந்த சுய பிரக்ஞையுடன் வீற்றிருக்க, ''ப்ளீஸ் ஸிட்'' என்ருர்.

அத்தனை கண்களும் அவரையே ஆர்வத்துடன் பார்க்க, வர்ஷா மேசைக்கருகில் வந்து பூச்சாடி யை நகர்த்தி, ''ப்ரெண்ட்ஸ்! டாக்டர் ராம்பிரகாஷை அறிமுகப்படுத்தத் தேவையில்லைதான். இருந்தும் ஒரு சம்பிரதாயத்துக்காக, முழுமைக்காக... அவர் கனடா அர்பானுவிலும், அமெரிக்கா ஆர்வர்டிலும் இரண்டு டாக்டரேட் பட்டம் வாங்கினதும் அங்கே அமெரிக்காவில் பல பல்கலைக்கழகங்களில் வாய்ப்புக் கிடைத்தும் அவற்றையெல்லாம் நிராகரித்து விட்டு நம் கடலைக்காய் யூனிவர்ஸிட்டிக்கு வந்து சேர்ந்திருக்கிருர் என்பதில் உள்ள தியாகத்தை நாம் வியக்க வேண்டும்...''

வர்ஷாவை ராம்பிரகாஷ் பக்கவாட்டிலிருந்து பார்த்தார். இளமை என்பதன் பொழிப்புரை, தன்னம்பிக்கை. வார்த்தைகள் கோத்தது போலச் சீராகப் பிரவாகம். எந்தவித அசிங்க அபிநயங்களும் இன்றி இன்றைய தேதிக்கு இவ்வுலகம் என்னுடையது என்று சொல்லும் அழுத்தமான முத்திரைகள்.

''இன்று டாக்டர் ராம்பிரகாஷ் அண்டர் கிராஜுவேட்டுகளிடையே பேசச் சம்மதித்தது நம் பாக்கியம். அவர் பேச்சைத் துவங்கு முன் மாணவர் குழுவின் சார்பில்...''

சந்தன மாலை வாசனையாக இருந்தது. வர்ஷா இயல்பாக அதை அவர் கழுத்தில் அணிவித்துக் கைகுலுக்கும் போது பின் சீட்டுக்கள் சீட்டியில் வெடித்தன. கைதட்டல் ஓய்ந்ததும் ராம்பிரகாஷ் பேசத் துவங்கினுர்:

''என் இனிய மாணவியும் இயல்பான தலைவியும் ஆன வர்ஷா ஷிவ்தசானி, மௌனமான பாலசுப்ரமணியன், மார்னிங் ஷோவைப் புறக்கணித்து விட்டு என்னைக் கேட்க வந்திருக்கும் இளம் நண்பர்களே,



''வர்ஷா சொன்னது போல் நான் இந்தியா வந்ததில் தியாகம் எதுவும் இல்லே. அமெரிக்கா பிடிக்கவில்லே. வந்து விட்டேன். இந்த ''கடலேக்காய்'' பல்கலேக்கழகம் எனக்குக் கொடுக்கும் சம்பளம் போதுமானது. வர்ஷா போன்ற மாணவிகளின் கண்களில் இந்தியாவின் எதிர்காலத்தைப் பார்க்க முடிகிறது என்ருல். பெங்களூரில் வருஷம் தவருமல் மஞ்சள் பூக்கள் பூக்கின்றன. எம்.டி. ஆரில் டிபன் நன்ருக இருக்கிறது. எனக்கு வாய்த்த மனேவி ஓர் அபூர்வமான பிரஜை. என் கார் வழியில் நிற்பதில்லே.... இப்படி எத்தனேயோ காரணங்கள்.''

ராம்பிரகாஷிஞல் மாணவர்கள் அனேவரின் கவனத்தையும் கவர முடிந்தது.. உன்னிடம் விஷயம் இருந்தால் கவனிப்பார்கள்; நிச்சயம் கவனிப்பார்கள் என்று டாக்டர் பவர் அடிக்கடி சொல்வார்.

''குழந்தைகளின் மனேதத்துவத்தை நான் ஆராயத் துவங்கிய போது முதலில் நான் சந்தித்தது ஃப்ராய்டு. அவருக்கு எல்லாமே செக்ஸ்தான். குழந்தைப் பருவம் என்பது ஃப்ராய்டுக்கு ஒரு எக்ஸ் சர்டிபிகேட் திரைப்படம் போல!

''அதன் பின் பியாஜே. அவர் சித்தாந்தத்தின்படி உலகில் உள்ள குழந்தைகள் அனேவரும் தம் குழந்தை போல நடந்து கொள்வார்கள் என்று நம்பினுர். பவுல்பி குழந்தை பிறக்கும் போதே சமூகத்தை வெறுக்கிறது என்ருர். அம்மாவுடன் சேர்ந்து பழகினபின்தான் அதன் முசுடுத்தனம் விலகுகிறதாம்.

''எல்லாருமே என்னேக் கேட்டால் கதை விடுகிருர்கள் என்பேன். குழந்தை பிறந்த அன்று கண் திறந்த அன்று, உலகத்தில் என்ன பார்க்கிறது எப்படிப் பார்க்கிறது என்று சொல்ல முடியுமா ...?''

ராம்பிரகாஷ் நிறுத்திஞர். கிடைத்த மவுனத்தில் வர்ஷாவைப் பார்த்தார். அவள் அவரைத்தான் கவனித்துக் கொண்டிருந்தாள். அவர் பேச்சை அல்ல.

''எப்படிப் போச்சு உங்க லெக்ச்சர்?''

''ஸூப்பர் அம்ரு. நீ வந்திருக்கணும்.''

''எனக்குப் புரியாது. வர்ஷா வந்திருந்



தானா?''

''ஆமா என்ன நீ? வர்ஷாவைக் குறிப்பா விசாரிக்கிறே?''

''நீங்கதானே எப்பவும் அவளைப் பத்திப் பேசுவிங்க, என்னு இண்டெலிஜெண்ட்டு, என்னு கல்சர்டுன்னு...''

''மை ஒய்ஃப் இஸ் ஜெ... லஸ்''

''பொறுமையா எனக்கா? சரிசரி, நான் போன் பண்ணினது வர்ஷா சர்ஷாவுக்காக இல்லே. சாயங்காலம் சீக்கிரம் வந்துடுங்க. ஜயந்த் கல்யாண ரிஸப்ஷன் இருக்கு போகணும்.''

''எங்கே?''

''பசவங்குடி வாசவி கல்யாண மண்டபத்தில்.''

''நீ நேரா அங்கே வந்துருவியா?''

''நோ வ்வே.''

''என்ன அம்ரு, அமெரிக்காவில் எல்லாம் மனைவிங்க எவ்வளவு இண்டிபெண்டண்ட் தெரியுமா?''

''இது இண்டியா. சரியா அஞ்சரைக்கு வீட்டுக்கு வந்துருங்க. லைப்ரரியில் வர்ஷாவுக்குச் சந்தேகம்னு உட்காந்துராதிங்க.''

''மீண்டும் வர்ஷா.''

''அண்ட் ஐம் நாட் ஜெலஸ்''

''திருப்பித் திருப்பிச் சொன்னுலே ஜெலஸ்னு அர்த்தம்.''

''போனை வெச்சுரவா?''

ராம்பிரகாஷ் டெலிபோனை வைத்த பின், தலையை உதறிச் சிரித்துக் கொண்டார். ''மே ஐ கமின் டாக்டர்?''

''எஸ். வர்ஷா, வாட்டிஸிட்?''

''இன்னிக்கு லெக்சர் நல்லாவே இருந்தது. எம்பிரிஸிஸம் பிரேவியரிஸம் இரண்டையும் உதாரணம் காட்டினது... அந்த பிலாசபர் சொன்னிங்களே யார் அது?''

''ஜான் லாக்... கமான் வர்ஷா, யூ நோ எபவுட் லாக்.''

''உங்களைப் பார்த்ததில மறந்து போயிடறது.''

ஒருமுறை அவளை நிமிர்ந்து பார்த்து, ''மிஸ் வர்ஷா ஷிவ்தசானி, யூ ஆர் நாட்டி !''

அவள் புரியாததுபோல் ''பெக் யுவர் பார்டன்?'' என்றாள். சற்று நேரம் அவளையே கண்கொட்டாமல் பார்த்துவிட்டு ராம்பிரகாஷ், ''ஆல்ரைட், எழுதிக்கொள். நேட்டிவிஸம், எம்பிரிஸிஸம்... ஒரு நேட்டிவிஸ்ட்டுக்குக் குழந்தை கருவுற்ற கணத்திலேயே அதன் திறமைகள் குறைகள் யாவுமே தீர்மானிக்கப்பட்டுவிடுகின்றன. எம்பிரிஸிஸ்ட் சொல்வது இதற்கு நேர் எதிரானது. பிறக்கும் போது குழந்தை வெற்றுக் காகிதம்போல. சூழ்நிலையும் அனுபவமும்தான் அதை உருவாக்குகிறது.''

''இதில் எது உண்மை?'' என்றாள் வர்ஷா.

''இரண்டுமே.''

வாசவி வாசலில் மறுபடி அதே மஞ்சள் மலர்கள். அவைகளைப் பட்டயம் போல அட்டையில் பொருத்தி JAYANTHI WEDS REKHA என்று ரோஜா இதழ்களால் நடுவே எழுதி, அதைச் சக்கர விளக்குகள் சுற்றி வந்தன. பதினைந்து வயசுப் பெண்களின் பன்னீர் தெளித்தலைக் கடந்து, மெல்லிசைக்காரர்களின் இரைச்சலின் ஊடே நடந்து, மணமக்களை எய்தி, ராம்பிரகாஷ் கைகுலுக்க, அம்ருதா அந்தப் பக்கம் நிற்க, 'பளிச்' 'பளிச்' ஒரு முழம் விடியோ!

''கட்டாயம் சாப்பிட்டுட்டுப் போங்க டாக்டர்.''

சாப்பிடச் செல்லும்போது, ''ஹாய் டாக்...''

''ஹாய் கோபி! அம்ருதா திஸ் ஈஸ் கோபி. நான் சொல்லிக்கிட்டே இருப்பேனே, அடுத்த எச் ஓடி.''

''மை காட் ஈஸ் திஸ் யுவர் ஒய்ஃப்?''

''ஷி ஈஸ் வெரி யங்.''

''அண்ட் சார்மிங். எப்படி இந்த ராட்சசனைக் கல்யாணம் பண்ணிக்கச் சம்மதிச்சீங்க?''

அம்ருதா, 'இதெல்லாம் போய் ஜோக் அடிக்க வேண்டிய விஷயமா?' என்பது போல ராம்பிரகாஷைப் பார்த்தாள்.

''டை, டை எல்லாம் போட்டு ஏமாத்திட்டேன் கோபி. நீ எங்க வீட்டுக்கு வந்தாகணும். வாசல்ல ஒரு மரம் பூத்திருக்கு மஞ்சளா, அதும் பேரு என்னன்னு சொல்றதுக்காகவாவது வந்தாகணும்.''

''இப்பவே சொல்லிடறேன். மஞ்ச மரம்'' என்று கோபி சிரித்து, ''மிஸஸ் ராம்பிரகாஷ், நான் இத்தனை தூரம் சுதந்திரமா ஜோக் அடிக்கிறது உங்களுக்குப் பிடிக்கலேன்னு தோணுது. தப்பா நெனைச்சுக்காதீங்க. ராம் ஒரு ஜெம். கண்ணுக்கு முன்னால இவனுக்கு வர வேண்டிய போஸ்ட்டை எவனோ ஒரு மூணாந்தரம் கவர்ந்துக்கிட்டுஇருக்கான். கண்டுக்கறதே இல்லே.''

திரும்பும்போது காரில் அம்ருதா, ''என்னைத் தவிர எல்லார்கிட்டேயும் கேக்கறீங்க. அதும்பேரு இண்டியன் லாபர்னம். ஆமா, என்ன போஸ்டிங்? உங்களுக்கு வர வேண்டியதை யாரோ எடுத்துக்கறுங்கன்னுரே அவரு?''

''ஆபீஸ் பாலிடிக்ஸ் அம்ரு. எனக்குக் கொடுக்க வேண்டிய டீன் ஆஃப் ஸ்டடிஸ்ன்னுட்டு ஒரு பதவியைச் சித்தலிங்கப்பான்னு ஜூனியர் ஒருத்தனுக்குக் கொடுக்கறுங்க...''

''உங்களுக்குத்தான் வர்ஷா போதுமே.''

''சே! என்ன பேச்சு அம்ரு! யூ ஆர் நாட் சீரியஸ்?''

உதட்டில் கோபம் துடித்தது. அம்ருதா அவரைச் சற்று நேரம் தீவிரமாகப் பார்த்துவிட்டு, குப்பென்று சிரித்தாள். அவர் முகத்தில் மூக்கால் உரசி, ''ஐயாம் நாட் சீரியஸ்'' என்றாள்.

''இன்னிக்கு ராத்திரி உண்டா?''

''என்னவாம்?''

என்னவென்று சொல்வதற்குமுன் கார் நடுவழியில் நின்று போனது.

(தொடரும்)

இலவசம்!

ஒரு அரிய

உருளும் கிலுகிலுப்பை



முந்துங்கள்! ஸ்டாக் ஓரளவே உள்ளது.

ஸெரிலாக் பிரமோஷனல் டின் ஒவ்வொன்றுடனும்

கொஞ்சுமழகு வர்ணக் கிலுகிலுப்பையுடன் உங்கள் குழந்தை விளையாடுவதைக் கண்டு பரவசமடையுங்கள். இலேசாக தள்ளினால் — தரைமுழுதும் உருண்டோடும் இக் கிலுகிலுப்பை உங்கள் குழந்தையை குதூகலப் படுத்தும். ஒவ்வொரு ஸெரிலாக் பிரமோஷனல் டின்னுடன் இக் கிலுகிலுப்பை இலவசமாக கிடைக்கிறது.

நான்கு மாதங்கள் ஆகும்பொழுது உங்கள் குழந்தைக்கு பாலுடன் கூட திட உணவும் தேவை. அவனுக்கு ஸெரிலாக்கின் அனுகூலங்களைப்புகட்ட இதுவே உகந்த வேளை.

போஷாக்கு அனுகூலம் :
ஒவ்வொரு தடவை ஸெரிலாக் ஊட்டும்பொழுதும் உங்கள் குழந்தைக்குத் தேவையான புரத சத்து, கார்போஹைட்ரேட், கொழுப்பு, வைட்டமின் மற்றும் தாதுப் பொருட்கள் ஆகிய எல்லா போஷாக்கு சத்துக்களும் அவனுக்கு கிடைக்கின்றன. அனைத்தும் குழந்தையின் விசேஷ தேவைக்கு ஏற்றபடி சரியான விகிதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன.

சுவையில் அனுகூலம்:
ஸெரிலாக் நலம்தரும் போஷாக்குடன் நல்ல சுவையும் கொண்டது. ஸெரிலாக் சுவை என்றாலே குழந்தைகளுக்கு கொள்ளை ஆசை.

தயாரிப்பதில் அனுகூலம்:
ஸெரிலாக், குழந்தை உண்பதற்கேற்ப முன்கூட்டியே பதமாக்கப்படுகிறது. கொதிக்கவைத்து ஆறிய வெதுவெதுப்பான நீரில் கலந்தால் போதும். நொடியில் தயார் ஸெரிலாக் உணவு.


தேர்ந்தெடுக்க அனுகூலம்:
உங்கள் குழந்தை உணவை இன்னும் விரும்பி உண்ண இப்பொழுது ஸெரிலாக் இருவிதங்களில் வருகிறது. நான்கு மாதங்களிலிருந்து ஸெரிலாக் வீட், ஆறு மாதங்களிலிருந்து ஸெரிலாக் ஆப்பிள்.

சுகாதாரமான முறையில் உணவு தயாரிக்கவும், உங்கள் குழந்தைக்கு சரியான விகிதத்தில் போஷாக்கு கிடைக்கவும் டின்னில் தரப்பட்டுள்ள குறிப்புகளை தயவுசெய்து பின்பற்றுங்கள்



Nestlé

உங்கள் குழந்தைக்கு அளியுங்கள் ஸெரிலாக் அனுகூலம்


எல்லோரும்...
...எல்லோரும்...
...எல்லோரும்...
எல்லோருமே விரும்புவது நியூட்ரின் ட்விங்க்
Twink
SOFT DRINK CONCENTRATE
Orange
ஆரஞ்சு
லெமன்
மேங்கோ
பைனாப்பிள்
கிரேப்
ட்விங்க்
ஸாஃப்ட் டிரிங்க் கான்ஸண்ட்ரேட்
nutrine
சுவைக்கும் புதுமை, சுவைத்திட இனிமை
ACIL/090/87-Tam



நவீனமாக ஒரு நாடகக் குழு

'**ய**தார்த்தா' நாடகக் குழுவைப் புதிய சிந்தனைகளுடன் நடத்தும் பென்னேசுவரன், டில்லி செக்ரடேரியட் நார்த் பிளாக்கில் உள் துறைக் காரியாலயத்தில் வேலை பார்க்கிறார். கிருஷ்ணகிரிக்காரர். பெண்ணை நதி காரணமாகப் பென்னேசுவரன் என்று பெயர்...

இதோடு ஐந்து நாடகங்கள் போட்டு விட்டார்: ஞாநியின் 'நவீன குசேலர்'; தாமே எழுதிய 'சிசு'; சுந்தர ராமசாமியின் 'உடல்'; ஜி. சங்கர பிள்ளையின் 'பீடம்'. முக்திபோத் எழுதிய கவிதை நாடகம் 'சாந்த் கா மூஹ் டேடா ஹை' (சந்திரனின் முகம் குயுக்தியானது) போட்டு, சாகித்யகலா பரிஷத்தின் மான்யத்தை வாங்கிக் கொண்டார்! வசனக் கவிதையும், நடனம் போன்ற உடல் மூவ்மெண்ட்டும் இந் நாடகத்தின் சிறப்பு.

''தெரு நாடகங்கள் மாதிரி போடுவதுண்டா?''

''உண்டு. லோதி கார்டன், தால்கதோரா கார்டன் இங்கே எல்லாம் நாங்கள் போட்டிருக்கிறோம்.''

''தமிழில் நவீன நாடகம் சாத்தியமா?''

''ஏன் சாத்தியமில்லை? நவீன நாடகம் தமிழைப் பொறுத்தவரை ந. முத்துசாமியிடமிருந்துதான் ஆரம்பமாகிறது என்பது என் திடமான எண்ணம்.''

''டில்லிச் சூழ்நிலை உங்கள் யதார்த்தாவுக்கு உதவுகிறதா?''

''டில்லியில் எல்லா கலாசாரங்களையும் பார்க்கிறேன். கன்னடம், மலையாளம் எல்லா நாடகங்களையும் பார்க்கிறேன். பிரான்ஸில் இன்று போடுகிற நாடகம் நாளை இங்கே மலையாளத்தில் வந்து விடுகிறது... இங்கே நாடகம் போடுகிற போது சங்கீத நாடக அகாடமியின் கவனத்தைக் கவர முடிகிறது.

''உங்களுக்கு அகாடமி உதவி கிடைத்திருக்கிறதா?''

''கிடைத்துவிடும்.''

''ரிகர்சலுக்கு எங்கே போவீர்கள்?''

''டில்லி தமிழ்க் கல்விச் சங்கத்தின் சவுந்திரராஜன் இடம் மட்டுமல்ல, எல்லா ஒத்துழைப்பும் கொடுத்து வருகிறார். எஸ். கே. எஸ். மணியும் உதவிகள் செய்வார். இவர் ஒரு முக்கிய உறுப்பினர்... வாஸந்தி, வெங்கட் சாமிநாதன் எல்லாம் உற்சாகம் தந்து ஊக்குவிக்கிறார்கள்...''

''இந்த மாதிரி யதார்த்தமான நாடகங்களைப் புரிந்து கொள்ள ஜனங்கள் கஷ்டப்படுகிறார்கள் என்பது ஒரு கருத்தாக இருக்கிறது. இங்கே உங்கள் அனுபவம் எப்படி?''

அதெல்லாம் சும்மா ஒரு சரக்கு. திருலோக்புரி அருகே ஒரு சேரி. அங்கே நாடகம் போட்ட போது அந்த மக்கள் ஒரு கட்டத்தில் குழந்தை அழுகிறது என்ற பாவனையைப் புரிந்து கொண்டார்கள். கதவைத் தட்டுகிற ஒரு சீனில், கதவும் கிடையாது ஒன்றும் கிடையாது; ஆனாலும் அந்த பாவனையைப் புரிந்து கொண்டு, 'ஜோர் ஸே மாரோ. கோலே கா' (பலமாகத் தட்டுங்கள், திறந்து விடும்) என்று பார்த்துக் கொண்டிருந்த பாமர ஜனங்கள் நாடகத்தில் ஒன்றிப் போய்க் கத்தினார்கள். புரியாது என்பதெல்லாம் கிடையாது. முயற்சி செய்வதில்லை என்பதுதான் உண்மை.''

சென்னையிலேதான் 'தியேட்டர் மூவ்மெண்ட்'டே இல்லை. போகட்டும், தலைநகர் டில்லியிலாவது தமிழ்த் 'தியேட்டர்' இருக்கிறதே!

கிராமிய பழங்கலை வாத்தியங்களை வாசிக்கும் தமிழர்களை, அவர்கள் வசிக்கும் பகுதிகளில் தேடிப் போய்க் கண்டுபிடித்து, அவர்களையும் தம் நாடகங்களில் பயன்படுத்தி வருகிறார் பென்னேசுவரன்.

தில்லியில் இருக்கும் தமிழ் அமைச்சர்கள்

ப. சிதம்பரம்:



தில்லியில் பிரதமர் அலுவலகத்துக்கு அடுத்தபடியாக முக்கியமானவைகளாகக் கருதப்படும் மிகச் சில அதிகாரக் கேந்திரங்களுள் ஒன்று நார்த் ப்ளாக். அதன் முதல் மாடியில் உள்ளது அமைச்சர் சிதம்பரத்தின் அலுவலகம். அவரது உதவியாளர்களில் பெருமாள், ரவி என்று இரு தமிழர்கள்.

"வாங்க சௌக்கியமா? எப்போ வந்தீங்க?" — மனிதர் பேசிக் கொண்டே தமது மேஜை மேலுள்ள ஏராளமான ஃபைல்களை டிஸ்போஸ் செய்து கொண்டிருக்கிறார். முதலில் நிர்வாகம், மற்றும் ஊழியர் நலம் ஆகிய துறைகளை மட்டும் கவனித்துக் கொண்டிருந்த சிதம்பரத்துக்குக் கடந்த சில மாதங்களாக உள்துறையைச் சேர்ந்த முக்கிய இலாகாவான உள்நாட்டுப் பாதுகாப்புத் துறையும் கூடுதலாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

"நிர்வாகத்தை நடத்திச் செல்லும் விதம் பற்றி?"

"முன்பெல்லாம் மிகச் சாதாரண விஷயங்கள் கூட அமைச்சரின் முடிவுக்கு வந்துவிடும். இப்போது நான் அதிகாரங்களைப் பரவலாக்கியிருக்கிறேன். பல முடிவுகள் அதிகாரிகள் மட்டத்திலேயே எடுக்கப்படுகின்றன. ஏதாவது சந்தேகம் இருந்தால் சம்பந்தப்பட்ட அதிகாரியே என்னை நேரில் சந்தித்து விவாதிக்கலாம். இது தவிர, வாரம் ஒரு முறை, மாதம் ஒரு முறை என்று அதிகாரிகளுடன் கலந்து பேசும் கூட்டங்கள் உண்டு. என் அறைக்குப் பக்கத்திலேயே கம்ப்யூட்டர் அறை உள்ளது. ஒவ்வொரு கடிதமும் கம்ப்யூட்டரில் பதிவு செய்யப்பட்டுப் பின்னர் அந்தக் கடிதம் 'டிஸ்போஸ்' ஆகும் வரை தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது."

"தில்லியில் உங்கள் வாழ்க்கை எப்படி?"

"வீட்டில் நான் யாரையும் சந்திப்பதில்லை. ஆபீஸில் இருந்து போகும்போதே இரவு மணி எட்டரை ஆகிவிடும். பின்னர் சாப்பிட்டுவிட்டு ஏதாவது படிப்பேன்."

"இப்போது என்ன புத்தகம் படித்துக் கொண்டிருக்கிறீர்கள்?"

"சென்னையில் நடந்த புத்தகக் கண்காட்சியில் நிறைய வாங்கினேன். அது தவிர, சமீபத்தில் கு. அழகிரிசாமியின் மகன் அவர் அப்பாவின் புத்தகங்களில் சிலவற்றை எனக்குக் கொடுத்தார். அவற்றைப் படித்துக் கொண்டிருக்கிறேன்."

"தொகுதிக்குப் போவதற்கு நேரம் கிடைக்கிறதா?"

"முன்பெல்லாம் மூன்று வாரங்களுக்கொருமுறை தொகுதிக்குச் செல்லுவேன். இப்போது வேலைப் பளு அதிகமாக இருப்பதால் ஒரு மாதத்துக்கொருமுறைதான் செல்ல முடிகிறது."

"வாரத்திற்கு இரண்டு நாட்கள் விடுமுறை விடுவதால், எதிர்பார்த்ததற்கு மாறாக அரசுப் பணிகள் மந்தமாக நடைபெறுவதாகச் சொல்கிறார்கள். வெள்ளிக்கிழமையும் திங்கள்கிழமையும் அரசு விடுமுறை வந்தால், தொடர்ந்து நான்கு நாட்கள் அலுவலகங்கள் இயங்காமல் இருக்கின்றன. மக்கள் பாதிக்கப்படுகிறார்கள்."

"நீங்கள் சொல்வதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். ஐந்து நாட்கள் வாரம் என்பது செக்ஷன் ஆபீஸர் மற்றும் அவர் கீழுள்ள ஊழியர்களுக்குத்தான். மற்றபடி அதிகாரிகள் சனிக்கிழமைகளில் வந்து வேலை செய்கிறார்கள். தில்லியில் இருந்தால் நானும் சனிக்கிழமைகளில் அலுவலகம் வந்து விடுவேன். கீழ்நிலையிலுள்ள ஊழியர்கள், சனிக்கிழமைகளில் சொந்த வேலைகளைக் கவனித்துக் கொண்டு, ஞாயிற்றுக்கிழமைகளில் குடும்பத்துடன் சந்தோஷமாக இருந்து கொண்டு திங்கள் அன்று புத்துணர்ச்சியுடன் வேலையை ஆரம்பிக்கிறார்கள் என்பதுதான் உண்மை."

"உங்கள் மனைவி தில்லியில்தான் இருக்கிறாரா?"

"நோ... அவங்களுக்கு வக்கீல் தொழில் இருக்கிறது. தொழில் சம்பந்தமாகத் தில்லிக்கு வருவதுடன் சரி. மேலும், இங்கே எதற்குக் குடும்பத்துடன் வசிக்க வேண்டும்? இன்றைக்கு அமைச்சராக இருக்


கிறேன். நாளைக்கு என் நிலைமை என்ன என்று எனக்குத் தெரியாது. பாருங்கள்... தலைவர் மூப்பனார் தில்லியில் எட்டு வருடங்கள் இருந்தார். தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் பதவிக்கு நியமித்தவுடன் பெட்டியை எடுத்துக் கொண்டு கிளம்பி விட்டார். அது போல்தான் இருக்க வேண்டும்."

"நீங்களும் தமிழ்நாட்டு அரசியலுக்கு வரத் தயார் ஆகிவிட்டீர்களா?"

"நோ... நோ... ஒரு பேச்சுக்குச் சொன்னேன். தலைவர் (ராஜீவ்) என்ன முடிவெடுக்கிறாரோ அதை ஏற்றுச் செயல்படுவதுதான் என் வேலை!"

"தில்லித்தமிழர்கள்பலபள்ளிகளைநடத்துகிறார்கள். ஆனால் கல்லூரி நடத்த முடியவில்லையே என்று வருத்தப்படுகிறார்கள்..."

"இங்கு தமிழர்களால் நடத்தப்படும் கல்லூரி வரவேண்டும் என்று நானும் விரும்புகிறேன். இது சம்பந்தமாக நம் ஆட்கள் என்னை அணுகினால் என்னால் முடிந்த உதவிகளைச் செய்வேன்!" என்று உறுதியாகக் கூறினார் அமைச்சர் சிதம்பரம்.



அருணாசலம் :

ரைசினா சாலையிலிருக்கும் அமைச்சர் அருணாசலத்தின் வீட்டை நெருங்கியதும், வாசலில் இருபது, முப்பது ஏழை, எளிய மக்கள் நிற்பது தெரிந்தது. எதற்கு?

"அவர்கள் நம் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். இங்கு வீட்டு வேலை செய்பவர்களும், கட்டட வேலைசெய்பவர்களும்பெரும்பாலும் தமிழர்கள்தான். நேற்று இரவு ஏதோவொரு தகராறில் ஒருவரைப் போலீஸார் பிடித்துக் கொண்டு போய் விட்டார்களாம். அது சம்பந்தமாகத்தான் என்னைப் பார்க்க வந்துள்ளார்கள். இதுபோன்ற விஷயங்களை மட்டுமல்ல; ரேஷன் கார்டு வாங்கிக் கொடுப்பதிலிருந்து, அவர்களுக்குப் புறம்போக்கு நிலத்தைப் பட்டா போட்டுக் கொடுக்க ஏற்பாடு செய்வது வரை, பல பணிகளை நான் தில்லியில் வாழும் ஏழைத் தமிழர்களுக்காகச் செய்து கொண்டிருக்கிறேன்..." என்று அமைச்சர் அருணாசலமே நம்மிடம் பேச ஆரம்பித்தார்.

திருநெல்வேலி மாவட்டம், வாசுதேவநல்லூரைச் சேர்ந்த அருணாசலம், 1977—ம் ஆண்டு மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்தே அவருடைய தில்லித் தொடர்பு ஆரம்பித்து விட்டது. குடும்பத்தோடு தில்லியில் வசிக்கிறார். நான்கு குழந்தைகள். அவர்கள் தில்லியிலேயே படிக்கின்றனர்.

"தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி மிகவும் பின்தங்கி விட்டதே!" — நாம் கேட்டோம்.

"பல தொழில்களைத் துவங்குவதற்கு அனுமதி கொடுத்தாகி விட்டது. இப்போதுதான் சூழ்நிலை நன்கு கனிந்து வந்திருக்கிறது. இனி பாருங்கள்!" என்றவரிடம், "அப்படியானால் இதுவரை சூழ்நிலை சரியில்லை என்று சொல்கிறீர்களா?" என்ற போது சிரித்தார்.

தில்லியிலிருக்கும் அமைச்சரின் மனைவி திருமதி அமலா அருணாசலம் வீட்டில் பொழுதை வீணாகக் கழிப்பதில்லை. வீட்டில் அருமையான காய்கறித் தோட்டம் போட்டிருக்கிறார். வீட்டு உபயோகத்திற்குப் போக மீதியாகும் முட்டை கோசு, வெங்காயம், காலிஃபிளவர், உருளைக்கிழங்கு, வாழை, கறிவேப்பிலை, கொய்யா... என்று அனைத்தையும் ஏழை, எளியவர்கள் தங்கியிருக்கும் ஹாஸ்டல்களுக்கு இலவசமாக அனுப்பி விடுவார்களாம். பாராட்டுதலுக்குரிய விஷயம்.



பிரபு:

"உங்களைப் பற்றி அதிகமாகப் பத்திரிகைகளில் அடிபடுவதில்லையே?"

"எதற்கு அடிபட வேண்டும்? என் தொகுதிக்கு என்னால் முடிந்த காரியங்களை அமைதியாகச் செய்து கொண்டிருக்கிறேன். என் தொகுதி மிகப் பெரிய தொகுதி. நீலகிரி மலைப்பகுதி மட்டுமல்ல; மலைக்குக் கீழேயும் என் தொகுதி பரவியுள்ளது.

"நீங்கள் எப்படி அரசியலுக்கு வந்தீர்கள்?"

"எங்கள் குடும்பமே ஒரு காங்கிரஸ் குடும்



தில்லியில் திருப்புகழ்

சரியாக முப்பது வருடங்களுக்கு முன் தில்லி – கன்னாட்பிளேஸில் 'ஸ்டேட்ஸ்மன்' அலுவலகத்துக்கு எதிரே 'பிரதாப் பில்டிங்'கில் ஆரம்பித்த திருப்புகழ் அன்பர்கள் கூட்டத்துக்கு ஆதரவாளர்கள் இப்போது ஏராளம்.

எல்லா வருடமும் 'படி விழா' ஜனவரி 26 ஆம் தேதிதான். 'ஏன் தேசிய தினங்களைத் தேர்ந்தெடுத்தீர்கள்?' என்றால், அன்றுதான் அலுவலகங்கள் எல்லாம் விடுமுறை. நான் ஆபீசுக்குப் போகிறேன் என்று யாரும் கழன்று கொள்ள முடியாது!' என்கிறார் ஏ. எஸ். ராகவன்.

தில்லியில் பல இடங்களில் திருப்புகழ் அன்பர்கள் கூட்டம் ஆண்களும் பெண்களுமாய் நிரம்பி வழிகிறது.

தில்லியில் மட்டுமல்ல; பம்பாய், கல்கத்தா, சென்னை, பெங்களூரிலும் ராகவன் திருப்புகழ் பரப்பியிருக்கிறார். பம்பாயில் ஒன்பது வருடங்கள் பஜனைகளும், திருப்புகழும் சொல்லிக் கொடுத்திருக்கிறார். வெளி நாடுகளுக்குச் சென்றும் பாடி வருகிறார்.

ஆர். வி. விருப்பப்படி வருடத்தின் முதல் ஞாயிற்றுக் கிழமையில் பஜனைகளுக்கு உத்தர சுவாமி மலையில் ஏற்பாடு செய்தார், ராகவன். ஆகஸ்ட் 15 ஆம் தேதி அருணகிரி நாதர் விழா நடத்துகிறார்.

கடுமையான கால் உபாதை ஏற்பட்டு, நாற்பது நாட்கள் திருச்செந்தூரில் இருந்த போதுதான், மறுபடி கால் நடக்க வந்ததாம். அதிலிருந்து திருச்செந்தூர் முருகனுக்கு அடிமையாகி விட்டார் ராகவன்.

ஸியட் டயர் கம்பெனியில் பணிபுரியும் ராகவன், சக்கரமாய்ச் சுழலுகிறார் என்றால் மிகையில்லை. வாரத்தில் ஏழு நாளும் ஏழு இடங்களில் இவரைப் பார்க்கலாம்.

சனிக்கிழமை, சர்வோதயா என்க்ளேவ் பகுதியில், சரியாக இரண்டரை மணிக்கு 'முருகா முருகா' என்று பாட்டுக் கேட்கிறது என்றால் திருப்புகழ் ராகவன் வந்து விட்டார் என்று அர்த்தம்!

பம்தான். என் அப்பா நேரு குடும்பத்துக்கு வேண்டியவர். பாராளுமன்ற உறுப்பினராகவும் இருந்திருக்கிறார். நான் அமெரிக்காவில் மெகானிகல் இன்ஜினியரிங் படித்துத் தேர்வு பெற்றதும் 1980 வாக்கில் தமிழ் நாட்டுக்கு வந்தேன். நீலகிரித் தொகுதியில் போட்டி போட நல்ல இளைஞராகத் தேடிக் கொண்டிருந்தார்கள். அப்போது என்னைப் பற்றி இந்திரா காந்தி அவர்களிடம் சொல்லியிருக்கிறார்கள். பிறகென்ன? என்னையே போட்டியிட வைத்து விட்டார்கள். முதன் முதலில் பிரசாரத்துக்குப் போன போது காங்கிரஸ் தோழர்கள் 'ஸார் நீங்கள் கதர்ச் சட்டை, கதர் வேஷ்டியுடன்தான் பிரசாரம் செய்ய வேண்டும்' என்றனர். 'என் உடையைப் பார்த்துத்தான் வோட்டுப் போடுவார்கள் என்றால் நான் தோற்றாலும் பரவாயில்லை; எப்போதும் போல பாண்ட், ஷர்ட்டோடுதான் வருவேன்' என்று அவர்களிடம் கூறிவிட்டு, அதன்படியே, பிரசாரத்திற்குச் சென்றேன். 1980 – இல் மட்டுமல்ல; 1984 – லும், அதே தொகுதியில் போட்டியிட்டு மகத்தான வெற்றி பெற்றேன்..."

"ஊட்டியிலுள்ள போட்டோ பிலிம் தொழிற்சாலை விரிவுபடுத்தப்படுமா?"

"நான் மிகவும் போராடிய பிறகு, 180 கோடி ரூபாய்ச் செலவில் கலர் பிலிம் உற்பத்தி செய்யத் தனி யூனிட் ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த விஷயத்தில், சக அமைச்சர்களுடன் போராட வேண்டியிருந்தது."

"உங்கள் துறை பற்றி?"

"நான் அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கும் இந்த உர இலாகாவில் பதினொரு பொதுத்துறை நிறுவனங்களும், ஒரு கூட்டுறவுத்துறை நிறுவனமும் இருக்கின்றன. நாட்டின் அன்றாடத் தேவைகள், உர உற்பத்தி மற்றும் பல புள்ளி விவரங்கள் அனைத்தும் தினப்படி பெறப்பட்டுக் கம்ப்யூட்டரில் பதிவு செய்யப்படுகின்றன. கூட்டுறவுத் துறை நிறுவனமான உழவர் மற்றும் உர கூட்டுறவு நிறுவனம் பல கிராமங்களைத் தத்தெடுத்துக் கொண்டு இருக்கிறது. தமிழ்நாட்டில் உழவர் பயிற்சி நிலையம் ஒன்று விரைவில் ஆரம்பிக்கப்பட இருக்கிறது."

"சமீபத்தில் உங்கள் கல்யாணத்தைப் பற்றித்தான் தமிழ் நாளிதழ்கள் பரபரப்பாகச் செய்திகள் வெளியிட்டன!"

"திருமணம் என்பது சம்பந்தப்பட்ட இருவரின் விஷயம். மேலும் எதற்கு ஆடம்பரம்? என் திருமணம் காதல் திருமணம் தான். மனைவி அனிதா ஆந்திராவைச் சேர்ந்தவர். தில்லியில் என் வீட்டில் நடந்த இந்தத் திருமணத்தில் விரல் விட்டு எண்ணக் கூடிய சிலர்தான் கலந்து கொண்டார்கள். மறுநாள்தான் நான் மனைவியுடன் சென்று பிரதமரையே பார்த்துவிட்டு வந்தேன்..." என்றார் சிரித்துக் கொண்டே.

தில்லிக் குடித்தனம்

"எனக்குத் தில்லிக்கு மாற்றலாகியிருக்கிறது!" என்று ஆபீசிலிருந்து திரும்பிய என் கணவர் உற்சாகமாக அறிவித்தார்.

"ஏதோ, தில்லிக்குப் போய் ராஜீவ் காந்திக்குப் பதிலாக நீங்களே நாட்டை ஆளப் போகிற மாதிரி உற்சாகம் கரை புரண்டு ஓடுகிறதே! இங்கே இருக்கும் சொந்த வீட்டை விட்டுவிட்டுத் தில்லியில் போய் யார் நாயாக வீட்டுக்கு அலைகிறது?" என்று நான் உடனே கவலைப்பட ஆரம்பித்தேன்.

டீ.வி. நிகழ்ச்சிகள் இன்னும் ஆரம்பம் ஆகாததால் (அவர்கள் வீட்டில் வீடியோவும் கிடையாது) பொழுது போகாமல் என்னுடன் வம்படித்துக் கொண்டிருந்த பக்கத்து வீட்டுப் பங்கஜம் வேறு, "தில்லிக் குளிரில் மனுஷா இருக்க முடியுமோ?" என்று, ஏதோ தில்லியில் குடியிருப்பவர்கள் எல்லோரும் மனிதர்கள் இல்லை போல் என்னைப் பயமுறுத்தி விட்டாள்.

மூட்டை முடிச்சுகளுடன் "தில்லி சலோ" என்று தில்லியை நோக்கிப் புறப்பட்டோம். ஆபீஸ் நண்பர்கள் ஸ்டேஷனுக்கே வந்து எங்களை வரவேற்பதாக ஏற்பாடு. ரயிலிலிருந்து இறங்கிய எங்களுக்கு ஒரே ஷாக்! பத்துப் பன்னிரண்டு பேர் ஆண்கள் யார், பெண்கள் யார் என்று இனம் கண்டு கொள்ள முடியாதபடி கறுப்பு, சிவப்பு, நீலம், மஞ்சள் என்று முகமெல்லாம் சாயம் பூசியவாறு 'சொத' 'சொத' வென்று ஈர உடைகளுடன் மாலையும் கையுமாக எங்களை வரவேற்கக் காத்திருந்தார்கள்.

இதென்ன தில்லிக்கு வந்திருக்கிறோமா அல்லது ஆதிவாசிகள் வசிக்கும் ஏதாவது மலைப் பிரதேசத்திற்கு வந்து சேர்ந்து விட்டோமா என்று எனக்குச் சந்தேகம் வந்து விட்டது.

"ஹோலி ஹே!" என்ற கூச்சலைக் கேட்டவுடன்தான் புரிந்தது. வண்ணப் பொடிகளை வாரி இறைத்து வடக்கத்தியர்கள் உற்சாகமாகக் கொண்டாடும் ஹோலிப் பண்டிகை அன்று என்பது.

"வெல்கம் டு தில்லி!" என்று அந்த அழுக்குடனே எல்லோரும் எங்களைக் கட்டிக் கொண்டார்கள். ஹோலியைச் சாக்காக வைத்துக் கிடைத்தது சான்ஸ் என்று ஆண்கள் பெண்கள் எல்லோரும் சகஜமாக ஒருவரை ஒருவர் கட்டிக் கொள்வார்கள் என்பது தெரியாத எனக்குக் கோபம் கோபமாக வந்தது! ரயிலில் வந்த அழுக்குப் போதாது என்று இவர்கள் வேறு மேற்கொண்டு அழுக்கை நம் மீது பூசுகிறார்களே!

ஆபீஸ் நண்பர்கள் ஏற்பாடு செய்திருந்த கெஸ்ட் ஹவுஸிற்குப் போய்க் குளித்து, பழக்கமில்லாத சப்பாத்திச் சாப்பாட்டைக் கஷ்டப்பட்டுச் சாப்பிட்டு முடித்து, செய்தித்தாள்களில் 'வீடு காலி' விளம்பரங்களை ஆராய ஆரம்பித்தோம். என்ன ஆச்சரியம்! அனுவசியமாக வீடு கிடைக்குமா என்று கவலைப்பட்டோமே? முக்கால்வாசி விளம்பரதாரர்கள் 'குடித்தனக்காரர்கள் மதராஸியாக இருந்தால் தேவலை!' என்று குறிப்பிட்டிருந்தார்கள். இதற்கான காரணத்தை எங்கள் தில்லி நண்பர் விளக்கினார்.

ஒரு மாத நோட்டீஸ் கூட இல்லாமல் டாணென்று வீட்டைக் காலி பண்ணி விடுவார்கள் என்றும், ரசீது இல்லாமல் என்ன வாடகை வேண்டுமானாலும் கொடுக்கத் தயாராக இருப்பார்கள் என்றும், மதராஸிகளுக்கு நல்ல பெயரை (அதாவது அசட்டுப் பெயரை) வாங்கிக் கொடுத்திருக்கும் எனது தில்லித் தமிழ் முன்னோர்களை வாழ்த்தியவாறு, புது வீட்டிற்குக் குடி புகுந்தோம். கீழ் போர்ஷனில் வீட்டுக்காரப் பஞ்சாபி குடும்பம்; மாடியில் எங்கள் குடும்பம்.

அடுத்து வேலைக்காரி தேடும் படலம். அக்கம் பக்கத்தில் சொல்லி வைத்ததில் ஒரு 'சேலத்துக்காரி' நவநாகரீகமாக நைலான் புடைவை, கொண்டை, குதிகால் செருப்புகளுமாக, "செய்யற ஊட்டு அம்மா அனுப்பினுங்க..." என்று சொல்லிக் கொண்டு வந்தாள்.

அவள் பேசும் மொழி புரியாமல், "யார், அனுப்பினுங்க?" என்று நான் கேட்டேன்.

அதான், பக்கத்து ஊட்டு மீன்கார அம்மா அனுப்பினுங்க!" என்று விவரமாகச் சொன்னாள்.

வங்காளிகளை மீன்கார அம்மா என்றும் தான் வேலை செய்யும் வீட்டு எஜமானியைச் 'செய்யற ஊட்டு அம்மா' என்றும் அவள் பேசும் வேடிக்கையான தமிழை ரசித்த நான், சென்னை வழக்கப்படி, 'ஐம்பது ரூபாய்ச் சம்பளம். ஒரு வேளை காப்பி. மூன்று வேலையும் செய்ய வேண்டும்" என்று ஆரம்பித்தேனோ இல்லையோ...

"என்னம்மா இது! இந்த ஊரு ரேட் தெரியாம பேசறே? துணி புளிய அம்பது ரூபா, ஊடு மொளுக அம்பது ரூபா, காலிப்

பாத்திரம் தேய்க்க அம்பது ரூபா. அது தவிர மாசச் சுட்டி (லீவு) வேறு...'' என்று எந்த வேலையை எடுத்தாலும் ஐம்பது ரூபாய் என்று விலை பேசினாள்.

இந்த ஊர் ரேட்டைப் பார்த்தால் நாமே நாலு 'வூடு' பிடித்துக் கொள்ளலாம் போலிருக்கிறதே என்று எனக்கு உள்ளூரச் சபலம் தட்டியது. இருந்தாலும், தில்லிக் குளிரில் 'மனுஷா' வேலை செய்ய முடியுமோ என்று பயந்த நான், அவள் சொன்ன நிபந்தனைகளுக்கெல்லாம், மாதச் 'சுட்டி' உள்பட, பயபக்தியுடன் 'அச்சா' என்று தலையாட்டினேன். ('அச்சா' — தில்லிக்கு வந்த இரண்டு நாட்களுக்குள் நான் கற்றுக் கொண்ட முதல் ஹிந்தி வார்த்தை.)

நான், அவள் தோசையை 'டோஸா' என்று கொலை பண்ணுவதையும் பொருட்படுத்தாமல், ''அதற்கென்ன வருகிற ஞாயிற்றுக்கிழமை காலை ஃப்ரேக் ஃபாஸ்டிற்குத் தோசை, சாம்பார் பண்ணித் தருகிறேனே!'' என்று வாக்குறுதியளித்தேன். ஆனால் தேர்தல் வாக்குறுதிகளைப் போல் அல்லாமல், உண்மையிலேயே ஞாயிறு தோறும் அவர்களுக்குத் தோசை சாம்பார் சப்ளை செய்யும் கடமை என் தலையில் விழும் என்று நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை.

தில்லிக்கு வந்த முதல் நாள் பள்ளிக் கூடத்திலிருந்து திரும்பிய என் மகனும்,



வடக்கத்தியர்கள். மதராஸிகளைக் குடி வைத்துக் கொள்வதற்குத், தில்லி நண்பர் சொன்னது தவிர, இன்னும் ஒரு முக்கியமான காரணமும் இருப்பது, குடித்தனம் ஆரம்பித்து, ஒரு வாரத்திலேயே புரிந்து விட்டது. மூச்சிரைக்க மாடி ஏறி வந்த வீட்டுக்கார அம்மாள், ''சாம்பார் பண்ணுகிறேளா? வாசனை பிரமாதமாக இருக்கிறதே! எங்க வீட்டில் எல்லோருக்கும் டோஸா, வடா, சாம்பார் என்றால் உயிர்!'' என்று பல்லைக் காட்டிக் கொண்டு விடாக் கண்டனாக உட்கார்ந்து விட்டாள்.

வீட்டுக்கார அம்மாளைத் திருப்திப்படுத்துவதை விடத் தலையாய கடமை வேறு என்னவாக இருக்க முடியும் என்று நினைத்த

மகனும் செய்த கலாட்டாவைக் கேட்கவே வேண்டாம். 'பசி உயிர் போகிறது...' என்று அழுதுகொண்டே வீடு வந்து சேர்ந்தார்கள் என் குழந்தைச் செல்வங்கள். பள்ளிக் கூட இடைவேளையில், இவர்கள் டிபன் டப்பாக்களைத் திறந்த உடன் அதில் தோசை இருந்தது எப்படித்தான் அத்தனை குழந்தைகளுக்கும் மூக்கில் வியர்த்ததோ! அரை டஜன் கைகள் கழுகுகள் போல் டப்பாவுக்குள் புகுந்து, தோசைகளை அப்படியே கொத்திக் கொண்டு போய் விட்டன. இனிமேல் டிபன்

ரமாமணி சுந்தர்

டப்பாவில் சப்பாத்தியே வைப்பது என்று அன்றே சபதம் செய்து கொண்டேன். காரணம், மதராஸிகள் செய்யும் சப்பாத்திக்குத் தில்லிக்காரரிடம் மதிப்பு இல்லை என்பது தான்.

குழந்தைகள் கதைதான் இப்படி என்றால், என் கணவர் வேறு ஆபீஸில் எல்லோரையும் காக்காய் பிடிக்கிறேன் பேர் வழி என்று, ஜெனரல் மானேஜரில் ஆரம்பித்து நான்கைந்து பேரைக் குடும்பத்துடன் விருந்து சாப்பிட அழைத்து விட்டார்.

"எங்கேயேனும் சப்பாத்தியைப் பண்ணி வைக்காதே! நீ செய்யும் சப்பாத்தியைச் சாப்பிட்டு விட்டு என்னை வேலையை விட்டு நீக்கி விடப் போகிறார்கள்..." என்று உண்மையிலேயே பயந்த என் கணவர், "தோசை, வடை, சாம்பார், டிகாஷன் காப்பி..." என்று ஏதோ ஹோட்டலில் ஆர்டர் கொடுப்பது போல் மெனு கார்டை ஒப்பித்தார். சென்னையிலிருந்து வெட் கிரைண்டர் ஒன்று வாங்கி வராமல் போனேனே என்று வருத்தப்பட்டுக் கொண்டு கல்லுரலில் லொங்கு லொங்கென்று மாவாட்டினேன்.


மறுநாள் இமுதிமுவென்று குழந்தை, குட்டிகளுடன் வந்த கூட்டம் தோசை, வடைகளை ஒரு கை பார்த்தார்களே பார்ப்போம்! அது மட்டும் அல்ல 'பகுத் அச்சா ஹை!' என்று சாம்பாரைக் கிண்ணத்தில் ஊற்றி ஊற்றிக் குடித்தார்கள். சாம்பாரைக் குடித்ததுதான் குடித்தார்கள், சும்மா வாயை மூடிக் கொண்டு குடிக்கக் கூடாதா!

"மதராஸிகள் ரொம்ப இம்லி (புளி) சாப்பிடுகிறார்கள். அதான் ரொம்பக் காலா (கறுப்பு) வாக இருக்கிறார்கள்" என்று கமெண்ட் வேறு. நாம் செய்யும் சாம்பாரையெல்லாம், இவர்கள்தானே இப்படி விழுந்து விழுந்து குடிக்கிறார்கள். பிறகு நாம் எப்படி காலாவாக இருக்கிறோம் என்று எனக்குப் புரியவேயில்லை.

அப்பாடி! ஒரு வழியாகப் பார்ட்டி முடிந்தது என்று நான் மறுநாள் நிம்மதியாக உட்கார்ந்திருந்தால், ஆபீஸிலிருந்து திரும்பிய என் கணவர் பெரிய குண்டைத் தூக்கிப் போட்டார். நான் செய்த பலகாரங்களைப் பாராட்டிய அவருடைய ஆபீஸ் சகாக்கள், என்னிடமிருந்து தோசை, சாம்பார் செய்யக் கற்றுக் கொள்வதற்காகத் தங்கள் மனைவிமார்களை என் வீட்டிற்கு அனுப்பப் போவதாக எச்சரிக்கை விட்டிருந்தார்கள்! அந்த வாரம் முழுவதும் தினமும் எங்கள் வீட்டில் சமையல் வகுப்புதான். தோசைத் திருப்பியை எப்படி பிடித்துக் கொள்வது என்பதில் ஆரம்பித்துச் சாம்பாருக்கு என்னென்ன கறிகாய்கள் போடலாம் என்பது வரை சொல்லிக் கொடுப்பதற்குள் போதும் போதும் என்று ஆகிவிட்டது.

ஆனாலும் இந்தத் தோசை, இட்லி, சாம்பார் என்னைச் சும்மா விடுவதாக இல்லை! தமிழர்கள் எதற்குத்தான் இந்தப் பலகாரங்களைக் கண்டு பிடித்தார்களோ என்று நான் அலறும் வண்ணம் என்னைத் துரத்தியடித்தன! யார் வீட்டிற்குப் போனாலும், எந்தப் பார்ட்டிக்குப் போனாலும், 'தோசை, இட்லி, சாம்பார் எப்படிப் பண்ணுவது?' என்ற ஒரே கேள்விதான். ஏதோ மதராஸி என்றால் தோசை, இட்லி சமைப்பதற்கும் சாப்பிடுவதற்குமே பிறந்திருப்பது போல்!

தில்லிக்கு வந்து இரண்டு மாதங்களுக்குள் எனக்குத் தில்லிக்கு ஏன் வந்தோம் என்று அழுகையே வந்து விட்டது! தோசை, இட்லி, என்று மாவரைத்தும், வகுப்புகள் நடத்தியும் கையும், காலும் ஓய்ந்து போனது ஒரு புறம் இருக்கட்டும்! எண்ணெய் விற்கும் விலையில், பருப்புக்கள் விற்கும் விலை



வாசகர் பங்கு:



தளபதி திடமதி

பரிசு ரூ. 400/-

வளர்மதி ஆசைத்தம்பி சென்ற இதழில் ரூ. 200/– ஐ ஒரு துணுக்குக்கும் பரிசாகத் தட்டிக் கொண்டு போனார்! உங்களுக்கும் அப்படி ஒரு வாய்ப்புக் கிட்ட, திடமதி ஜோக் எழுதி அனுப்புங்கள்! பிரசுரமாகும் உங்கள் முதல் துணுக்குக்குப் பரிசு ரூ. 25/–. அடுத்தடுத்துப் பல இதழ்களில் ஒருவரே எழுதிய சில துணுக்குகள் இடம் பெற்றால் ஒவ்வொரு முறையும் பரிசு இரட்டிப்பாகும். அதிக பட்சப் பரிசு ரூ. 400/–. மேடைப் பேச்சாகவோ, உரையாடலாகவோ கீழே உள்ள கூப்பனில் எழுதி அனுப்புங்கள். உறைமீது "தளபதி திடமதி" என்று குறிப்பிடவும்.

கூப்பன்:

கல்கி இதழ்: 17.4.88 — முடிவு தேதி: 26.4.88.

தளபதி திடமதி: "..
....
....
....
....
....
....
....
....
....
...."

என் பெயர்: ....

விலாசம்: ....

....

யில் தினமும் போவோர், வருவோருக்கெல்லாம் தோசை, சாம்பார், இட்லி என்று சப்ளை செய்வதென்றால் செலவு என்ன ஆயிற்று! ஏற்கெனவே தில்லிக்குக் குடி வந்ததிலிருந்து ஏகச் செலவு! குழந்தைகள் இருவரும் ஹிந்தியில் 'வீக்' என்று மாதம் இருநூறு ரூபாய்க்கு டியூஷன். என் மகள் வேறு பாவாடை, தாவணி போட்டுக் கொண்டால் எல்லோரும் தன்னை 'மதராஸி' 'மதராஸி' என்று கூப்பிடுகிறார்கள் என்று அழுது சாதித்து அரை டஜன் சல்வார் — கமீஸ் வாங்கிக் கொண்டாள். வேலைக்காரி செலவையோ கேட்கவே வேண்டாம்! இந்தச் செலவுகள் எல்லாமாவது தவிர்க்க முடியாதவை. குறைந்த பட்சம் ஊருக்கெல்லாம் தோசை—சாம்பார் விநியோகம் பண்ணும் செலவையாவது குறைக்கலாமே!

பொறுமையிழந்து போன நான், என் கணவர் ஆபீசிலிருந்து எப்பொழுது திரும்புவார் என்று காத்துக் கொண்டிருந்தேன்! வீட்டுக்கார அம்மாளிடமும், ஆபீஸ் சகாக்களின் மனைவிகளிடமும் அக்கம்பக்கத்துப் பெண்மணிகளிடமும், காட்ட முடியாமல் அடக்கி வைத்திருந்த கோபத்தையெல்லாம் சேர்த்து வைத்து, என் கணவரிடம் கத்தித் தீர்த்து விட்டேன். என் கணவரோ, சாந்த ஸ்வரூபியாக டி. வி. இராமாயணம் தொடரில் ராமராக வரும் அருண் கோவிலைக் காப்பியடித்து, மெல்லிய புன்னகையை உதிர்த்த வண்ணம், "இதற்குப் போய் ஏன் இவ்வளவு கோபப்படுகிறாய்? நான் ரொம்பச் சுலபமாக ஒரு வழி சொல்கிறேன்..." என்று ஆரம்பித்தார்.

நானோ அவர் சொல்ல ஆரம்பித்ததை முழுவதும் கேட்பதற்குப் பொறுமையில்லாமல், "வேறு என்ன வழி சொல்லப் போகிறீர்கள்? இங்கு தில்லியில் மூலைக்கு மூலை மதராஸி ஹோட்டல் ஒன்று இருப்பது போல், என்னையும் ஒரு போர்டு மாட்டிக் கொண்டு ஹோட்டல்தான் வைக்கச் சொல்லப் போகிறீர்கள்!" என்று எரிந்து விழுந்தேன்.

நான் சொல்வதைக் கொஞ்சம் பொறுமையாகத்தான் கேளேன். இனிமேல் உன்னிடம் யாராவது ஹிந்திக்காரர்கள் வந்து தங்களுக்குத் 'தோசை — சாம்பார் என்றால் உயிர்' என்று ஆரம்பித்தால், உடனே நீயும் உனக்குச் 'சோலே — பட்டூரா என்றால் அதை விட உயிர்' என்று சொல்லி விடு. 'இட்லி எப்படிச் செய்வது?' என்று கேட்டால், உடனே நீ 'சமோசா எப்படிச் செய்வது?' என்று திருப்பிக் கேள். அப்புறம் என்ன நடக்கிறது என்று வேடிக்கை பாரேன்". என்று திருமணம் ஆகி இத்தனை வருடங்களில் முதல் தடவையாக ஓர் உருப்படியான யோசனையை எடுத்து விட்டார்.

நானும் வழக்கம் போல் இல்லாமல், இம்முறை என் கணவர் சொன்ன யோசனையை உடனே கடைப்பிடித்தேன். அவ்வளவு தான்! தோசை, சாம்பார், இட்லி என்று என் வீட்டை வட்டமிடும் அனைவரும் பிறகு எட்டிப் பார்க்க வேண்டுமே!

ராஜீவுக்கு நஷ்டம் – ஹிந்துஜாவுக்கு லாபம்!



பிரதமர் ராஜீவின் பத்திரிகையாளர் கூட்டம் முடிந்த கையோடு, ஒரு கால் கடுதாசியை நீட்டி ராஜிநாமாச் செய்த தன்மானத் தமிழர் ஏ. பி. வெங்கடேசுவரன் என்பது அனைவருக்கும் தெரியும். வெளியுறவுக் காரியதரிசிகளில் இவ்வளவு பரபரப்பை வேறு யாரும் ஏற்படுத்தியிருப்பார்களா என்பது சந்தேகம்தான்.

''முன்னாலேயே உங்களை மாற்ற நினைத்திருந்தாராமே, ராஜீவ்?''

''கதை. பத்திரிகையாளர் கூட்டம் முடிந்தவுடன், வெளியுறவு அமைச்சர் என். டி. திவாரியைக் கேட்டேன், 'உங்களுக்கு ஏதாவது தெரியுமா?' என்று. கற்பனையாக வழிந்த கண்ணீரைத் துடைத்துவிட்டுக் கொண்டு, 'தெரியாதே!' என்றார். காபினெட் செக்ரடரி தேஷ்முக்கைக் கேட்டேன்; அவரும் தமக்கு எதுவும் தெரியாது என்றார். அப்புறம் என்ன சப்பைக்கட்டு வேண்டியிருக்கிறது?''

''58 வயது. அல்லது பிரதமரின் பிரஸ் கான்ஃபரன்ஸ் – எது முதலில் வருகிறதோ அப்போது பதவி விலக வேண்டும் என்று யாருக்கும் தெரியாத ஒரு சட்டம் இருக்கிறதோ என்னவோ?'' என்று வேடிக்கையாகக் கேட்டபோது, குபீரென்று சிரித்துவிட்டார் வெங்கடேசுவரன்.

நஷ்டம் அவருக்கல்ல, நாட்டுக்கும் ராஜீவுக்கும்தான் என்பதைவிட, இந்தியாவில் ஹிந்துஜா ஃபவுண்டேஷனுக்கு அவர் தலைவராகப் பதவியேற்றது மிகப் பெரிய லாபம் என்பதுதான் சரியாக இருக்கும்.

தகப்பனார், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்த ஏ. எஸ். பி. அய்யர். பிறந்தது, இப்போது ஒரிசாவிலிருக்கும் கஞ்சாம் மாவட்டத்தில். மதுரையிலும் சென்னையிலும் பள்ளி; கல்லூரிப் படிப்பு, தாம்பரம்கிறிஸ்துவக்கல்லூரியில்பி.எஸ்ஸி.

''பி.எஸ்ஸி முடித்ததும்தொடர்ந்துகெமிஸ்ட்ரியே படி' என்றார் அப்பா. எனக்கு எகனாமிக்ஸ் படிக்க விருப்பம். 'கெமிஸ்ட்ரி தான் படித்துவிட்டேனே, பொருளாதாரம் எனக்குத் தெரிய வேண்டும்' என்றேன். தகப்பனார் சம்மதித்தார். அப்புறம் பிரசிடென்ஸியில் எகனாமிக்ஸ் படித்தேன்.''

லண்டன் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸில் மேற்கொண்டு படிக்க டாடா ஸ்காலர்ஷிப் கிடைத்தது. அதே 1951 - இல் இந்திய வெளியுறவுத் துறை பணிக்குத் தேர்ந்தெடுக்கப் பட்ட சேதியும் வந்தபோது சற்று யோசித்தார். பிறகு வெளியுறவுத் துறையையே தேர்ந்தெடுத்தார்.

''ஏன்?''

''பல நாடுகளையும், அதன் மக்களையும் பற்றி அறிந்து கொள்ளவும், நம் நாட்டின் அரசியல் கொள்கைகளை நுணுக்கமாக அறியவும் இதில்தான் வாய்ப்பு இருக்கிறது. மற்ற நாடுகளுடன் உறவாட நாம் எந்த நிலையை எடுக்கிறோம் என்பதும் முக்கியமானது. நான் ஒருவிதத்தில் அதிர்ஷ்டசாலி. பலதரப்பட்ட பதவிகளை, பலவிதமான நாடுகளில் வகிக்கும் வாய்ப்பு எனக்கு நிறையவே கிடைத்தது.

செக்கோஸ்லவேக்யா, நைஜீரியா, எதியோபியா, சீனப் போரின் போது சீனாவில், மாஸ்கோ, மேற்கு ஜெர்மனி, பிஜி தீவுகள், தெற்கு பஸிபிக் தீவுகள், மாஸ்கோ மறுபடி (இந்திய சோவியத் நட்புறவு ஒப்பந்தம் கையெழுத்தாகிற போது); வாஷிங்டன், சிரியா, ஜெனிவா, மறுபடி சீனா, கடைசியாகத் தில்லியில் வெளியுறவுக் காரியதரிசி.

இலங்கைப் பிரச்னை பற்றிப் பேச்சுத் திரும்பிய போது, ''அங்குள்ள வம்சாவழித் தமிழர்களையும் கலந்து ஆலோசித்தல்லவா

ஒப்பந்தம் போட்டிருக்க வேண்டும்? குறைந்த பட்சம் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியை இதில் ஈடுபடுத்தியிருக்க வேண்டாமோ?" என்று கேட்டார் ஏ. பி. வி. 'ஒப்பந்தமே ஜெயவர்த்தனே தயாரித்து அமெரிக்க ஒப்புதல் பெற்றது' என்றார்!

"இரண்டு தவறுகளுக்கு இந்தியா பொறுப்பு ஏற்க வேண்டும். முதலாவது, பட்டி கொலோவாவில் சிங்களர்களைக் குடியேற வைத்தது. இது உடன்பாட்டுக்கு எதிரானது. இரண்டாவது, பதினேழு விடுதலைப் புலிகளை யாழ்ப்பாணத்துக்கு இலங்கைக் கடற்படையினர் கொண்டு வந்த பிறகு அவர்களைக் கொழும்புக்குக் கூட்டிச் செல்ல இந்தியப்படை அனுமதித்தது. அப்போது வெடித்த வெடிப்பில் பிரபாகரனேகூடத் தன் ஆட்களை அடக்க முடியாத அளவுக்குப் பிரச்னை பூதாகாரமாகிவிட்டது. இந்தியா இந்தப் பதினேழு பேரைக் காக்க வேண்டிய பொறுப்பைக் கைகழுவி விட்டது எந்த அளவுக்கு நியாயம்?" என்று கேட்டார் வெங்கடேசுவரன்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த அரசாங்க அதிகாரிகள் பற்றி இவர் என்ன நினைக்கிறார்?

"புத்திசாலிகள் என்று இந்தியா முழுக்கப் பெயர் எடுத்தவர்கள். திறமைசாலிகள் என்று புகழப்பட்டவர்கள். ஆனால் திறமை மட்டும் போதாது. நேர்மையும் துணிவும் தேவை. துணிவுதான் எந்தத் தவறையும் அநீதியையும் தட்டிக் கேட்க முடியும். அநியாயத்தை எதிர்த்து நிற்கும் நேர்மையும் நெஞ்சுறுதியும் இருக்க வேண்டும். கலபத்தில் காட்டுத் தர்பாருக்குப் பணிந்துவிடக் கூடாது... சமீப காலம் வரை, தமிழ்நாடு நிர்வாகத்தில் மிகச் சிறந்ததாகக் கருதப்பட்டு வந்தது. துரதிர்ஷ்டவசமாக அந்த நிலை இப்போது இல்லை. தரம் குறைந்து வருகிறது."

வெங்கடேசுவரனுக்குத் தமிழ் ஆங்கிலம் தவிர, தெலுங்கும், மலையாளமும் தெரியும். படிப்பிலும், இசையிலும் ஆர்வம் உண்டு. சினி இசை — நாடகத்தில் ரசனை உண்டு.

ஜூன் 87 — இல் ஹிந்துஜா ஃபவுண்டேஷனுக்குத் தலைவராகப் பொறுப்பேற்று விளையாட்டுத்துறை, கல்வித் துறை, குடிநீர் வசதி, மருத்துவ வசதி என்று பல திட்டங்களில் முழு ஈடுபாட்டுடன் உழைத்து வருகிறார். அரசு அதிகாரியாய் இருந்ததை விட இப்போது ஏக பிஸி!

"அரசியல் அசுத்தமானது என்று வெறுமனே சொல்லிக் கொண்டிருந்தால் அர்த்தமில்லை. அதில் இறங்கி அதைத் தூய்மைப் படுத்த வேண்டும்!" என்று வெங்கடேசுவரன் சொன்ன போது, வியப்புடன் அவரைப் பார்த்துக் கேட்டோம்.

"தேர்தலுக்கு நிற்கப் போகிறீர்களா என்ன?"


"சென்னையில் நான் நின்றால் எப்படி இருக்கும்?"

"குட் ஐடியா!"

கையைக் குலுக்கினார் வெங்கடேசுவரன். "இரண்டு வோட்டுக்கள் கிடைத்து விட்டன!" என்றார் பலத்த சிரிப்புடன்.

மாதம் ஒரு மாவட்டம்

கல்கி ஏற்கும் சமுதாயப் பணி



மீண்டும் வ. உ. சி. நீலகிரி மாவட்டங்களுக்கு வருகிறோம்!

கடந்த ஆண்டு அக்டோபர், நவம்பர் மாதக் கல்கி இதழ்களில் வ. உ. சி., மற்றும் நீலகிரி மாவட்டப் பிரச்னைகள் பற்றி விரிவாக எழுதியிருந்தோம். கூடவே அந்தந்த மாவட்டக் கலெக்டர் பேட்டியையும் விரிவாக வெளியிட்டிருந்தோம்.

இப்போது அந்தப் பிரச்னைகளெல்லாம் எந்த அளவுக்குத் தீர்க்கப்பட்டிருக்கின்றன? அல்லது இன்னும் தீர்வு காணப்படாமல் உள்ளன? தீர்வு காணப்பட்டவற்றையும் எழுதுங்கள்; தீர்வு காணாதவற்றையும் எழுதுங்கள்.

மீண்டும் நமது நிருபர்கள் வரும் மே மாதத்தில் இந்த இரண்டு மாவட்டங்களிலும் ரீ—விசிட் செய்ய வருகிறார்கள்.

கடிதங்கள் வந்துசேர வேண்டிய கடைசித் தேதி: 20.4.88.

உடனடியாக எழுதியனுப்புங்கள்.

— ஆசிரியர்.

தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு

ஜெயசக்தி

வழங்கும்

அன்பளிப்புகளுடன் இணைந்த


டெபாசிட் சேகரிப்பு விழா!

1-4-1988 முதல் 30-4-1988 வரை

கீழ்க்கண்ட வட்டி விகிதங்களில் பிக்சட் டெபாசிட்டுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

காலம்	வட்டி
6 மாதங்கள்	18%
1 வருடம்	19%
2 வருடங்கள்	20%
3 வருடங்கள்	21%

முதலீட்டுத் தொகை	சிறப்புப் பரிசு
ரூ. 1,00,000	டயனோரா B/W டி.வி. அல்லது ரூ. 3000/- ரொக்கம்
ரூ. 50,000	கிரைண்டர் அல்லது ரூ. 1500/- ரொக்கம்
ரூ. 25,000	காஸ் அடுப்பு அல்லது ரூ. 750/- ரொக்கம்
ரூ. 10,000	பிரஷர் குக்கர் அல்லது ரூ. 300/- ரொக்கம்
ரூ. 5,000	மில்க் குக்கர் அல்லது ரூ. 150/- ரொக்கம்



அன்பளிப்பின் விவரம் :-

* மூன்று வருடத்திற்கு குறையாமல் டெபாசிட் செய்பவர்களுக்கு மட்டும் மேற்கண்ட சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும்.
* 3 வருடத்திற்கு குறைவாக டெபாசிட் செய்பவர்களுக்கு 2% CASH INCENTIVE மதிப்புள்ள பொருள்கள் வழங்கப்படும்.

ஜெயசக்தி பைனான்சியர்ஸ்

(FIRM)

39, நடேசன் தெரு, (2வது மாடி) சிவா-விஷ்ணு கோவில் அருகில்
தி.நகர், சென்னை-600 017. போன் : 442218

விபரம் வேண்டுவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

- சென்னை :- 39, நடேசன் தெரு, (2வது மாடி) தி.நகர், போன் :- 442218
- திருச்சி :- 22, மதுரை ரோடு.(முதல் மாடி) ராஜா தியேட்டர் அருகில், போன் :- 31376/33397
- கோயமுத்தூர் :- 666, ராஜா தெரு, (முதல் மாடி) போன் :- 34369
- மதுரை :- 41, வடக்கு வெளி வீதி, (முதல் மாடி) [illegible], போன் :- 37233
- பாண்டிச்சேரி :- 11, நேரு தெரு, (ஸ்டேட் பேங்க் எதிரில்) 2வது மாடி, போன் :- 26493/26471
- திருநெல்வேலி :- 18-K, மீரான் காம்ப்ளக்ஸ், ஸ்வாமி நெல்லையப்பர் ஹைரோடு, போன் :- 25785/25702
- தஞ்சாவூர் :- எண். 2 & 3 முதல் மாடி, [illegible] ரோடு, போன் :- 21626/22286
- பெங்களூர் :- 24/1-A, மார்கோஸா ரோடு, (10வது கிராஸ்) மல்லேஸ்வரம், போன் :- 366971
- கும்பகோணம் :- 12, கிழக்கு சாரங்கபாணி தெரு, போன் :- 22647
- திருவண்ணாமலை :- 14/A, ஆனைக்கட்டி தெரு, போன் :- 2483
- பட்டுக்கோட்டை :- 121/B, [illegible] தெரு, போன் :- 453
- தூத்துக்குடி :- 10 & 11, விக்டோரியா சாலை,
- வேலூர் :- "[illegible] காம்ப்ளக்ஸ்" 40, [illegible] தெரு.
- ஈரோடு :- 10, முதல் தெரு, காந்திபுரம், மூலப்பட்டறை.

LOTUS/38/88/Tam

பொன்னியின் செல்வன்

பூர்வ கதை

ஆயிரத்து நூறு ஆண்டுகளுக்கு முன்பு சோழ நாட்டின் சிறு பகுதியை ஆண்டு வந்த விஜயாலய சோழன் தஞ்சை முத்தரையர்களிடமிருந்து தஞ்சாவூரைக் கைப்பற்றினான். சோழப் பேரரசுக்கு அவன் அஸ்திவாரம் அமைத்தான். விஜயாலய சோழன் குலத்தில் ஒருவர் பின் ஒருவராகப் பல வீர மன்னர்கள் தோன்றினார்கள். சிதம்பரம் கோயிலுக்குப் பொற்கூரை வேய்ந்த முதலாவது பராந்தக சக்கரவர்த்தி பாண்டிய நாட்டையும் ஈழத்தில் பெரும் பகுதியையும் வெற்றி கொண்டார். வடக்கே வடபெண்ணை வரையில் அவருடைய ஆதிக்கம் வியாபித்தது. பராந்தகரின் அந்திய காலத்தில் வடக்கேயிருந்து இரட்டை மண்டலத்து மாபெரும் சைன்யம் சோழ நாட்டின் மீது படையெடுத்து வந்தது. பராந்தகரின் மூத்த புதல்வர் இராஜாதித்யர் அரக்கோணத்துக்கு அருகில் உள்ள தக்கோலத்தில் அந்த மாபெரும் சைன்யத்துடன் வீரப் போர் புரிந்து உயிர் துறந்தார். யானைமீதிருந்தபடியே இறந்தபடியால் 'யானை மேல் துஞ்சிய தேவர்' என்று புகழ் பெற்றார். இராஜாதித்யர் இறந்தார் எனினும் இரட்டை மண்டலத்துப் படையெடுப்பு அதனால் தடுக்கப்பட்டது.

பராந்தக சக்கரவர்த்திக்குப் பிறகு அவருடைய இரண்டாவது புதல்வர் கண்டராதித்தர் சிம்மாதனம் ஏறினார். அச் சமயம் அவருக்குப் பிள்ளை இல்லை. ஆகையால் அவர் தமது சகோதரர் அரிஞ்சய சோழரின் புதல்வரான சுந்தர சோழருக்கு இளவரசுப் பட்டம் சூட்டினார்.

கண்டராதித்தர் சிறந்த சிவ பக்தர். முதிர்ந்த வயதில் அவர் மழவரையர் மகளை மணந்து கொண்டார். செம்பியன் மாதேவி என்ற பெயருடன் விளங்கிய இக் கோமகளும் சிவ பக்தியில் சிறந்தவள். கண்டராதித்தரின் அந்திய காலத்தில் செம்பியன் மாதேவிக்கு ஒரு புதல்வன் பிறந்தான். அவனுக்கு மதுராந்தகன் என்று பெயர் சூட்டினார்கள்.

பழைய ஏற்பாட்டின்படி கண்டராதித்தருக்குப் பிறகு அரிஞ்சயர் சிங்காதனம் ஏறி ஒரு வருஷத்துக்குள் உயிர் துறந்தார். அவருக்குப் பிறகு சுந்தர சோழர் சிங்காதனம் ஏறினார். சுந்தர சோழரின் காலத்தில் சோழ சாம்ராஜ்யம் மீண்டும் வளர்ந்து பரவலாயிற்று.

சுந்தர சோழர் திருக்கோவலூர் மலையமான் மகளாகிய வானமாதேவியை மணந்து கொண்டார். இவர்களுக்கு ஆதித்த கரிகாலன், அருள்மொழிவர்மன் என்னும் இரு புதல்வர்களும் குந்தவைப் பிராட்டி என்னும் புதல்வியும் பிறந்தார்கள்.

ஆதித்த கரிகாலன் இளம் பிராயத்திலேயே மகா வீரன் எனப் புகழ் பெற்றான். மதுரையில் மீண்டும் தலைதூக்க முயன்ற வீரபாண்டியனைப் போரில் கொன்று 'வீரபாண்டியன் தலை கொண்டவன்' என்னும் பட்டமும் பெற்றான். பின்னர் இவன் பட்டத்து இளவரசனாகிக் காஞ்சியில் வசித்து வந்தான். காஞ்சியில் இவன் ஒரு பொன் மாளிகை கட்டினான். சுந்தர சோழர் காஞ்சிக்கு வந்து அந்தப் பொன் மாளிகையில் சில காலம் தங்கியிருக்க வேண்டும் என்று கோரி, வந்தியத்தேவன் என்னும் வாலிப வீரனிடம் தந்தைக்கு ஓலை கொடுத்து அனுப்பினான்.

அச்சமயம் சுந்தர சோழர் தஞ்சாவூர் அரண்மனையில் பாரிச வாயு நோயினால் பீடிக்கப்பட்டுப் படுத்த படுக்கையாயிருந்தார். தஞ்சையில் பழுவூர்க் குறுநில மன்னர்களாகிய பெரிய பழுவேட்டரையர் சின்னப் பழுவேட்டரையர் என்னும் சகோதரர்கள் மிகச் செல்வாக்குப் பெற்றிருந்தார்கள். இவர்களுடைய அனுமதியின்றி யாரும் சுந்தர சோழரைப் பார்க்க அனுமதிக்கப்படுவதில்லை.

பெரிய பழுவேட்டரையர் அறுபது வயதுக்கு மேல் நந்தினி என்னும் பெண்ணை மணந்து கொண்டிருந்தார். நாட்டில் பலருக்கும் அருவருப்பை அளித்த இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு பெரிய பழுவேட்டரையரின் அறிவும் இராஜ பக்தியும் தடுமாற்றமடைந்தன. சோழ குலத்தின் மீது நந்தினி துவேஷங் கொள்ளச் சில அந்தரங்கக் காரணங்கள் இருந்தன. குந்தவைப்பிராட்டி நந்தினியை



* 1950 இல் எழுதியது.

அவமதித்து அலட்சியம் செய்தது நந்தினியின் பகைமையை வளர்த்தது. இதிலிருந்து சோழ சாம்ராஜ்யத்தில் ஒரு பெரிய சதியாலோசனை தொடங்கியது. பழுவேட்டரையர்கள் கடம்பூர் சம்புவரையர்கள் முதலிய சோழ சாம்ராஜ்யத்தின் குறுநில மன்னர்களும் பெருந்தரத்து அதிகாரிகளும் இந்தச் சதியாலோசனையில் ஈடுபட்டார்கள். இவர்கள் சுந்தர சோழருக்குப் பிற்பாடு அவருடைய சந்ததிகளுக்குப் பட்டமில்லாமல் செய்து, கண்டராதித்தரின் புதல்வர் மதுராந்தகத் தேவருக்கு முடி சூட்டுவதென்று முடிவு செய்தார்கள்.

இந்த நிலைமையில், சுந்தர சோழரின் வம்சத்தை அடியோடு நிர்மூலம் செய்வதென்று கொலைகாரக் கூட்டம் ஒன்று மந்திரவாதி ரவிதாஸனின் தலைமையில் வேலை செய்து கொண்டிருந்தது. இந்தக் கூட்டத்தாருக்கு வேண்டிய பொருள் உதவியைப் பழுவூர் ராணி நந்தினி அந்தரங்கமாக அளித்து வந்தாள்.

வந்தியத் தேவன் காஞ்சியிலிருந்து தஞ்சை போகும் வழியில் கடம்பூர் மாளிகையில் ஓர் இரவு தங்கியிருந்த போது பழுவேட்டரையர்களின் சதியாலோசனையைப் பற்றித் தெரிந்து கொண்டான். அவன் பழுவூர் ராணி நந்தினியைத் தஞ்சைக்கு அருகில் தற்செயலாகச் சந்தித்தான். அவளுடைய உதவியினால் தஞ்சைக் கோட்டைக்குள் பிரவேசித்துச் சுந்தர சோழரைப் பார்த்து ஓலையையும் கொடுத்தான். அவரிடம் சதியாலோசனையைப் பற்றி எச்சரிக்கை செய்ய யத்தனித்த போது தஞ்சைக் கோட்டைத் தளபதியான சின்னப் பழுவேட்டரையர் வந்து தடுத்து விட்டார். பிறகு வந்தியத் தேவன் தஞ்சைக் கோட்டையிலிருந்து பொக்கிஷ சாலைச் சுரங்க வழியின் மூலம் தப்பித்து வெளியேறிப் பழையாறையை அடைந்தான். அங்கே குந்தவை தேவியிடம் தான் அறிந்த விவரங்களைக் கூறினான். குந்தவையின் செல்வத் தம்பியும் பின்னால் இராஜராஜன் என்று சரித்திரப் பிரசித்தி பெற்றவனுமான அருள்மொழி வர்மன் அச்சமயம் இலங்கையில் போர் நடத்திக் கொண்டிருந்தான். அவனை உடனே புறப்பட்டு வரும்படி ஓலை எழுதிக் குந்தவை வந்தியத் தேவனிடம் அதைக் கொடுத்து அனுப்பினாள். 'பொன்னியின் செல்வ!' என்று அந்த ஓலை ஆரம்பமாகியிருந்தது.

அருள்மொழி வர்மன் குழந்தையாயிருந்த போது பெற்றோர்களுடன் காவேரி நதியில் உல்லாசப் படகில் போய்க் கொண்டிருந்தான். அப்போது நதியில் மிதந்த பூவை எடுக்கக் குனிந்து வெள்ளத்தில் விழுந்து விட்டான். அவனை ஒரு ஸ்திரீ தண்ணீரிலிருந்து எடுத்துக் காப்பாற்றிப் படகில் சேர்த்து விட்டு உடனே மறைந்து விட்டாள். அவள் யார் என்பது தெரியவில்லை. ஆகையால் காவேரி அம்மன்தான் அவ்விதம் மானிடப் பெண் உருவில் தோன்றிக் குழந்தையைக் காப்பாற்றினாள் என்று பலரும் நம்பினார்கள். இதனால் அவனுக்குப் 'பொன்னியின் செல்வன்' என்ற காரணப் பெயர் ஏற்பட்டது.



வந்தியத்தேவன் கோடிக்கரை சென்று அங்கே பூங்குழலி என்னும் பெண்ணின் உதவியால் ஈழ நாட்டை அடைந்தான். பொன்னியின் செல்வனைச் சந்தித்து ஓலையைக் கொடுத்தான். இருவரும் சந்தித்த தட்சணமே பரஸ்பரம் அழியா நேயம் கொண்ட நண்பர்கள் ஆயினர்.

இலங்கையில் தங்கியிருந்த சில தினங்களில் வந்தியத் தேவன் சில அதிசயமான விவரங்களை அறிந்தான்.

சுந்தர சோழர் பட்டத்து இளவரசராவதற்கு முன்னால் இலங்கையை அடுத்த பூதத்தீவில் சிலநாள் தங்கும்படி நேர்ந்தது. அங்கே அவரைத் தாக்க வந்த ஒரு கரடியிடமிருந்து ஒரு பெண் அவரைக் காப்பாற்றினாள். அவள் பிறவி ஊமையும் செவிடுமான பெண். ஆயினும் அவளிடம் சுந்தர சோழர் காதல் கொண்டார். விரைவில் அந்த ஊமைப் பெண்ணை அவர் பிரிந்து போகும்படி நேர்ந்தது.

அந்த ஊமைப் பெண்தான் பின்னொரு காலத்தில் குழந்தை அருள்மொழி வர்மரைக் காவேரி வெள்ளத்திலிருந்து காப்பாற்றியவள் ஆவள். அருள்மொழிவர்மர் இலங்கையில் சோழ சைன்யத்துடன் வந்து தங்கியிருந்தபோது மேற்கூறிய ஊமை ராணி அவரை மற்றும் பல அபாயங்களிலிருந்து தப்புவித்தாள். அவள் எழுதிக் காட்டிய சித்திரங்களிலிருந்து அவள் தமது பெரியன்னை முறைமையிலுள்ளவள் என்பதைப் பொன்னியின் செல்வர் உணர்ந்தார். அவளுக்குப் பிறந்த இரட்டைக் குழந்தைகள் என்னவானார்கள் என்பதைப் பற்றியும் அருள்மொழிவர்மர் சில ஊகங்களைச் செய்து கொண்டார். ஆகையால் தம் தந்தையைச் சந்தித்து இவ்விவரங்களைச் சொல்ல வேண்டுமென்று அவர் மிக்க ஆர்வம்

கொண்டிருந்தார்.

பொன்னியின் செல்வரைப் பழையாறைக்கு அழைத்துப் போவதற்காக வந்தியத்தேவன் வந்த அதே சமயத்தில் அவரைக் காஞ்சிக்கு அழைத்துப் போவதற்காக ஆதித்த கரிகாலனின் அந்தரங்க நண்பனும் படைத்தலைவனுமான பார்த்திபேந்திரனும் வந்திருந்தான். தற்சமயம் தஞ்சைக்கும் பழையாறைக்கும் போவது அனர்த்தமாக முடியும் என்று கூறிக் காஞ்சிக்கு வர வேண்டுமென்று பார்த்திபேந்திரன் வற்புறுத்தினான்.

எங்கே போவது என்பது பற்றி இளவரசரின் மனத்தில் போராட்டம் நடந்து கொண்டிருந்தபோது, பூங்குழலி என்னும் பெண் ஒரு விந்தையான செய்தியைக் கொண்டு வந்தாள். சுந்தர சோழரின் கட்டளையின் பேரில் இளவரசரைச் சிறைப்படுத்தித் தஞ்சைக்குக் கொண்டு போவதற்காகப் பழுவேட்டரையர்களின் ஆட்கள் பலர் இரண்டு மரக்கலங்களில் வந்திருப்பதாக அவள் தெரிவித்தாள்.

உடனே இளவரசர் ஒரு முடிவுக்கு வந்தார். ''நானே வலியச் சென்று அவர்களிடம் என்னை ஒப்புக் கொடுத்து விடப் போகிறேன்'' என்றார். அதைத் தடுப்பதற்குக் கொடும்பாளூர் பெரிய வேளாராகிய சேநாதிபதி விக்கிரம கேசரியும் பார்த்திபேந்திரனும் முயன்றார்கள். அவர்கள் முயற்சி கைகூடவில்லை. இளவரசர் பிடிவாதமாகப் புறப்பட்டு விட்டார். வழிகாட்டுவதற்காகப் பூங்குழலியையும் அவர் அழைத்துப் போனார்.

இவர்கள் போய்ச் சேர்வதற்குள் அந்த மரக்கலங்களில் ஒன்று தரை தட்டிச் சேற்றில் அமிழ்ந்து விட்டது. இன்னொரு மரக்கலத்தை அராபியர்கள் சிலர் கைப்பற்றிக் கொண்டு போனார்கள். அந்தக் கப்பலில் இளவரசர் போகிறார் என்று தவறாக எண்ணி வந்தியத் தேவன் முரட்டுத்தனம் செய்து அதில் ஏறிக் கொண்டான். அவனை அராபியர்கள் பிடித்துக் கட்டிப் போட்டார்கள். அதே கப்பலில் ஏறியிருந்த மந்திரவாதி ரவிதாஸனும் அவனுடைய தோழனும் அராபியர்களைக் கொன்று விட்டு வந்தியத் தேவனைத் தனியாகக் கப்பலில் விட்டு விட்டுப் படகில் ஏறிச் சென்றார்கள். அச்சமயம் அகோரமான சுழற் காற்று வந்து கப்பலைத் தாக்கியது.

வந்தியத்தேவன் அக்கப்பலில் போவதை அறிந்து பொன்னியின் செல்வர் பார்த்திபேந்திரனுடைய கப்பலில் ஏறி அதைப் பின் தொடர்ந்து சென்றார். இந்தக் கப்பலும் சுழற் காற்றில் அகப்பட்டுக் கொண்டு தத்தளித்தது. ஆயினும் கப்பலைச் செலுத்தக் கைதேர்ந்த மாலுமிகள் இருந்தபடியால் சமாளித்துக் கொண்டார்கள்.

வந்தியத் தேவன் தனியாக இருந்த கப்பலின் பாய்மரத்தின் மேல் இடி விழுந்து அது பற்றி எரியத் தொடங்கியது. அதனால் ஏற்பட்ட வெளிச்சத்தில் வந்தியத்தேவனைப் பார்த்து விட்ட அருள்மொழி வர்மர் அவனைக் காப்பாற்றுவதற்காகப் படகில் ஏறிச் சென்றார். மலை போன்ற அலைகளுடன் போராடிக் கொண்டு சென்று அவனைக் காப்பாற்றினார். ஆனால் அவர்கள் பின்னர் ஏறிய படகின் பேரில், முழுகிய கப்பலின் பாய் மரம் ஒன்று தாக்கிப் படகு உடைந்து போய் விட்டது. இருவரும் அப் பாய் மரத்தைப் பிடித்துக் கொண்டு மிதந்து வந்து பூதத் தீவை நெருங்கினார்கள். அச்சமயம் பூங்குழலி படகு விட்டுக் கொண்டு வந்து அவர்களைக் கரை சேர்த்துக் காப்பாற்றினாள்.

அதே சமயம், சுழற்காற்றில் அகப்பட்டுக் கொண்ட இரண்டு கப்பல்களில் ஒன்று தீப்பிடித்து எரிந்து மூழ்கியதையும் மற்றொன்று தத்தளித்ததையும் பார்த்து வந்து சொன்ன மீனவர்களின் செய்தியால், அப்போது நந்தினியோடு நாகைப்பட்டினம் வந்திருந்த பெரிய பழுவேட்டரையர் மிகவும் கலவரமடைந்தார். இளவரசரைத் தஞ்சைக்கு வரவழைக்கும் உபாயமாகச் சக்கரவர்த்தியின் அனுமதி பெற்று, இளவரசருக்கு எவ்விதத் தீங்கும் நேராமல் கைது செய்து கொண்டு வரும்படி வீரர்களை அனுப்பியது அவர்தாம் என்பதால் அவருடைய கலக்கம் அதிகமானது. அதனால் இளவரசரின் நிலை பற்றிய செய்திகளை அறியப் பதற்றத்தோடு கோடிக் கரைக்குப் புறப்பட்டு வந்தார். அவருடன், தான் இலங்கைக்கு அனுப்பிய மந்திரவாதி ரவிதாஸன் பற்றிய செய்திகளை அறிய நந்தினியும் புறப்பட்டு வந்தாள்.

வந்தியத்தேவனையும் அருள்மொழி வர்மரையும் பூங்குழலி காப்பாற்றி விட்ட விவரத்தை அறியாத பார்த்திபேந்திரன், வந்தியத்தேவனைக் காப்பாற்றுவதற்காகத் தனது கப்பலிலிருந்து படகில் இறங்கிக் கடலில் சென்ற இளவரசர், ஒருவேளை கோடிக் கரைக் கடற்கரைக்கு வந்து சேர்ந்திருப்பாரோ என்ற எதிர்பார்ப்பில், தானும் கோடிக்கரைக்கு வந்து சேர்ந்தான். அங்கு பெரிய பழுவேட்டரையரைச் சந்தித்து நடந்தவற்றைத் தான் அறிந்தபடி சொன்னான். அதே சமயம் நந்தினியைக் கண்டு அவள் அழகில் சித்தம் பறி கொடுத்தான். பெரிய பழுவேட்டரையரோ இவன் கூறிய செய்திகளால் மேலும் கலக்கமுற்றார்.

பிறகு, நடந்த விஷயங்கள் அனைத்தையும் தஞ்சை சென்று சக்கரவர்த்தியிடம் நேரில் கூறப் பார்த்திபேந்திரனையும் அழைத்துக் கொண்டு, நந்தினி சகிதம் பெரிய பழுவேட்டரையர் புறப்பட்ட நேரம், கோடிக் கரைக் காட்டுப் பகுதியிலிருந்து ஆந்தையின் குரலில் மந்திரவாதி ரவிதாஸன் மூன்று முறை குரல் கொடுத்துச் சமிக்ஞை செய்யவே, அதைப் புரிந்து கொண்ட நந்தினி தனது சாகசத்தால் பெரிய பழுவேட்டரையரின் தஞ்சைப் பயணத்தை அடுத்த நாளுக்குத் தள்ளி வைக்கச் செய்தாள்!



பொன்னியின் செல்வன்

நாலாம் அத்தியாயம்

தாழைப் புதர்

நடுக்கடலில் படகு தொட்டில் ஆடுவது போல் உல்லாசமாக ஆடிக் கொண்டு சென்றது. இரண்டு நாளைக்கு முன்னால் அங்கே தென்னை மர உயரம் அலைகள் எழும்பி விழுந்தன என்று கற்பனை செய்வதே கடினமான காரியம்.

படகில் இளவரசர் பொன்னியின் செல்வரும் வந்தியத்தேவனும் பூங்குழலியும் இருந்தனர்.

பூங்குழலியின் கையில் துடுப்பு இருந்தது. ஆனால் அதை அவள் விசையாகப் போடவில்லை. வந்தியத்தேவனுக்கும் இளவரசருக்கும் நடந்த சம்பாஷணையை உற்றுக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

அவர்களும் பேச்சில் கவனமாக இருந்தார்கள். படகு விரைவாகப் போகவேண்டுமென்று ஆவல்கொண்டவர்களாகத் தோன்றவில்லை.

படகு கோடிக்கரை சேர்ந்த பிறகு என்ன செய்ய வேண்டும் என்பது பற்றித்தான் அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். இளவரசர் தஞ்சாவூருக்குப் போகக்கூடாது என்றும், பழையாறைக்கு வரவேண்டும் என்றும் வந்தியத்தேவன் வாதிட்டுக் கொண்டிருந்தான். அதற்குப் பல காரணங்களை அவன் எடுத்துச் சொன்னான்.

"தங்கள் சகோதரி தங்களை மிக அவசர காரியமாகப் பார்க்க விரும்புகிறார். தங்களைக் கையோடு அழைத்துக் கொண்டு வருவதாக வாக்களித்திருக்கிறேன். அதை நிறைவேற்றி வைக்க வேண்டும்" என்று மன்றாடினான்.

"உன் வாக்கை நிறைவேற்றுவதற்காக என் தந்தையின் கட்டளையை மீறச் சொல்லுகிறாயா?" என்று இளவரசர் கோபமாகக் கேட்டார்.

"அது தங்கள் தந்தையின் கட்டளையில்லை; பழுவேட்டரையரின் கட்டளையல்லவா?" என்றான் வந்தியத்தேவன்.

அதோடு இன்னொன்றும், சொன்னான்: "சக்கரவர்த்தியைத் தாங்கள் பார்க்கப் போவதாயிருந்தாலும் சுதந்திரமாகப் பார்க்கப் போவது நல்லதா? பழுவேட்டரையர்களின் சிறை

அமரர் கல்கி

யானியாகப் பார்க்கப் போவது நல்லதா? நான் சொல்கிறேன், கேளுங்கள். 'தங்களைப் பழுவேட்டரையர்கள் சிறைப்படுத்தியிருக்கிறார்கள்' என்ற செய்தி பரவ வேண்டியதுதான். சோழ நாட்டு மக்கள் எல்லாரும் திரண்டு எழுந்து வந்துவிடுவார்கள். தங்களுடைய அருமைத் தாய்நாடு ஒரு பயங்கர ரணகளமாகிவிடும். அது நல்லதா என்று எண்ணிப் பாருங்கள்! அப்படிப்பட்ட கேடு சோழ நாட்டுக்கு ஏற்படக் கூடாது என்றுதான் கடவுளே பார்த்து அந்தச் சுழற்காற்றை ஏவி விட்டிருக்க வேண்டும். கடவுளின் விருப்பத்துக்கும் விரோதமாகத் தாங்கள் சோழ நாட்டில் கலவரத்தை உண்டாக்க விரும்புகிறீர்களா?'' என்று கேட்டான் வந்தியத்தேவன்.

அவ்வளவு நேரமும் அவன் சொல்லி வந்த வாதங்களுக்குள் இது இளவரசரின் மனத்தை ஓரளவு மாற்றியது. தம்மைப் பழுவேட்டரையர்கள் சிறைப்படுத்தியிருக்கிறார்கள் என்று தெரிந்தால் சோழ நாட்டில் கலவரம் உண்டாவது சாத்தியந்தான். மக்களுக்குத் தம்மிடம் உள்ள அபிமானம் எவ்வளவு மகத்தானது என்பது அவருக்கு ஒருவாறு தெரிந்துதானிருந்தது. ஆகையால் இளவரசர் சிந்தனையில் ஆழ்ந்தார்.

சிறிது நேரத்துக்குப் பிறகு ''அப்படியே உன் விருப்பத்தை நிறைவேற்ற நான் முடிவு செய்தாலும் அது எப்படி சாத்தியம்? கோடிக்கரையில் பழுவேட்டரையர்களின் ஆட்கள் எனக்காகக் காத்துக் கொண்டிருக்க மாட்டார்களா?'' என்று கேட்டார்.

''அதற்கு உதவி செய்ய இந்த ஓடக்காரப் பெண் இருக்கிறாள். கரையில் எத்தனை பேர் காத்திருந்தாலும் அவர்கள் கண்ணில் படாமல் கோடிக்கரைக் காட்டுக்குள் நம்மைக் கொண்டு போய்ச் சேர்த்து விடுவாள். — பூங்குழலி! நான் கூறியது காதில் விழுந்ததா? அவ்விதம் செய்ய முடியுமா?'' என்று வந்தியத்தேவன் கேட்டான்.

பூங்குழலி அப்போது ஏழாவது சொர்க்க லோகத்தில் இருந்தாள். இளவரசரைக் கடலிலிருந்து காப்பாற்றிப் படகிலேற்றி அழைத்துக் கொண்டு வந்தது அவளுக்கு எல்லையில்லாத உள்ளக் களிப்பை அளித்திருந்தது.

கோடிக்கரை சேர்ந்ததும் அவரைப் பிரிய வேண்டுமே என்ற எண்ணம் இடையிடையே வந்து துன்புறுத்திக் கொண்டிருந்தது. மேலும் அவருக்கு எந்த விதத்திலாவது உதவி செய்ய முடியுமானால், அதைக் காட்டிலும் அவள் பெறக் கூடிய பேறு வேறு என்ன இருக்க முடியும்?

''கோடிக்கரைக்குக் கொஞ்சம் மேற்கே தள்ளிப் படகைக் கொண்டு போனால் அங்கே இருபுறமும் காடு அடர்ந்த கால்வாய் ஒன்று இருக்கின்றது. அதன் வழியாகப் படகை விட்டுக் கொண்டு போகலாம். இருபுறமும் அங்கே சதுப்பு நிலம். சுலபமாக யாரும் வர முடியாது!'' என்று பூங்குழலி சொன்னாள்.

''எங்களை அங்கே விட்டு விட்டு நீ கோடிக்கரை போய்த் தகவல் விசாரித்துக் கொண்டு வர முடியும் அல்லவா?''

''முடியும். படகை ஒருவரும் பார்க்க முடியாதபடி நிறுத்துவதற்கு எத்தனையோ இடம் இருக்கிறது.''

''இளவரசே! கேட்டீர்களா?'' என்றான் வந்தியத்தேவன்.

''கேட்டேன், அப்பா! என்னுடைய தாய் நாட்டில் என்னைத் திருடனைப் போல் பிரவேசிக்கச் சொல்லுகிறாய். திருடனைப் போல் ஒளிந்திருக்கச் சொல்லுகிறாய்'' என்றார்.

படகில் சற்று நேரம் மௌனம் குடி கொண்டிருந்தது. பிறகு இளவரசர் ''சமுத்திர குமாரி! ஏன் படகை அடியோடு நிறுத்தி விட்டாய்?'' என்று கேட்டார்.

பூங்குழலி வந்தியத்தேவனைப் பார்த்து விட்டுத் துடுப்பை வலிக்க ஆரம்பித்தாள்.

''பாவம்! இந்தப் பெண் எத்தனை நேரம் தனியாகத் துடுப்பு வலிப்பாள்? நான் கொஞ்சம் தள்ளிப் பார்க்கிறேன். இங்கே கொடு, அம்மா, துடுப்பை!'' என்றான் வந்தியத்தேவன்.

அவனுடைய எண்ணத்தை அறிந்த இளவரசர் புன்னகை புரிந்தார்.

''நண்பனே! உன்னுடைய சூழ்ச்சிகள் எல்லாம் வீண்தான். நான் பழையாறைக்கும் போகப்போகிறதில்லை; தஞ்சாவூரையும் பார்க்கப் போகிறதில்லை. கடவுள் என்னைக் கைலாசத்துக்கே அழைத்துக் கொண்டு போய் விடுவார் போலிருக்கிறது!'' என்றார்.

வந்தியத்தேவனும் பூங்குழலியும் பீதியடைந்து இளவரசரை உற்றுப் பார்த்தார்கள். அவர் உடம்பு நடுங்கத் தொடங்கியிருப்பதைக் கண்டார்கள்.

வந்தியத்தேவன் அவர் அருகில் சென்று ''ஐயா! இது என்ன? தங்கள் உடம்பு ஏன் நடுங்குகிறது?'' என்று கேட்டான்.



"இது குளிர் காய்ச்சல், அப்பனே! இலங்கையில் இந்தக் காய்ச்சல் அதிகம் பரவியிருக்கிறது என்று சொன்னேனே, ஞாபகம் இல்லையா? இந்தச் சுரம் வந்தவர்கள் பிழைப்பது அரிது!" என்று சொன்னார் இளவரசர்.

கடல் நடுவில் கப்பலின் பாய்மரம் இடி விழுந்து பற்றிக் கொண்ட போது கூட வந்தியத்தேவன் அவ்வளவு கலக்கம் அடையவில்லை. இளவரசரின் வார்த்தைகள் அவ்வளவாக அவனை இப்போது கதி கலங்கச் செய்து விட்டன.

பூங்குழலியின் கையிலிருந்து துடுப்பு தானாக நழுவி விட்டது. உடம்பில் ஜீவ சக்தி அடியோடு மங்கி விட்டது. கண்களில் மட்டும் உயிரின் ஒளி தோன்றியது. அந்தக் கண்களினால் இளவரசரை வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

இளவரசரின் உடல் நடுக்கம் அதிகமாகிக் கொண்டேயிருந்தது. சிறிது நேரத்துக்கெல்லாம் தூக்கித் தூக்கிப் போட ஆரம்பித்தது.

"ஐயா! நான் என்ன செய்யட்டும்? சொல்லுங்கள்! ஒன்றும் புரியவில்லையே? படகை எங்கே கொண்டு போகட்டும்? பூங்குழலி! கோடிக்கரையில் வைத்தியர் இருக்கிறார் அல்லவா?" என்று வந்தியத்தேவன் பதறினான்.

பூங்குழலியோ பேசாமடந்தை ஆகியிருந்தாள்.

இளவரசர் திடீரென்று குதித்து எழுந்தார். நடுங்கிக் கொண்டிருந்த அவர் உடம்பு இப்பொழுது நிற்க முடியாமல் தள்ளாடியது.

"என்னை என் தமக்கையிடம் கொண்டு போங்கள்! என்னை உடனே இளையபிராட்டியிடம் கொண்டு போங்கள்!" என்ற வார்த்தைகள் அவருடைய வாயிலிருந்து குளறலாக வெளிவந்தன.

இதைக் கேட்ட வந்தியத்தேவன் குதூகலம் அடைந்தான். அந்தக் குதூகலத்தில் இன்னது செய்வது என்று தெரியாமல் திகைத்து நின்றான்.

நடுக்கத்துடன் ஆடிக் கொண்டு நின்ற இளவரசர் அடுத்த கணத்தில், "அக்கா! இதோ வருகிறேன்! உன்னைப் பார்க்க இதோ வருகிறேன். யார் தடுத்தாலும் இனிமேல் கேட்க மாட்டேன்!" என்று சொல்லிக் கொண்டே படகிலிருந்து கடலில் பாயப் போனார்.

நல்ல வேளையாக, வந்தியத்தேவன் அப்போது, நிலைமை இன்னதென்பதை உணர்ந்தான். இளவரசர் சுரத்தின் வேகத்தினால் சுய உணர்வு இழந்து விட்டார் என்பதை அறிந்து கொண்டான். கடலில் பாயப்போனவரைச் சட்டென்று பிடித்து நிறுத்தினான்.

ஏற்கெனவே மிக்க பலசாலியான இளவரசர் இப்போது சுரத்தின் வேகத்தினால் பன்மடங்கு அதிகபலம் பெற்றிருந்தார். வந்தியத்தேவனுடைய பிடியிலிருந்து திமிறிக் கொள்ள முயன்றார். தன்னால் மட்டும் அவரைத் தடுக்க முடியாது என்பதை வந்தியத்தேவன் கண்டு, "பூங்குழலி! பூங்குழலி! சீக்கிரம் ஓடி வா!" என்று அலறினான்.

செயலற்று நின்ற பூங்குழலி உயிர் பெற்றாள். ஒரு பாய்ச்சல் பாய்ந்து இளவரசர் அருகில் வந்து அவரைக் கடலில் விழாமல் தடுப்பதற்காக ஒரு கரத்தைப் பற்றினாள். சுர வேகத்தினால் இளவரசர் பெற்றிருந்த மதயானையின் பலம் உடனே மாயமாய்ப் போய்விட்டது. சின்னஞ்சிறு குழந்தையைப் போல் ஆனார்.

"அக்கா! நீ சொல்கிறபடியே பேசாமல் படுத்திருக்கிறேன். என் பேரில் வருத்தப்படாதே. அக்கா! நீ ஒருத்தி இல்லாவிடில் என்னுடைய கதி என்ன?" என்று இளவரசர் கூறிவிட்டு விம்மினார்.

வந்தியத்தேவனும் பூங்குழலியும் இளவரசரை மெதுவாகப் படகில் படுக்க வைத்தார்கள்.,

அதன் பிறகு பொன்னியின் செல்வர் சும்மா படுத்திருந்தார். அவருடைய கண்கள் எங்கேயோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தன. அவருடைய வாயிலிருந்து ஏதேதோ வார்த்தைகள் குழறிக் குழறி வந்து கொண்டிருந்தன. சிலவற்றுக்குப் பொருள் விளங்கின. பெரும்பாலும் சம்பந்தமற்ற வார்த்தைகளாகத் தோன்றின.

இளவரசரிடம் ஆலோசனை கேட்பதில் பயனில்லை என்பதை வந்தியத்தேவன் உணர்ந்தான். இந்த மிகப் பயங்கரமான ஆபத்திலிருந்து பொன்னியின் செல்வரைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு தன் தலையில் சுமந்திருக்கிறது என்பதையும் அறிந்தான். ஆனால் புத்திசாலியான இந்தப் பெண் ஒருத்தி இருக்கிறாள். இளவரசரைப் பாதுகாப்பதில் தன்னைப் போலவே இவளும் கவலை கொண்டவள்தான். பின்னர், எத்தனையோ அபாயங்களிலிருந்து தன்னைத் தப்புவித்த கடவுளின் கருணையும் இருக்கவே இருக்கிறது.

"பூங்குழலி! படகை இனிமேல் வேகமாகச் செலுத்திக் கொண்டு போக வேண்டியதுதானே?" என்றான் வந்தியத்தேவன்.

பூங்குழலியின் கரங்கள் இழந்திருந்த வலிமையை மீண்டும் பெற்றன. படகு துரிதமாகச் சென்றது.

வந்தியத்தேவன் இளவரசரின் அருகிலேயே உட்கார்ந்திருந்தான். மறுபடியும் அவர் சுர வேகத்தில் கடலில் குதித்து விட்டால் என்ன செய்வது என்பதை நினைத்தபோதே அவன் கதி கலங்கியது. ஆகையால் சர்வ ஜாக்கிரதையாக அவரைப் பார்த்துக் கொண்டேயிருந்தான். அதே சமயத்தில் மேலே செய்ய வேண்டியது என்ன என்பதைப் பற்றி அவன் உள்ளம் தீவிரமாகச் சிந்தனை செய்தது.

"பெண்ணே! உனக்கு என்ன தோன்றுகிறது! நாம் துணிந்து கோடிக்கரைக்கே போய்விடலாமா? இளவரசரைப் பாதுகாப்பதற்கு உன் குடும்பத்தார் உதவி செய்வார்கள் அல்லவா?" என்று கேட்டான்.

"ஐயா! இந்தக் காலத்தில் யாரை நம்பலாம், யாரை நம்பக்கூடாது என்று எப்படிச் சொல்ல முடியும்? என் தமையன் மனைவி ஒருத்தி இருக்கிறாள். அவள் பணத்தாசை பிடித்தவள். என் தந்தைக்குப் படி அளப்பவர்கள் பழுவேட்டரையர்கள்!" என்றாள் பூங்குழலி.

"மேலும், தங்களைப் பிடிக்க வந்த பழுவூர் ஆட்கள் இன்னும் கோடிக்கரையில் தங்கியிருக்கலாம். இளவரசரின் வரவை எதிர்பார்த்து மேலும் பல புதிய ஆட்களும் வந்திருக்கலாம்!" என்று தொடர்ந்து கூறினாள்.

அவளுடைய முன்யோசனையைக் குறித்து வந்தியத்தேவன் வியப்படைந்தான். இந்த இக்கட்டான சமயத்தில் தனக்கு அவளுடைய உதவி கிடைத்ததை எண்ணி மகிழ்ந்தான்.

"அப்படியானால், நேரே கோடிக்கரைக்குப் போவது அபாயம் என்று நீயும் எண்ணுகிறாயா?" என்றான்.

"அதோ பாருங்கள்!" என்று சுட்டிக் காட்டினாள் பூங்குழலி.

அவள் சுட்டிக்காட்டிய திசையில் கப்பல் ஒன்று நின்று கொண்டிருந்தது. அதற்கு அப்பால் கோடிக்கரைக் கலங்கரை விளக்கின் உச்சியும் தெரிந்தது.

"ஆகா! பெரிய மரக்கலம் ஒன்று நிற்கிறதே! அது யாருடைய கப்பலோ, என்னவோ! ஒருவேளை பார்த்திபேந்திரனுடைய கப்பலாயிருக்கலாம். அப்படியிருக்குமானால், இந்த நிலையில் இளவரசரைக் காஞ்சிக்கு அழைத்துப் போவதே நல்லதல்லவா?"

"பழுவேட்டரையரின் கப்பலாகவும் இருக்கலாம். ஐயா! கப்பலுக்குப் பின்னால் ஏதாவது தெரிகிறதா?"

"கோடிக்கரைக் கலங்கரை விளக்கின் உச்சி தெரிகிறது."

"அதில் ஏதாவது வித்தியாசமாகக் காணப்படுகிறதா?"

"எனக்கு ஒன்றும் வித்தியாசமாய்த் தெரியவில்லையே!"

"எனக்குத் தெரிகிறது. அந்த உச்சியில் கூட்டமாக மனிதர்கள் நின்று கடலை உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது."

"அங்கிருந்து பார்ப்பவர்களுக்கு இந்தப் படகு தெரியுமா?"

"தெரியாது. இன்னும் கொஞ்சம் கரையை நெருங்கினால் தெரியும்."

"எல்லாவற்றுக்கும் நாம் முன் ஜாக்கிரதையாக இருப்பதே நல்லது. நீ முன்னம் சொன்னாயே கோடிக்கரைக்கு மேற்கே கால்வாய் ஒன்று இருக்கிறதென்று? அங்கேயே படகை

விடலாமா?''

''அப்படித்தான் செய்ய வேண்டும். இருட்டுகிற சமயத்துக்கு அங்கே போய்ச் சேரலாம். ஐயா! நீங்கள் ஒரு நாள் இருண்ட மண்டபத்தில் ஒளிந்திருந்தீர்களே? அதற்கு வெகு சமீபம் வரையில் அந்தக் கால்வாய் வருகிறது. இளவரசருடன் தாங்கள் சற்று நேரம் அங்கே தாமதித்தால் நான் போய் எல்லாவற்றையும் விசாரித்துக் கொண்டு விரைவில் வந்து சேருகிறேன்.''

''கால்வாய் அங்கேயே நின்று விடுகிறதா, பூங்குழலி! மேலும் எங்கேயாவது போகிறதா?''

''கோடிக்கரையிலிருந்து நாகப்பட்டினம் வரையில் அந்தக் கால்வாய் போகிறது'' என்றாள் பூங்குழலி.

இந்தச் சமயத்தில் பொன்னியின் செல்வர் சுரவேகத்தில் தமக்குத்தாமே பேசிக்கொண்டது கொஞ்சம் உரத்த சப்தத்துடன் கேட்டது.

''ஆமாம், அக்கா, ஆமாம்! நாகைப்பட்டினத்துப் புத்த பிக்ஷுக்கள் சொன்னதாகக் கூறினாயே? அதன் படியே நடந்தது. அநுராதபுரத்தில் புத்த பிக்ஷுக்களின் மகா சங்கத்தார் எனக்கு இலங்கைச் சிங்காதனத்தையும் கிரீடத்தையும் அளிக்க முன் வந்தார்கள். நான்தான் மறுத்துவிட்டேன், அக்கா! இராஜ்யத்தில் எனக்கு ஆசையில்லாதபடியால்தான் மறுதளித்தேன். நீ வேறு எது சொன்னாலும் கேட்கிறேன். இராஜ்யம் ஆளும் தொல்லை மட்டும் எனக்கு வேண்டாம்! அதைக் காட்டிலும் கடலில் ப்டகு விட்டுக் கொண்டு எவ்வளவோ ஆனந்தமாயிருக்கலாம். கேள், அக்கா! கோடிக் கரையில் ஓடக்காரப் பெண் ஒருத்தி இருக்கிறாள்...''

இதைக் கேட்ட பூங்குழலியின் உடம்பெல்லாம் புளகாங்கிதமடைந்தது. வந்தியத் தேவனுக்கோ ஆத்திரம் வந்தது. மேலே என்ன சொல்லப் போகிறாரோ என்று கேட்க இருவரும் அடங்கா ஆர்வம் கொண்டிருந்தனர்.

ஆனால் திடீரென்று இந்த இடத்தில் இளவரசருக்குச் சுய உணர்வு கொஞ்சம் வந்ததாகத் தோன்றியது.

சுற்று முற்றும் விழித்துப் பார்த்துவிட்டு, ''இன்னும் கோடிக்கரை வரவில்லையா?'' என்று ஈன சுவரத்தில் கேட்டார் இளவரசர்.

வந்தியத் தேவன் ''அதோ கரை தெரிகிறது!'' என்றான். இளவரசரிடம் யோசனை கேட்கலாமா, வேண்டாமா என்று அவன் யோசிப்பதற்குள் மீண்டும் இளவரசர் நினைவை இழந்து சுரப்பிராந்தி உலகத்துக்குப் போய் விட்டார்.

இளவரசர் 'கடைசியாக ஓடக்காரப் பெண்ணைப் பற்றிக் கூறிய வார்த்தைகள் பூங்குழலியின் மனத்தில் எண்ண அலைகளை எழுப்பி விட்டிருந்தன. வந்தியத் தேவனையும் இளவரசரையும் பார்ப்பதற்கே அவளுக்குக் கூச்சமாயிருந்தது. ஆகையால் படகு சென்ற திசையையே பார்த்த வண்ணம் துடுப்பைப் போட்டுக் கொண்டிருந்தாள். அதுகாறும் கப்பல் நின்ற இடத்தை நோக்கிச் சென்ற படகு இப்போது திசை திரும்பித் தென் மேற்குப் பக்கமாகச் சென்று கொண்டிருந்தது.

இருட்டுகிற நேரத்தில் கடலிலிருந்து பூமிக்குள் குடைந்து சென்ற கால்வாயின் உள்ளே பிரவேசித்தது.

பூங்குழலி கூறியது போலவே அங்கே இருபுறமும் கரைகள் உயர்ந்த மேடாக இருந்தன. அந்த மேட்டுக் கரைகளில் மரங்கள் அடர்த்தியாகவும் உயரமாகவும் வளர்ந்திருந்தன.

படகைக் கரையோரமாக நிறுத்திவிட்டுப் பூங்குழலி மெல்லிய குரலில் ''ஐயா! சற்றுப் படகைப் பார்த்துக் கொள்ளுங்கள்!'' என்று சொல்லிவிட்டுக் கரையில் இறங்கினாள். கரையில் வளர்ந்திருந்த உயரமான ஒரு மரத்தின் மேல் ஏறிச் சுற்று முற்றும் பார்த்தாள். பிறகு அவசரமாக இறங்கி வந்தாள். ''நல்ல வேளை!

இங்கே வந்தோம். கடற்கரையோரமாகச் சுமார் ஒரு காத தூரத்துக்கு ஆட்கள் நின்று காவல் புரிகிறார்கள். கலங்கரை விளக்கின் அருகில் ஒரே கூட்டமும் கோஷமுமாக இருக்கிறது!'' என்றாள்.

''யாராயிருக்கும் என்று ஏதாவது தெரிகிறதா?'' என்று வந்தியத்தேவன் ஆவலுடன் கேட்டான்.

''நன்றாய்த் தெரியவில்லை. ஆனால் பழுவேட்டரையரின் ஆட்களாய்த்தான் இருக்க வேண்டும். வேறு யாராயிருக்க முடியும்? எப்படியிருந்தாலும், நான் சொன்ன இடத்துக்கு முதலில் போய்ச் சேருவோம். இரவு இரண்டாம் ஜாமத்துக்குள் நான் என் வீட்டுக்குப் போய் எல்லாவற்றையும் நிச்சயமாய்த் தெரிந்து கொண்டு வருகிறேன்'' என்றாள்.

''பெண்ணே! உன்னை யாராவது பார்த்து விட்டால், என்ன செய்கிறது? உனக்கு ஏதேனும் இச்சமயம் நேர்ந்து விட்டால், எங்கள் கதி அதோ கதிதான்!'' என்றான் வந்தியத்தேவன்.

''ஐயா! என் உயிரைப் பற்றி இத்தனை நாளும் நான் இலட்சியம் செய்ததில்லை. இன்றைக்குத்தான் கவலை பிறந்திருக்கிறது. இளவரசருக்கு அபாயம் நீங்கும் வரையில் என் உயிருக்கு ஒன்றும் வராது!'' என்றாள் பூங்குழலி.

படகு கால்வாய்க்குள் மெள்ள மெள்ளச் சென்றது. சத்தம் சிறிதும் வெளியில் கேளாதபடி மிக மெதுவாகப் பூங்குழலி துடுப்பு வலித்தாள்.

கால்வாயின் இருபுறமும் இருள் சூழ்ந்திருந்தது. கரை ஓரமாக உயர்ந்து வளர்ந்திருந்த மரங்களின் கரிய நிழல்கள் கால்வாயில் விழுந்து அதன் கரிய நீரை மேலும் கரியதாக்கின.

வானத்திலிருந்து விண்மீன்கள் எட்டிப் பார்த்தன. வந்தியத்தேவனைப் போலவே நட்சத்திரங்களும் மிகுந்த கவலையுடன் அப்படகின் போக்கைக் கவனித்ததாகத் தோன்றியது.

நீரில் பிரதிபலித்த நட்சத்திரங்கள், கரையிலிருந்த மரங்கள் காற்றில் ஆடிய போது அவற்றின் நிழலும் ஆடியபடியால், அடிக்கடி சலனமடைந்து கொண்டிருந்தன. வந்தியத்தேவனுடைய உள்ளத்தின் சஞ்சலத்தை அவை சரியாகவே பிரதிபலித்தன.

ஒரு யுகம் போலத் தோன்றிய ஒரு நாழிகை நேரம், படகு கால்வாயில் சென்ற பிறகு பூங்குழலி படகைக் கரையோரமாக நிறுத்தினாள்.

பூங்குழலி கால்வாயின் கரை மீதேறிக் காட்டு வழியில் புகுந்து சென்றாள். அதாவது அவளுடைய உடம்பு சென்று கொண்டிருந்தது. அவளுடைய உயிர் கால்வாயில் விட்டிருந்த படகிலேயே வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

அந்த முன்னிருட்டு நேரத்தில் முட்செடிகள், மேடு பள்ளங்கள், காட்டு ஜந்துக்கள் ஒன்றையும் இலட்சியம் செய்யாமல் அதிவிரைவாக நடந்து சென்றாள். தடைகள் இல்லாத இடங்களில் ஓடவும் செய்தாள். நேரே கோடிக்கரைக் குழகர் கோயிலைக் குறி வைத்துக் கொண்டு போனாள். அவள் கோயில் வாயிலை அடைந்ததற்கும் குருக்கள் சுவாமி சந்நிதியின் கதவைப் பூட்டுவதற்கும் சரியாக இருந்தது.

அக்கம் பக்கம் பார்த்து வேறு யாரும் இல்லை என்று தெரிந்து கொண்டாள். கதவைப் பூட்டி விட்டுத் திரும்பிய குருக்கள் எதிரில் போய் நின்றாள்.

குருக்கள் அவளை அந்த நேரத்தில் பார்த்துச் சிறிது வியப்படைந்தார். அவளுடைய சுபாவத்தை நன்கு அறிந்தவராயிருந்தும் கூடக் கொஞ்சம் திடுக்கிட்டுத் திகைத்துப் போய் விட்டார்.

''நீயா, பூங்குழலி! வேறு யாரோ என்று பார்த்தேன். கோடிக்கரை முழுதும்தான் ஒரே அமர்க்களப்படுகிறதே! எங்கே, அம்மா, உன்னைக் கொஞ்ச நாளாகக் காணோம்? இவ்வளவு தடபுடலிலும் உன்னைப் பற்றித் தகவல் இல்லையே என்று இன்று சாயங்காலம் கூட யோசித்தேன்'' என்றார்.

"வெளியூருக்குப் போயிருந்தேன், சுவாமி! ஏதோ அமர்க்களமாயிருக்கிறதேயென்றுதான் உங்களிடம் விசாரிக்கலாம் என்று வந்தேன். கடற்கரையெல்லாம் நிற்பவர்கள் யார்?" என்று பூங்குழலி கேட்டாள்.

"உனக்கு ஒன்றுமே தெரியாதா? வீட்டுப் பக்கம் போகவில்லையா?"

"வீட்டுப் பக்கம் போனேன். அங்கே யார் யாரோ கூட்டமாயிருக்கவே திரும்பி விட்டேன். புது மனிதர்களைக் கண்டால் எனக்குப் பிடிக்காது என்றுதான் உங்களுக்குத் தெரியுமே? வந்திருப்பவர்கள் யார்?"

"பெரிய பழுவேட்டரையர் வந்திருக்கிறார். அவருடைய இளையராணி வந்திருக்கிறாள். அவர்களுடைய பரிவாரங்கள் வந்திருக்கிறார்கள். இன்னும் காஞ்சிபுரத்துப் பார்த்திபேந்திர பல்லவனும்! அவனும் வந்திருக்கிறான். வெறுமனே வரவில்லை. பயங்கரமான செய்தியுடன் வந்திருக்கிறான். உனக்கு அது கூடத் தெரியாதா, பூங்குழலி?"

"அது என்ன பயங்கரமான செய்தி? எனக்கு ஒன்றுமே தெரியாதே!"

"அந்தப் பாவியினுடைய கப்பலில் இளவரசர் பொன்னியின் செல்வரும் வந்தாராம். வழியில் சுழற்காற்று அடித்ததாம். யாரையோ காப்பாற்றுவதற்காக இளவரசர் கடலில் குதித்து விட்டாராம். பிறகு அகப்படவேயில்லையாம்! ஒருவேளை இந்தக் கடற்கரையில் வந்து ஒதுங்குவாரோ என்று பார்ப்பதற்காகத்தான் பழுவேட்டரையரின் ஆட்கள் கோடிக்கரையெங்கும் அலைகிறார்கள். பழுவேட்டரையரும் அலைகிறார். ஏன், அவருடைய இளையராணி கூட அலைகிறாள். சற்று முன்னால் இங்கே கூட அந்த அம்மாள் வந்திருந்தாள். பூங்குழலி! பழுவூர் இளைய ராணியைப் பற்றி ஜனங்கள் என்னவெல்லாமோ பேசிக் கொள்கிறார்களே, அதெல்லாம் சுத்தத் தவறு! நம் இளவரசருக்கு நேர்ந்த கதியைக் குறித்து அந்த அம்மாள் எப்படித் துடி துடிக்கிறாள் தெரியுமா?"

"அப்படியா, குருக்களய்யா? பழுவூர் ராணியின் நல்ல குணத்தைப் பற்றித் தாங்கள் சொல்வது எனக்குச் சந்தோஷமாயிருக்கிறது. ஆனால் இங்கே எதற்காக அந்த ராணி வந்தாளாம்?"

"இளவரசர் எப்படியாவது உயிரோடு அகப்பட வேண்டும் என்று குழகரைப் பிரார்த்தித்துக் கொள்வதற்காக வந்தாளாம். உன்னைப் போல் எல்லாரும் கல் நெஞ்சு படைத்தவர்களாயிருப்பார்களா? இளவரசரைப் பற்றிய பயங்கரச் செய்தி கேட்டுக் கூட நீ துளிக்கூடக் கலங்கவில்லையே?"

"நாம் கலங்கி என்ன பயன், சுவாமி? எல்லாம் விதியின்படி நடக்கும் என்று நீங்களே எத்தனையோ தடவை சொல்லியிருக்கிறீர்களே! அது போனால் போகட்டும். அவ்வளவு பெரிய மனிதர்கள் வந்திருக்கும்போது நான் என் வீட்டுக்குப் போக விரும்பவில்லை. கையிலே வைத்திருக்கும் பிரஸாதத்தை என்னிடம் கொடுத்து விட்டுப் போங்கள். நான் இங்கேயே சாப்பிட்டு விட்டுக் கோவிலிலேயே இருந்து விடுகிறேன்."

"நீ ஒரு தனிப் பிறவிதான், பூங்குழலி! பெரிய மனிதர்கள் வந்தால் எல்லாரும் அவர்களைப் போய்ப் பார்க்கவும் பழக்கம் செய்து கொள்ளவும் விரும்புவார்கள். உனக்கு வேற்று மனிதர்களையே பிடிப்பதில்லை. அதிலும் பெரிய மனிதர்கள் என்றால் ஒரே பயம். பெரிய மனிதர்கள் என்றால் உன்னைக் கடித்து விழுங்கிவிடுவார்களா? எதற்காக இந்தக் காட்டில் தனியே இருக்க வேண்டும்?"

"குருக்களய்யா! பிரஸாதத்தைக் கொடுக்க உங்களுக்கு இஷ்டமில்லாவிடில் வேண்டாம். என்னை வீணில் திட்டாதீர்கள்!"

"சிவ சிவா! உன்னை ஏன் நான் திட்டுகிறேன்? இந்தப் பிரஸாதம் உன் பசிக்குப் போதாதே என்று பார்த்தேன். தாராளமாய் வாங்கிக் கொள்!" என்று அர்ச்சகர் துணியில் கட்டி வைத்திருந்த சுவாமி பிரஸாதத்தைக் கொடுத்தார்.

மூட்டையை வாங்கிப் பூங்குழலி பிரித்துப் பார்த்துவிட்டு "என் பசிக்கு இது போதாதுதான்! அவ்வளவு பெரிய சுவாமிக்கு இவ்வளவு குறைவாக நைவேத்தியம் வைக்கிறீர்களே! இது நியாயமா, சுவாமி! போனால் போகட்டும்! அந்தக் கெண்டியில் என்ன இருக்கிறது? குடிக்கிற ஜலமா?

"இல்லை, சுவாமிக்கு அபிஷேகம் செய்த பால்! குழந்தைக்காக எடுத்துக் கொண்டு போகிறேன்."

"இன்றைக்கு நானே உங்கள் குழந்தையாயிருக்கிறேன். அதையும் கொடுத்து விட்டுப் போங்கள். உங்களுக்குப் புண்ணியம் உண்டு."

"நல்ல பெண் அம்மா, நீ! போகட்டும். கெண்டியையாவது பத்திரமாய் வைத்திரு!"

இவ்விதம் சொல்லிக் குருக்கள் கெண்டியையும் பூங்குழலியிடம் கொடுத்தார்.

அச்சமயம் தூரத்தில் எங்கிருந்தோ ஆந்தையின் குரல் கேட்டது.

பூங்குழலி சிறிது திகைத்து "ஐயா! அது என்ன சத்தம்?" என்று கேட்டாள்.


"தெரியவில்லையா, அம்மா! கோட்டான் கூவுகிறது. இந்தக் கோடிக்கரைக் காட்டில் கோட்டானுக்கா பஞ்சம்!" என்று சொன்னார் குருக்கள்.

மறுபடியும் அந்தக் குரல் கேட்டது.

"ஆமாம்; கோட்டான் குரல் மாதிரிதான் இருக்கிறது!" என்றாள் பூங்குழலி.

"உன்னை ஒரு கோட்டானும் ஒன்றும் செய்யாது. கோயில் பிராகாரக் கதவைத் தாளிட்டுக் கொண்டு படுத்துக் கொள் அம்மா!" என்று சொல்லி விட்டுக் குருக்கள் நடையைக் கட்டினார்.

குருக்கள் மறைந்ததும் பூங்குழலியும் புறப்பட்டாள். பிரஸாதத்தை மடியில் கட்டிக் கொண்டு, கெண்டியைக் கையில் எடுத்துக் கொண்டு கிளம்பினாள்.



கோட்டானின் குரல் கேட்ட திசையை நோக்கிச் சென்றாள். கொஞ்ச தூரம் போனதும் ஒரு குறுகிய வாய்க்கால் குறுக்கிட்டது. அதன் இரு புறமும் தாழம்பூப் புதர்கள் காடாக மண்டி வளர்ந்திருந்தன.

அந்த வாய்க்காலின் கரையைப் பிடித்துக் கொண்டே பூங்குழலி நடந்தாள். தாழம்பூச் செடிகளின் முட்கள் சில சமயம் அவளைக் குத்தின. அதை அவள் பொருட்படுத்தவில்லை.

தாழம்பூக்கள் வெடித்து மலர்ந்து நறுமணத்தைப் பரப்பின. அந்த மணம் மற்றவர்களைப் போதை கொள்ளச் செய்திருக்கும். ஆனால் பூங்குழலிக்கு அந்த ஞாபகம் கூட வரவில்லை.

கரையோடு காலடிச் சத்தம் கேளாதபடி மெள்ள மெள்ள நடந்து போனாள். அவள் செவிகள் வெகு கவனமாக உற்றுக் கேட்டுக் கொண்டிருந்தன. காட்டுப் பிரதேசத்தில் இரவில் எத்தனையோ விதவிதமான சத்தங்கள் கேட்கும் அல்லவா? அவையெல்லாம் அவளுடைய கவனத்தைக் கவரவில்லை.

பின்னர், அவள் என்ன சத்தத்தைத்தான் எதிர்பார்த்தாள்! இதோ!....

இருவர் மெல்லிய குரலில் பேசும் சத்தம் கேட்டது.

ஒன்று ஆண் குரல்; இன்னொன்று பெண்ணின் குரல்.

பூங்குழலி நன்றாக மறைந்து நின்று கொண்டாள். அவர்கள் பேசுவது இன்னதென்பதைக் கவனமாக உற்றுக் காது கொடுத்துக் கேட்டாள்.

"மந்திரவாதி! இளவரசர் கடலில் விழுந்து இறந்துவிட்டதாகத்தான் உன்னைப் போல் எல்லாரும் நம்புகிறார்கள். பழுவேட்டரையரும் உருகி மாய்கிறார். ஆனால் நான் நம்பவில்லை!" என்று அந்தப் பெண் குரல் கூறியது.

(தொடரும்)



சரோஜா வைத்தியநாதன்

* கோவிந்தராஜன் பிள்ளை



நாட்டியப் பள்ளிகளும் நட்டுவனார்களும்

பரதநாட்டியத்துக்குத் தமிழ் நாட்டுல் மட்டுமல்ல, வடக்கேயும் மேற்கேயும் கூடப் புகழைத் தேடித் தந்தவர்கள் உண்டு. ஆமதாபாத் நகரில் மிருணாளினி சாராபாயின் 'தர்ப்பணா'. பம்பாயில் ராஜராஜேசுவரி நாட்டியப் பள்ளி. டில்லியில்?

'சுப்புடு' சொன்னார்: "சரோஜா வைத்தியநாதனைப் பாருங்கள். நிறையப் பணிகள் செய்து வருகிறார்!"

நாங்கள் அவரைக் காணச் சென்ற போது, ஐந்து மாணவிகள் அவர் வீட்டு ஹாலில் அபிநயம் பிடித்துக் கொண்டிருக்க, சரோஜா வகுப்பு நடத்திக் கொண்டிருந்தார்.

ரமாவும், சுகன்யாவும் தமிழ்; அநுபா கக்கர் மராத்திப் பெண்; நமிதா ஷாவும், பேனு வாலியாவும் பஞ்சாபிப் பெண்கள்.

"பிற மொழி மாணவிகள் நிறையவே பரத நாட்டியம் கற்றுக் கொள்ளுகிறார்கள்" என்கிறார் சரோஜா. 1974ல் டில்லியில் துவங்கிய இவரது கணேஷ் நாட்டியப் பள்ளியில் இவருக்கு உதவியாக இன்று ஆறு பேர் நடனம் சொல்லிக் கொடுக்கிறார்கள்.

திருவல்லிக்கேணி சரசுவதி கான நிலயத்தில் பயின்ற சரோஜா வைத்தியநாதன் பாடவும் செய்வார். நடனத்துக்கேற்ற மாதிரி இவர் பாடியுள்ள பாரதி பாடல்கள் இரண்டு 'காசட்'டுகளாக வந்திருக்கின்றன. 'அஷ்டபதி' விரைவில் வர இருக்கிறது. 'த சைன்ஸ் ஆஃப் பரத நாட்டியம்' நூலை எழுதி வெளியிட்டதோடு, முதல் பிரதியை இந்திரா காந்தியிடம் கொடுத்து வாழ்த்தும் பெற்றார்.

ஆதி சங்கரரின் வாழ்க்கையில் ஒரு பகுதியை நாட்டிய நாடகமாக்கி வழங்கி வருகிறார். வரப்போகும் ஆதி சங்கரர் விழாவில் பிரதமர் முன்னிலையில் நிகழ்ச்சி நடக்கவிருக்கிறது.

குதுப்மினார் அருகே, இன்ஸ்டிட்யூஷனல் ஏரியாவில், தனி ஆளாக நின்று அருமையானதொரு கட்டடம் கட்டி முடித்திருக்கிறார். கணேஷ் நாட்டியாலயா என்று பெயர். நாலாயிரம் சதுர அடியில், ஆடிடோரியம், ரிகர்ஸல் ஹால், வெளியூரிலிருந்து நடனக் குழுக்கள் வந்தால் தங்கத் தாராளமான இட வசதி எல்லாம் இருக்கின்றன.

"எப்படி சாதித்தீர்கள்?"

"பதினாறு லட்சம் ஆயிற்று. என் நாட்டியப் பள்ளி மூலம் கிடைத்த தொகை; மத்திய அரசின் உதவி; பீகார் அரசாங்கத்தின் நிதி உதவி, மீதி வங்கிக் கடன்."

'சரோஜா வைத்தியநாதன் ஃபைலா! சீக்கிரம் முடித்து விடுங்கள். இல்லையானால் சத்தியாகிரகம் பண்ணியாவது சாங்க்ஷன் வாங்கி விடுவார்!' என்று இவர் போனாலே அரசாங்க அலுவலகங்களில் சொல்வார்களாம். அலைந்து அலைந்து, உருப்படியாக ஒரு கட்டடம் எழுப்பியிருக்கும் இவருக்குத் தாராளமாகப் பாராட்டு வழங்கலாம். பீகாரில் இவர் முனைந்து நின்று கட்டிய 'கதக்' நடன ஆடிடோரியத்துக்கு 'சரோஜா பவன்' என்றே பெயர் வைத்திருக்கிறார்கள்!

டில்லியில் பரதநாட்டியம் பயிற்றுவிக்கும் இன்னும் சில குறிப்பிட்ட புள்ளிகள்: கோவிந்தராஜன் பிள்ளை; தேவநாதன்; சதாசிவம், தட்சணாமூர்த்தி.

தேவநாதன் பதினைந்து வருடங்களுக்கு முன்பிருந்தே இங்கே பிரபலம். சதாசிவம் வழுவூரார் பாணி. தட்சிணாமூர்த்தி தண்டாயுதபாணி பிள்ளை பள்ளியைச் சேர்ந்தவர்.

இவர்களின் பிள்ளைகளும் நடனம் சொல்லிக் கொடுப்பதில் தேர்ந்தவர்கள். நவீன கல்வியும் பிள்ளைகளுக்கு உதவியிருக்கிறது.

கிரண் சைகல், ஜமுனா கிருஷ்ணன், ஜெயசங்கர் ராதா, தீபா வெங்கட்ராமன் ஆகியோர் கோவிந்தராஜ பிள்ளையின் குறிப்பிடத்தக்க மாணவிகள்.

வர்ணம், பதம், ஜதிஸ்வரங்கள், தில்லானாக்கள் எல்லாம் நிறைய உருவாக்கியிருக்கிறார் கோவிந்தராஜன் பிள்ளை.

கோமளா வரதன் தமக்கே உரிய முறையில் நடன நிகழ்ச்சிகள் வழங்கி வரும் மற்றொரு முக்கிய புள்ளி. பிரதமரின் பெண் பிரியங்காவுக்குப் பரத நாட்டியம் சொல்லித் தருபவர் லீலா சாம்சன்...

டில்லியில் மட்டும் ஐம்பதுக்கும் மேற்பட்ட பரத நாட்டிய ஆசிரியர்கள் இருக்கிறார்கள் என்று கேள்விப்பட்ட போது தூக்கிவாரிப் போட்டுத்தான் செய்தது!

ரகுவுக்கு எரிச்சலாக வந்தது.

இதென்ன பிழைப்பு? அவன் அந்தச் செய்தித் தாளில் சேர்வதற்கு முன்னால் கண்ட கனவுகளென்ன, இப்பொழுது நடப்பதென்ன?

பெரிய தொழில் நிறுவனங்கள் செய்யும் பொருளாதார மோசடிகள், அரசியல் சூழ்ச்சிகள், பெரிய இடத்து லஞ்சங்கள், ஆகியவற்றையெல்லாம் அம்பலப்படுத்தி ஒரு பிரமாதமான இன்வெஸ்டிகேடிவ் ஜர்னலிஸ்ட் என்று குறுகிய காலத்தில், பேர் எடுக்க வேண்டுமென்று திட்டமிட்டிருந்தான்.

அலுவலக வாசலில் வாகனத்தை நிறுத்திவிட்டு, 'லிஃப்டி'ல் ஏறிச் சென்று தன் இடத்தில் போய் உட்கார்ந்தான்.

டெலிபோனில் 'பைபை' சொல்லிக் கொண்டிருந்த தீப்தி, புன்னகையுடன் அவனை நோக்கி வந்தாள்.

"ஹாய், தீப்தி... ஓர் அழகான கற்பனை, சொல்லட்டுமா?"

"உன் சந்தோஷத்தை நான் உடனேயே கெடுக்க விரும்பவில்லை, சொல்..."

"வானவில்லைப் பார்த்தாலும், நம் 'சீஃப்' 'விப்ஜியார்' என்று முணுமுணுப்பாரே யன்றி, அதன் அழகை ரசிக்க மாட்டார்.

நீரீடகீப் வே(ரீ)ட்டி

ஆனால், இந்த நான்கு வருஷங்களில் அவன் சாதித்ததென்ன? குட்டி மந்திரிகளின் திறப்பு விழாச் சொற்பொழிவுகள், கீழ்க் கோர்ட்டுகளில் நடக்கும் கொலை, விபசாரக் கேஸ்கள், துர்க்கா பூஜை, ராம் லீலா உற்சவங்கள், ஆகியவற்றைப் பற்றித் தான் எழுத வேண்டிய அவலமான நிலை! அவன் பணிபுரிந்து வந்த அப்பத்திரிகையில் வேண்டுமென்றே சதி செய்கிறார்கள், அவன் திறமை வெளியே தெரியக் கூடாதென்று!

வேலையை விட்டுவிட்டு, ஆசிரியர் வேலைக்குப் போகலாமென்றால், அதுவும் இப்பொழுது முடியாது. 'பி. எச்டி. பட்டம் கேட்கிறார்கள். அவனுக்குத் தெரியும், இவ்வாராய்ச்சிப் பட்டங்களின் யோக்கியதை! ஓர் அரசியல்வாதி அவன் ஆசைநாயகிக்கு எழுதிய அந்தரங்கக் கடிதங்களைப் பற்றிக் கூட, ஆராய்ச்சி செய்து டாக்டர் பட்டம் பெற்று விடலாம்.

அவன் 'ஸ்கூட்டரை' நிறுத்தினான். சிவப்பு விளக்கு. அவன் கற்பனையில் ஒரு கவிதை உதயமாயிற்று.

'சிவப்பு கௌதமர்களின்
சீற்றத்தில்
சிலையாகிப்
பச்சை ராமர்களின்
பார்வையில் குளித்துப்
பாய்ந்தோடும் அகலிகைகள்'

புதுக்கவிதை! இதைப் புதுக்கவிதையென்று ஏற்றுக் கொள்வார்களா? மோனை இருக்கிறதே! பிரசுரமாவதற்கு இதுவே தடையாகவுமிருக்கலாம்.

பச்சை எரிந்தது.

அவன் ஸ்கூட்டரை உதைத்துக் கிளப்பினான்.

உன் புன்னகையைப் பார்த்ததும்; வானவில்லின் ஞாபகம் வந்தது."

"என் அருமைக் கவிஞனே! நம்முடைய 'சீஃப்' இப்பொழுதிருக்கும் மனநிலையில், 'விப்ஜியார்' என்று முணுமுணுப்பாரா, இல்லையாவென்று எனக்குத் தெரியாது. ஆனால் உன்னைப் பார்த்ததும், வண்ணம் வண்ணமான வசவுகள் வானவில்லைப் போல, அவர் வாயிலிருந்து வர இருக்கின்றன என்று மட்டும் எனக்குத் தெரியும்."

அவன் தன் கைக்கடிகாரத்தைப் பார்த்தான்.

"அரை மணி 'லேட்.' அதுகூடப் பரவாயில்லை. இன்று நம் செய்தித் தாளைப் படித்தாயா?"

"அந்த வழக்கம் மட்டும் எனக்குக் கிடையாது. ஏன்?"

"மாதர் சங்கத்தில் நடந்ததே. அந்த ஆண்டு விழா..."

"ஆமாம்... காது பெரிதாய், தொந்தி பானை மாதிரி, அவர் பேரென்ன, அகர்வால், அந்தக் குட்டி மந்திரிதான் 'சீஃப் கெஸ்ட்'... அதைப் பற்றி நான்தான் எழுதினேன்...

தீப்தி, மௌனமாக, அவன் மேஜையிலிருந்த செய்தித்தாளை எடுத்து, அவன் 'ரிப்போர்ட்' பிரசுரமாகியிருந்த இடத்தைச் சுட்டிக் காட்டினாள்.

'Chief guest' என்பதற்குப் பதிலாக, **'Chief pest'** என்று அதிலிருந்தது.

"மைகாட்! இது 'பிரிண்டர்ஸ் டெவில்.' யாருமே 'ப்ரூஃப்' பார்க்கவில்லையா?"

"நீ டைப் அடித்ததும், 'பெஸ்ட்'தான். இப்பொழுது அந்தத் தாள் நம் 'சீஃப்' மேஜையிலிருக்கிறது. இதற்கு என்ன சொல்வார்கள், 'சைகாலஜி'யில், அடி மனத்து அபிப்பிராயமா?"

"இதற்காகத்தான், உடனேயே உன் சந்தோஷத்தைக் கெடுக்க விரும்பவில்லை' என்

இந்திரா பார்த்தசாரதி

றுயா?''

தீப்தி புன்னகை செய்தான்.

''நான் இப்பொழுது என்ன செய்யலாம் என்கிறாய்?''

''அவரைப் போய்ப் பார்.... நீ வந்ததும் வரச் சொன்னார்...''

அவன் எழுந்து போய் அவர் அறைக் கதவை இலேசாகத் தட்டினான்.

''கம் இன்!''

மல்ஹோத்ரா பஞ்சாபி. அவருக்கு ரகுவைப் பார்த்ததும், ஆங்கிலம் கைகொடுக்கவில்லை. இந்திய மொழிகளிலே, பஞ்சாபிதான் வசை மொழியில் வளம் வாய்ந்தது என்று அவனுக்குத் தெரியும். அதை நன்கு உணரும் அனுபவம் அவனுக்கு அப்பொழுது ஏற்பட்டது.

புயலடித்து ஓயும் வரை, அவன் மௌனமாக இருந்தான்.

''சரி, நான் உன்னிடம் ஒரு முக்கியமான பொறுப்பை ஒப்படைக்கிறேன், ஒழுங்காகச் செய்வாயா?''

''எஸ் ஸார்...''

அவர் கூறியது அவனுக்குச் சிறிது வியப்பாக இருந்தது. 'மாநில முதலமைச்சராக இருப்பதற்குத் தகுதியில்லை' என்று கூறிவிட்டு, ஒருவரை மத்திய மந்திரியாக்கிப் பொறுப்பான துறைகளை அவரிடம் ஒப்படைப்பது போலல்லவா இருக்கிறது இவர் செய்கை' என்று ரகு தன் மனத்தில் நினைத்துக் கொண்டான்.

மல்ஹோத்ரா தம் 'பைப்'பில் புகையிலைத் தூள்களை நிரப்பிக் கொண்டார். நெருப்புப் பெட்டியை எடுத்துக் குச்சியைக் கிழித்துப் பற்ற வைத்துக் கொண்டார்.

''நீ சிகரெட் பிடிப்பதில்லை, அப்படித்தானே?'' என்றார் அவர்.

''இல்லை.''

''பத்திரிகை உலகில் இருந்து கொண்டும், இளைஞனாக இருந்தும், நீ சிகரெட் பிடிக்கவில்லை என்பது ஆச்சரியந்தான்!''

''என் அப்பா நிறையப் பிடித்தார். அதனால் சிகரெட் மீதே எனக்கு ஒரு வெறுப்பு வந்துவிட்டது. என் சிறு வயதில் அவர் என்னைச் சிகரெட் மணத்துடன் முத்தமிடும் பொழுதெல்லாம் எனக்கு அருவருப்பாக இருக்கும்.''

''இப்பொழுதும் பிடிக்கிறாரா?''

ரகு பேசாமலிருந்தான்.

''ஐ ஆம் ஸாரி... உன் அப்பா போய் விட்டார், இல்லையா? எனக்கு மறந்து போய் விட்டது. அவர் எதனால் இறந்தார், மாரடைப்பாலா?''

''கான்ஸர்.''

மல்ஹோத்ரா 'பைப்'பை மேஜையின் மீது வைத்துவிட்டுச் சில விநாடிகள் அவனை உற்றுப் பார்த்தார். பிறகு புன்னகையுடன் கூறினார்: ''ஓ. கே. நம் வேலைக்கு வருவோம். நீ இந்த வேலையைப் பொறுப்புடன் செய்ய வேண்டும். நீ கெட்டிக்காரன். திறமை இருக்கிறது. எந்தச் சின்ன வேலையாக இருந்தாலும், அதை ஒரு சவாலாக ஏற்றுக் கொள்ள வேண்டிய மனப்பக்குவம்தான் இல்லை...''

''சின்ன வேலையில் சவால் எது?''

''அதுதான் தப்பு. சின்ன வேலையாக இருந்தாலும், அதைச் சிக்கலாக்கி, சவாலாக ஏற்றுக் கொள்ளத் தெரிந்திருக்க வேண்டும்.''

''நீங்கள் அரசாங்கம் செய்து வருவதைப் பற்றிக் கூறுகிறீர்கள். என் கேள்வி, 'ஜர்னலிஸம்' பற்றியது.''

மல்ஹோத்ரா மறுபடியும் அட்டகாசமாகச் சிரித்தார். அவர் சிரிப்பு அவனுடைய அலுவலகத்தில் மிகவும் பிரசித்தம். கோபம் வந்தால் பொரிந்து தள்ளுவதும், சந்தோஷம் ஏற்பட்டால், ஆர்ப்பாட்டமாகச் சிரிப்





பவர்ஹவுஸிலிருக்கும் எலெக்ட்ரிஸிடி நம் அகத்து பல்பில் எரிகிறது என்றால், அதையும் இதையும் கனெக்ட் பண்ண ஒயர் (Wire) இருந்தாக வேண்டும். ரெட்ஹில்ஸ் ஜலம் நம் அகத்தில் கொட்டுகிறது என்றால் இரண்டையும் கனெக்ட் செய்யப் பைப் லைன் இருந்தாகணும். இப்படியே குருவினால் சிஷ்யனுக்குப் புத்திப் பிரகாசம், அறிவு தாரை உண்டாகிறது என்றால் அவரையும் இவனையும் சேர்த்து வைக்க ஒரு 'லிங்க்' இருக்கத்தானே வேண்டும்?

அருள்வாக்கு

குரு வாயால் விஷயங்களை விளக்கினால் அந்தப் பேச்சு ஒரு லிங்க். வாழ்க்கை உதாரணத்தால் புரிய வைத்தால் இதுவும் ஒருவித கம்யூனிகேஷன் தானே? ஆனதால் இதையும் ஒரு Link என்று சொல்ல வேண்டும். வெளிப்படத் தெரிவித்தாலும் உள்ளர்த்தமாகக் காட்டினாலும் சிஷ்யனுடைய அறியாமை போவதற்காகக் குரு பண்ணுகிற எதையும் உபதேசம் என்றே சொல்ல வேண்டும். உபதேசமாகப் பிரசங்கம் பண்ணாமல் வாழ்க்கை உதாரணத்தாலேயே உபதேசித்து விடுவதைத்தான் "Verbal message, இல்லை அவருடைய Life — ஏ message" என்று சொல்வது.

ஆக ஸ்தூலமாகவோ ஸூக்ஷ்மமாகவோ குருவுக்கும் சிஷ்யனுக்கும் 'லிங்க்'காக உபதேசம் என்பது இருக்கிறது.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

பதும், அவருடைய அடிப்படையான எளிய சுபாவத்தைக் காட்டிற்று.

"சரி, நான் சொல்வதைக் கவனமாகக் கேள்."

"சொல்லுங்கள்."

"டில்லியில் 'தென்னிந்திய மாதர் சங்கம்' என்று ஒன்று இருக்கிறது. தெரியுமா, உனக்கு?"

"மறுபடியும் மாதர் சங்கமா?"

"நீ செய்த தப்புக்கு இதுதான் பிராயச்சித்தம். இந்த மாதர் சங்கம், வறட்சி நிவாரண நிதிக்காக ஒரு நடன — இசை நாடகம் போட இருக்கிறது. அகர்வாலின் பிரதமச் செயலாளர் இருக்கிறாரே, மிஸ்டர் கிருஷ்ணசாமி, அவர் மனைவிதான், இச்சங்கத்தின் காரியதரிசி. இதைப் பற்றி ஞாயிறு சிறப்பு மலரில் நீ ஒரு விரிவான 'ஸ்டோரி' எழுத வேண்டும், புகைப்படங்களுடன்... இப்பொழுது அகர்வாலிருக்கும் மனநிலையில் அவரைச் சமாளிக்கக் கூடியவர் கிருஷ்ணசாமிதான். அகர்வால், 'வணிகத்துறை,' ஞாபகமிருக்கட்டும். பத்திரிகை மேலிடத்திலிருந்து நம் மீது சுமத்தப்பட்டிருக்கும் பொறுப்பு இது. இதையும் நீ நினைவு வைத்துக் கொள்ள வேண்டும்."

"இந்நாடகத்தைப் பற்றி விமர்சனம் எழுத வேண்டும், அவ்வளவுதானே?"

"விமர்சனம் மட்டுமில்லை. இதில் அரசாங்க மேலதிகாரிகள் பலருடைய மனைவிகள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் இந்நாடகத்தை எப்படித் தயாரித்தார்கள், இதை ஒட்டிப் பல விவரங்கள், பேட்டிகள், எல்லாம் வேண்டும்."

"நாடகம் எதைப் பற்றி?"

"'சித்தார்த்தன் துறவு!' இதில் நடிக்கப் போகின்றவர்கள் எல்லாரும் பெண்கள். பரத நாட்டியம், ஒடிசி, குச்சிப்புடி, கதகளி, மோகினியாட்டம், மணிப்புரி என்று எல்லாவிதமான நடன வகைகள் சேர்ந்த ஒரு கலைச் சித்திரம் என்று சொன்னார்கள்."

"கதக் மட்டும் எப்படித் தப்பித்தது?"

"டோன்ட் பி ஸினிக்கல்... இதனால்தான், 'கெஸ்ட்' என்பதற்குப் பதிலாக 'பெஸ்ட்' என்று டைப் அடிக்கிறாய்... இதில் ஏதாவது தவறு செய்தால், உனக்கு வேலை போவதோடு மட்டுமல்லாமல், நம் முதலாளிகளுக்கு ஒரு முக்கிய 'இம்போர்ட் பர்மிட்' பெற வாய்ப்பில்லாமல் போய்விடும்."

"சித்தார்த்தன் எதற்காகத் துறவு மேற்கொண்டாரென்று இப்பொழுது புரிகிறது. நம் முதலாளிகளுக்கு 'இம்போர்ட் பர்மிட்' வாங்கித் தர..."

"ப்ளீஸ்... வேலையை ஆரம்பி... புகைப்படம் எடுக்க தீப்தி உன்னுடன் வருவாள். வேலையை ஊக்கத்துடன் செய்வதற்கு இது ஒரு சலுகை" என்று கூறிவிட்டு மல்ஹோத்ரா புன்னகை செய்தார்.

ரகு வெளியே வந்ததும், தீப்தி அவனைக் கேட்டாள்: "உன்னை என்ன ஒரே சிரிப்பும் கொம்மாளமும்!"

ரகு நடந்தவற்றைச் சொன்னான்.

"என்ன இது, என்னைக் கேட்காமல் எப்படி நான் உன்னுடன் வருவேன் என்று அவர் சொன்னார்?" என்று சிறிது கோபத்துடன் கேட்டாள் தீப்தி.

"என்னைக் கேட்காதே. அவரைப் போய்க் கேள். உனக்கு விருப்பமில்லை என்றால் வர வேண்டாம்."

"நீ நான் வரவேண்டுமென்கிறாயா?"

"உன் இஷ்டம்."

"நீ தமிழன். நான் வங்காளி. நீ தென்னிந்திய உயர்தர அதிகாரிகளுடைய குடும்பங்க

ளுடன் தொடர்பு கொள்ள இருக்கிறாய். உனக்கு ஏதாவது வாய்ப்பு ஏற்பட இருந்து, நான் உன்கூட வருவது அதற்குத் தடையாகப் போனால்...?''

''நான் இதற்கு என்ன பதில் சொல்ல வேண்டுமென்று நீ எதிர்பார்க்கிறாய்?'' என்று அவன் ஒரு விஷமப் புன்னகையுடன் அவளைக் கேட்டான்.

''சரி, இது ஒரு சுவாரஸ்யமான அனுபவமாக இருக்கலாம், புறப்படு...'' என்றாள் தீப்தி.

கிருஷ்ணசாமி பண்டாரா ரோடிலிருந்தார். அவர் வீட்டுக்கு போன் செய்தான் ரகு.

''என் பேர் ரகு...பத்திரிகையிலிருந்து பேசுகிறேன். மிஸஸ் கிருஷ்ணசாமியுடன் நான் பேச வேண்டும்.''

''நான்தான் மிஸஸ் கிருஷ்ணசாமி, என்ன வேண்டும்?''

''நீங்கள் ஒரு நடன — இசை நாடகம் தயாரித்து வருகிறீர்கள் என்று கேள்விப் பட்டேன். அது சம்பந்தமாக.....''

''உங்கள் பேர் என்ன சொன்னீர்கள்?''

''ரகு...''

''தமிழரா?''

''ஆமாம்.''

''வீட்டுக்கு வாங்க, பேசலாம்.''

''எப்பொழுது சௌகர்யப்படும்?''

''மத்தியானத்துக்கு மேலே குழந்தைகள் காலேஜிலிருந்து வந்து விடுவார்கள். அப்புறம் நான் 'ஷாப்பிங்' போகணும். சாயந்திரம் 'ரிகர்ஸல்'. இப்போ வர முடியுமா?''

''ஓ.கே.. அரை மணியிலே வரேன்...''

ரகு, தீப்தியுடன், கிருஷ்ணசாமி வீட்டுக்குச் சென்று வாசல் மணியை அழுத்தினான்.

சில விநாடிகளுக்குப் பிறகு, ஒரு வயதான நேப்பாளப் பெண்மணி கதவைத் திறந்தாள்.

''மிஸஸ் கிருஷ்ணசாமி....''

''ஆயியே... மெம் சா(ஹ)ப் ஆரஹி ஹை... பை டி யே...''

விசாலமான 'ஹால்'. அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது.

இருவரும் சோபாவில் உட்கார்ந்தார்கள்.

நேப்பாளப் பெண்மணி ஒரு தட்டில், தண்ணீர்த் தம்ளர்களுடன் வந்தாள்.

''ஷுக்ரியா...'' என்று கூறிக் கொண்டே ரகு ஒரு தம்ளரை எடுத்துக் கொண்டான்.

தனக்கு வேண்டாமென்று கையசைத்தாள் தீப்தி.

''வாங்க, வாங்க'' என்று சொல்லிக் கொண்டே வந்த மிஸஸ் கிருஷ்ணசாமி, தீப்தியை எதிர்பார்க்காதவள் போல் அவளைப் பார்த்தாள்.

இருவரும் எழுந்து கைகளைக் கூப்பினர்.

''என் கலீக், மிஸ் தீப்தி... போட்டோகிராபர்.''

''உட்காருங்கள்... என்ன குடிக்கிறீர்கள்? காப்பியா, 'ஸாப்ட் டிரிங்க்'ஸா?''

''ஒன்றும் வேண்டாம், தாங்க் யூ...'' என்றான் ரகு.

''இப்பொழுதே எதற்கு போட்டோ?''

''நான் இதைப் பற்றி ஒரு விரிவான 'ஸ்டோரி' எழுதலாமென்றிருக்கிறேன். சம்பந்தப்பட்டவர்களுடைய போட்டோ இருந்தால் நன்றாக இருக்கும்...''

''போட்டோ எடுக்கப் போகிறீர்கள் என்று தெரிந்தால், 'ட்ரெஸ்' செய்து கொண்டிருப்பேனே!'' என்று சிரித்துக் கொண்டே கூறினாள் மிஸஸ் கிருஷ்ணசாமி.

அப்பொழுது அவள் நன்றாக அலங்கரித்துக் கொண்டுதானிருந்தாள் என்று ரகுவுக்குப் பட்டது.

''உங்களுக்கு அலங்காரம் தேவையா, என்று எனக்குத் தோன்றுகிறது,'' என்றாள் தீப்தி, காமிராவை எடுத்துக் கொண்டே.

''தாங்க் யூ. யூ ஆர் வெரி கைண்ட்... போட்டோ அப்புறம் எடுத்துக் கொள்ளலாம். முதலில் நாடகத்தைப் பற்றிப் பேசுவோம்... என் பேர் நிர்மலா. உங்கள் பேர் ரகு, உங்கள் பேர் என்ன சொன்னீர்கள்?''

''தீப்தி.''

''வங்காளியா?''

''ஆமாம்.''

''முகத்திலிருந்து தெரிகிறது. நாங்கள் ஏதோ எங்களுக்குரிய நியாயமான வரம்புகளுடனும், குறைகளுடனும், இந் நாடகத்தைத் தயாரித்து வருகிறோம். இதற்கு இவ்வளவு விளம்பரம் தேவையா என்று எனக்குப் படுகிறது.''

''உங்கள் அடக்கம் எனக்குப் புரிகிறது. ஆனால் இதைப் பற்றி எழுதுவது எங்களுக்குப் பெருமை!'' என்றான் ரகு.

நிர்மலா சிரித்தாள். அவள் கன்னங்கள் குழிவடைந்தன.

''காலேஜிலிருந்து குழந்தைகள் வந்து விடுவார்கள் என்றீர்களே, அது எனக்குப் புரியவில்லை'' என்றான் ரகு.

''ஏன்?''

''காலேஜில் படிக்கும் குழந்தைகள் உங்களுக்கிருக்கின்றன என்றால் யாரும் நம்ப மாட்டார்கள்.''

''தாங்க் யூ... எனக்கு ஒரு பையன், ஒரு பெண். பையன் பி.எச்.டி. பண்ணுகிறான். பெண், எம்.ஏ., முதல் வருஷம் படிக்கிறாள்...''

தீப்தி ரகுவைப் பார்த்தாள்.

''ரியலி?'' என்றான் ரகு.

''நாடகத்தைப் பற்றிச் சொல்லுங்கள்'' என்றாள் தீப்தி.


''இது நான் எழுதிய நாடகம். இசை, நடனம், லைட்டிங், ஸ்டேஜ் ஒப்பனை ஆகியவை எல்லாமே என்னுடைய யோசனைகள் தாம். ஆனால் ஒரு கூட்டாக இதைச் செய்யும் போது, நான் ஒருத்திதான் எல்லாவற்றிற்கும் பொறுப்பு என்பது நன்றாக இருக்காது என்பதால், ஒப்புக்காக மற்றவர்களுடைய பெயர்களையும் போட்டிருக்கிறேன். அஃப் கோர்ஸ், கதைக் கருவுக்கு, எட்வின் ஆர்

"ஆளுங்கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் உள்ள வித்தியாசம் என்ன?"

"ஆளுங்கட்சிக்குக் கோபம் வந்தா இன்கம்டாக்ஸ் ரெயிட் நடத்தும். எதிர் கட்சிக்குக் கோபம் வந்தா பந்த் நடத்தும்!"

— பட்டுக்கோட்டை வெங்கடேஷ்.





"வீட்டுப் பொறுப்பு, 'மாமியாருக்கா? மருமகளுக்கா?' என்ற பட்டி மன்றம் நடத்திச்சே! தீர்ப்பு, என்னவாச்சு?"

" 'கணவனுக்குத்தான்'னு முடிவாச்சு!"

— ஆர். அப்துல் சலாம்.

னால்டுக்கும் கடமைப்பட்டிருக்கிறேன்.."

கல்லறையிலிருந்து எட்வின் ஆர்னால்ட் அவள் இவ்வாறு சொன்னதற்காக நன்றி செலுத்துவது போல் ரகுவுக்குத் தோன்றிற்று.

நடிப்பவர்கள்?" என்று கேட்டான் தீப்தி.

"என் பெண் மஞ்சுதான் சித்தார்த்தன். அவளுக்கு பரத நாட்டியம், குச்சுப்புடி, ஒடிஸி, மோஹினியாட்டம், கதகளி எல்லாம் தெரியும். நானே கற்றுக் கொடுத்திருக்கிறேன். நான் சின்ன வயதில் டாக்டர் ராதா கிருஷ்ணனிடமிருந்து நடனத்துக்காகப் பரிசு வாங்கியிருக்கிறேன். அதோ பாருங்கள், அந்தப் படம், அது என் படந்தான்."

"எனக்கு ஒரு சந்தேகம், கேட்கலாமா?" என்றாள் தீப்தி.

"கேளுங்களேன்..."

"சித்தார்த்தன், பரத நாட்டியம், குச்சுப் புடி, ஒடிஸி, மோஹினியாட்டம், கதகளி ஆகிய எல்லா நடன வகைகளையும் ஆடிக் காட்டப் போகிறாரா?"

"ஏன் அதில் என்ன தப்பு?"

"இத்தனை கலை ஆற்றல்களையும் அவருக்குத் தெரிந்திருந்தால், துறவு மனப்பான்மையே அவருக்கு ஏற்பட்டிருக்காது என்று எனக்குத் தோன்றுகிறது.

"நடனம் என்பது ஒரு 'ஸிம் பாலிக் லாங்குவேஜ்! சித்தார்த்தனுக்கு இத்தனை வகை நடனங்கள் தெரியுமா என்பது முக்கியமில்லை. நாடகம், தமிழிலிருந்தால், சித்தார்த்தனுக்குத் தமிழ் தெரியுமா என்று கேட்க முடியுமா?" என்றான் ரகு.

"யூ ஆர் வெரி கரெக்ட்" என்றாள் நிர்மலா.

"இருந்தாலும், கௌதம புத்தரைக் கதகளி ஒப்பனைகளுடன் என்னால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை" என்றான் தீப்தி.

"நாடகத்தை வந்து பாருங்கள். உங்கள் அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்வீர்கள். மஞ்சு மிகப் பிரமாதமாகச் செய்து காட்டப் போகிறாள்."

"மற்றவர்கள்?" என்றாள் தீப்தி.

"அதுதான் சொன்னேனே, எல்லாம் ஒப்புக்குத்தான். உயிரைக் கொடுத்துக் கற்றுத் தருகிறேன். ஆனால் ஓர் இயல்பான திறமை வேண்டாமா? மஞ்சுவைப் போல் செய்யாவிட்டாலும், கொஞ்சம் சுமாராகவாவது செய்தால்தானே என் பேர் கெடாமலிருக்கும்? நிர்மலா சொல்லிக் கொடுத்தும் இப்படியா என்று நாலு பேர் கேட்கக் கூடாதே! அதுவும் உங்கள் பத்திரிகையில் ஒரு விரிவான கட்டுரை எழுத இருக்கிறீர்கள், என் பேரைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டாமா? ஒரு மந்திரி தலைமை தாங்கப் போகிறார். அவருக்கு என்னைப் பற்றி நன்றாகத் தெரியும். நாடகத்தில் மற்றவர்கள் காலைவாரிவிட்டார்களானால், அவர் என்னைப் பார்த்து, 'இது நீங்கள் தயாரித்த நாடகமா?" என்று கேட்டால், நான் முகத்தை எங்கு கொண்டு போய் வைத்துக் கொள்வது. நீங்களே சொல்லுங்கள். நான் பேசிக் கொண்டேயிருக்கிறேனே, ஏதாவதுகுடியுங்களேன், மாங்கோ, பைன் ஆப்பிள்...?"

"தாங்க்யூ... வேண்டாம். யார் அந்த மந்திரி தலைமை வகிக்கப் போகிறவர்?" என்றாள் தீப்தி.

"அகர்வால்.... தெரியுமா உங்களுக்கு? நன்றாகப் படித்தவர், ப்ரொஃபஸர்..."

"ரகுவுக்கு அவரை நன்றாகத் தெரியும்." என்றாள் தீப்தி.

"அப்படியா? 'ஜர்னலிஸ்ட்'களுக்குத் தெரியாமலிருக்குமா? எதிர்க்கட்சிகளுக்குச் சுடச்சுட பதில் சொல்லுவதில் கெட்டிக்காரர். ரகசியமொன்று சொல்லுகிறேன், மந்திரி சபையில் மாற்றங்கள் ஏற்படப் போகின்றன, கூடிய சீக்கிரத்தில். இவருக்கு 'காபினெட்' பதவி நிச்சயம். தயவு செய்து, நான் சொன்னேன் என்று போட்டு விடாதீர்கள்."

"இந்நாடகத்தில் இன்னும் யார் யார் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள்? அவர்களையும் நான் பார்க்க வேண்டும்..." என்றான் ரகு.

"எவ்வளவு தடவை சொல்வது, மற்றவர்கள் யாவரும் ஒப்புக்குத்தானென்று? மிஸஸ் விஸ்வேஸ்வரன்தான் எங்கள் சங்

தராசு பதில்கள்
அடுத்த வாரம்...

கத்துக்குத் தலைவர். விஸ்வேஸ்வரன் யார் தெரியுமா? 'ஹோம் மினிஸ்டிரி'யிலிருந்து ஐந்து வருஷங்களுக்கு முன்னால் ஓய்வு பெற்றுரே, அவரேதான். மூத்த சுமங்கலியாக இருக்கட்டும் என்று கமலா விஸ்வேஸ்வரனைத் தலைவியாகப் போட்டிருக்கிறோம். அவருடைய பேத்திதான் நாடகத்தில் யசோதரா.

''மிஸஸ் கமலா விஸ்வேஸ்வரன், இன்னும் உங்கள் சங்கத்தோடும் நாடகத்தோடும் தொடர்புடைய பிரமுகர்கள் ஆகிய எல்லோரையும் பார்த்து...'' என்று ரகு சொல்லி முடிப்பதற்குள் நிர்மலா குறுக்கிட்டாள்.

''மன்னிக்கவும், இவரிடம் தமிழில் பேச வேண்டும்'' என்று தீப்தியிடம் சொல்லிவிட்டு ஆரம்பித்தாள்: ''இந்தச் சங்கத்தை ஆரம்பிச்சதே நான்தான். பேருக்குக் காரியக் கமிட்டி அது இதுன்னு இருக்கு. இந்தக் கலை நிகழ்ச்சியை ஒரு நல்ல காரியத்துக்காகப் போடுவோம்னு நான் சொன்னதும், நல்ல பேர் வாங்கணும்கிறதுக்காக, 'நான், நீ'ன்னு போட்டி போட்டுண்டு எல்லாரும் தலைக்குத் தலை கிளம்பிட்டா, மத்தவா யாருக்கும் கலைன்னா என்னன்னு, அதைப் பத்தி, 'ஏ பி ஸி டி' கூடத் தெரியாது. 'என் பெண்ணைப் போடு, உன் பெண்ணைப் போடு'ன்னு ஏக ரகளை . இதுக்குள்ளே 'யார் ஆத்துக்காரர் ஸீனியர், யார் ஆத்துக்காரர் ஜூனியர்'ன்னு, செக்ரடேரியட்ல போரூதுன்னு இங்கே வேற படை சண்டை. நீங்க யாரைன்னு போய்ப் பார்ப்பேள்? ஒருத்தரைப் பார்த்தா இன்னொருத்தி சும்மா விட மாட்டா. எல்லார் பேரையும் போட்டாகணும். பேர் மட்டுமில்லே, போட்டோவும் வரணும். எல்லாரையும் திருப்திப் படுத்த முடியுமா? அதுக்காகத்தான் சொல்றேன், இந்த வம்பே வேணும், நான் எழுதின கதை, நான் தயாரிக்கிற நாடகம், என்னைப் பத்தி மட்டும் போட்டு, விட்டுடுங்கோ... ஒருத்தரும் குத்தம் சொல்ல முடியாது... நாடகம் நடக்கிற போது, மஞ்சுவை போட்டோ எடுத்துக்கலாம். எல்லார் பேரை யும் நான் தர்றேன்... பேரைச் சொல்லி ஒரு வரி எழுதினப் போறும். பேட்டி கீட்டிங்கிறதெல்லாம் வேணும். இது நமக்குள்ளே இருக்க வேண்டிய விவகாரம், அந்தப் பொண்ணுக்குத் தெரிவானேன்னு தமிழிலே சொல்றேன்... புரிஞ்சுதா?''

ரகு பேசாமலிருந்தான்.

''என்ன சொல்றேள்?''

''என்ன சொல்றதுக்கிருக்கு? பிரச்னை வரும்னு பேசாம விட்டுட வேண்டியது தான்.''

''சரி... நான் தயார். அந்தப் பெண்ணை போட்டோ எடுக்கச் சொல்லுங்கோ...''

ரகு தீப்தியைப் பார்த்தான்.

தீப்தி நிர்மலாவைப் பல கோணங்களில் புகைப்படம் எடுத்தாள்.

''ஜூஸ் குடித்துவிட்டுப் போங்கள்...''

''இல்லை, வேண்டாம்...'' என்றாள் தீப்தி.

ரகு எழுந்தான்.

''நான் இப்போ சொன்னதையெல்லாம் எழுதிடாதீங்கோ. நீங்க நம்மவராச்சேன்னு மனம் விட்டுப் பேசினேன். உங்களுக்கு எந்த ஊரு?''

''டெல்லிதான். பொறந்து வளர்ந்ததெல்லாம் இங்கேதான்... சரி, வரட்டுமா?''

அவர்கள் வெளியே வந்ததும், தீப்தி கேட்டாள், ''பெண்ணைப் பார்க்க வேண்டாமா?''

''எந்தப் பெண்ணை?''

''பரதநாட்டியம், குச்சுப்புடி, ஒடிசி, மோகினியாட்டம், கதகளி எல்லாம் தெரிந்த மஞ்சுவை...''

''டோன்ட் பி ஸில்லி.''

''நீங்கள் தமிழில் பேசிய போது, ''உங்களுக்குச் சம்மதமா?'' என்று மிஸஸ் கிருஷ்ணசாமி கேட்பது போல் எனக்குப் பட்டது.''

''பொறுமையா?''

''டோன்ட் பி ஸில்லி.''

ரகு, நிர்மலா என்ன சொன்னாள் என்று எடுத்துக் கூறினான்.

''ஒரு வம்பும் வேண்டாம். இதைப் பற்றி எழுதுவதே கால விரயமென்று எனக்குத் தோன்றுகிறது,'' என்றாள் தீப்தி.

''தர்மசங்கடமான நிலைமை. நம் முதலாளிகளுக்கு 'இம்போர்ட் பர்மிட்' கிடைப்பதற்கு வேறு வழி இருக்கிறதா, யோசித்துச் சொல்.''

''இல்லாவிட்டால், உங்களுக்கு இன்னொரு வேலையைப் பார்த்துத் தர வேண்டும்.''

''எது சுலபமோ அதைச் செய்.''

''ரகு, லெட் அஸ் பி ஸீரியஸ். நீ மிஸ்டர் மல்ஹோத்ராவிடம், இந்த நாடகத்தைப் பற்றி எழுதுவதினால் எழப் போகும் பிரச்னைகளைப் பற்றி விளக்கமாகச் சொல். அவர் புரிந்து கொள்வார்.''

அவர்கள் அலுவலகத்தைச் சென்றடைந்தார்கள்.

''தீப்தி, நீயும் என்னுடன் வா. நடந்ததற்கு நீதான் சாட்சி.''

இருவரும் மல்ஹோத்ரா அறைக்குள் நுழைந்தார்கள்.

மல்ஹோத்ரா அவர்களைக் கண்டதும் புன்னகை செய்தார்.

''இந்த நாடகத்தைப் பற்றி எழுத முடியாதென்று எனக்குத் தோன்றுகிறது,'' என்றான் ரகு.

''டோன்ட் வொர்ரி. இந்த 'டெலக்ஸ்' செய்தியைப் படி...''

''மந்திரிசபை மாற்றங்கள். அகர்வால் பதவி நீக்கம்...''


''வாட் எ ரிலீஃப்!'' என்றான் ரகு.

''என் 'ஃபிலிம்'தான் வேஸ்ட்...!'' என்று அலுத்துக் கொண்டாள் தீப்தி.

தங்க கவரிங் நகைகளுக்கு
தன்னிகரற்ற பெயர் ''மேரி''

கண்ணைக் கவரும், அழகும், பொலிவும், தரமும் உத்திரவாதமும் உடைய உலகப் புகழ்பெற்ற 22ct ''மேரி'' தங்க கவரிங் நகைகளை வாங்கி அணிந்து மகிழுங்கள்!

நகைகளின் நம்பர்களைக் குறிப்பிட்டு எழுதினால் வி.பி.பி. மூலம் நகைகள் அனுப்பப்படும். வி.பி.பி. சார்ஜ் தனி. இலவச கேட்லாக்கைப் பெற எழுதுங்கள்!



மேரி கோல்டு கவரிங் ஒர்க்ஸ்

தபால்பெட்டி : 1405, 14, ரங்கநாதன் தெரு,
தி. நகர், சென்னை-600017.

14

'இவன் உன்னவன்; உன் மன்னவன்; நீ நேசிப்பவன்; உன்னை நேசிப்பவன். நீ மணக்கப் போகிறவன்; உன் வாழ்க்கையை மணக்க வைக்கப் போகிறவன். இவனிடம் தாராளமாய்ச் சொல்லலாம். சொல்' — என்று உள் மனத்தில் உத்தரவு பிறந்து, அதைச் செயல்படுத்தும் முயற்சியில் உதடுகள் அசையும் முன்...

'இரு யோசி. இவன் உன் கணவனாகப் போகிறவன்தான். கணவன் இல்லை. இந்த நிமிடம் உன் மேல் சட்டபூர்வ உரிமை இல்லாதவன். இளைஞன். கம்பீரமான ஆண். உன்னை மனப்பூர்வமாக நேசிப்பவன். ஆனால்... நான் உன்னையே சந்தேகப்பட்டு எவனோ ஹரி சொன்ன இடத்திற்குச் சென்று ஏமாந்தேன் என்று உண்மையை அப்படியே சொன்னால், 'பரவாயில்லை நிவிதா, சந்தேகம் மனித புத்தி' என்று சொல்வான் என எதிர்பார்க்கிறாயா?' — என்று கேள்வி எழுப்பியது மற்றொரு உள் குரல்.

அதே போலச் சொல்லி விட்டால் சரி; பிரச்னையில்லை. ஸ்போர்ட்டிவாக எடுத்துக் கொள்வதற்குப் பதிலாக இரண்டு ஆண்டுகளுக்கு மேல் பழகியும் என்னைப் புரிந்து கொண்டது இவ்வளவுதானா என்று ஆத்திரப்பட்டு விட்டால்?

நிவிதா சொல்லலாமா, வேண்டாமா என்று கரைக்குப் போகலாமா இல்லை கடலுக்குத் திரும்பலாமா என்று மாறி மாறி முடிவெடுக்கும் அலைகள் போலத் தவித்தாள்.

வினோத்குமார் தன் கைக் கடிகாரத்தின் ரேடியம் முள்ளைப் பார்த்துக் கொண்டு, "சொல்றேன்னு சொல்லிட்டுச் சரியா எழுபத்தி அஞ்சு வினாடி மௌனம் அனுஷ்டிச்சிட்டே. இன்னும் எவ்வளவு நேரமாகும் நிவி?" என்றான்.

உடனே தீர்மானித்த நிவிதா, "இது ஒரு பெரிய விஷயமில்லை. இதைப் போய் எப்படிச் சொல்றதுன்னுதான் யோசிச்சேன். எனக்குப் புடவை பார்சல் வந்திச்சில்லே, அதைப் பத்தி இன்னைக்கு ஒரு ஸ்டாஃப் பொழைக்கத் தெரியாதவள்னு பேசினதாக் கேள்விப் பட்டேன். மூட் அப்செட் ஆயிடுச்சி. அதான், வேற ஒண்ணும் இல்லை" என்றாள்.

"இவ்வளவுதானா? எல்லாரும் ஒரே மாதிரி இருக்க மாட்டாங்க நிவிதா. ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொரு கருத்து இருக்கும். எல்லார்கிட்டேயும் யாரும் நல்ல பேர் வாங்க முடியாது. எல்லாருக்கும் பிடிச்ச காந்திஜியைக் கோட்ஸேக்குப் பிடிக்கலையே... இதுக்கெல்லாம் வருத்தப்பட்டுக்கிட்டிருக்கக் கூடாது."

வினோத் குமார் அவளுக்கும் தனக்கும் நடுவில் இருந்த மணல் வெளியில் இரண்டு கைகளாலும் காய்ந்த மணலை நீளமாகக் குவித்தான்.

"கமான் நிவி, பைக் சாவியை ஒளிச்சி வச்சிட்டேன். கரெக்டா யூகிச்ச ஒரே முயற்சியில எடுத்துட்டா நான் ஹோட்டல் பில் கொடுத்து விடுகிறேன். எடுக்கலைன்னா நீ கொடுக்கணும். எங்கே, பார்க்கலாம்!"

நிவிதா சற்று சகஜமாகி அந்த நீள மணல் குவிப்பில் யோசித்து, இரண்டு கைகளையும் கோத்துப் பொத்தினாள்.

"நோ. நீ ஏமாந்துட்டே. சாவி இங்கே



ஆகவே செக்ஷன் 302 படி...



"இருக்கு" என்று வினோத் வேறு ஓர் இடத்தில் இருந்து எடுத்துக் காட்டி, "ஸோ, நீதான் பணம் கொடுக்கணும். நான் சொல்ற ஹோட்டல்தான் போகணும். என் இஷ்டப்படி சாப்பிடுவேன்" என்றான்.

"உங்களுக்குச் செலவு செய்யாம வேற யாருக்கு?"

"சரி. நல்ல மூடுக்கு வந்துட்டியா?"

"வந்துட்டேன்."

"நாளைக்குக் காலைல ஏழு மணிக்கு நான் உன் ஹாஸ்டலுக்கு வர்றேன். நீ நம்ம ஃபேவரைட் பச்சைச் சேலை கட்டி ரெடியா இருக்கே. என்னோட புறப்படறே. நேரா எங்க வீட்டுக்கு வர்றோம். எங்க அப்பா, அம்மாகிட்டே அறிமுகப்படுத்தறேன். எல்லாரோடேயும் சேர்ந்து டிபன் சாப்பிடறே. அப்புறம் உன்னை உன் ஆபீஸ்ல விட்டுட்டு நான் போறேன். புரிஞ்சுதா?"

"என்னங்க வினோத். இப்படி திடீர்ன்னு..."

"மருமகளைப் பார்த்தே ஆகணும்னு அப்பாவும், அம்மாவும் வம்பு செய்றாங்க நிவிதா. அப்புறம்... வித்யா சாகருக்கு வேலை கிடைச்சிடுச்சி. நீ சொன்ன கண்டிஷன் ஓவர். அதனால் எப்ப நம்ம கல்யாணத் தேதியை வச்சிக்கலாம்னு சொல்லு."

"இருங்க. இருங்க. அவன் இன்னும் வேலையில் சேரக்கூட இல்லை."

"நாளைக்குச் சேரப் போறார்."

"இது தற்காலிகமான வேலைதான் வினோத்."

"இங்கே பாரு நிவிதா, ஓர் எல்லைக்கு மேலேயே நான் பொறுமையாக இருந்துட்டேன். யோசிச்சுப் பேசு நிவிதா. ஹாஸ்டல் தங்கல், மெஸ் சாப்பாடு இதெல்லாம் அவசியமா? கல்யாணமாய்ட்டா எவனுச்சும் பொக்கேயும், புடைவையும் அனுப்புவானா? விரலையும், கையையும், கன்னத்தையும் மட்டும் தொட்டுக்கிட்டே இருந்தா எப்படி? இன்னும் உடம்புல எவ்வளவு விசேஷங்கள் எல்லாம் இருக்கு? நிவி, நாம் சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கலாம் டார்லிங்!"

சற்று நேரம் அமைதியாக இருந்த நிவிதா, "வினோத், இன்னிக்கு உங்ககூட நிறையப் பேசணும்னு இருக்கிறதாச் சொன்னேனே.. அது இதுதான். நான் பேச நினைச்சதெல்லாம்.. நீங்க பேசிட்டீங்க..." என்றாள் ஒரு துளுக்கு வெட்கத்துடன்.

அப்பாடா! பச்சைக் கொடி காட்டிட்டே."

"ஆனா ஒரு கண்டிஷன்!

"இதானே வேணாங்கிறது.

"கல்யாணம் ரொம்பச் சிம்ப்பிளா இருக்கணும். ஏதாச்சும் ஒரு கோயில்ல கல்யாணம். ரெஜிஸ்ட்ரார் ஆபீஸ்ல பதிவு செஞ்சிக்கிட்டுச் சாயங்காலம் சிம்பிளா நண்பர்களுக்குப் பார்ட்டி."

"குட் ஐடியா. எனக்கும் ஆடம்பரச் செலவுகள் பிடிக்காது நிவி. சரி. தேதி...?"

"அடுத்த வாரம் திருச்சி போறேன் வினோத். அம்மாகிட்டே பேசிட்டு அப்புறம் முடிவு செய்யலாமே அதை."

"சரி. ஹோட்டல் போய் டிபன் சாப்பிட்டுட்டுத் திருவள்ளுவர் பஸ் ஸ்டாண்ட் போனா நேரம் சரியா இருக்கும். புறப்படலாம். அப்புறம்... நீ சொன்ன மாதிரி நம்ம கல்யாணம் சம்பந்தமா நானும் ரெண்டு கண்டிஷன்ஸ் வச்சிருக்கேன்."

"என்ன அது?"

"ஒண்ணு. எந்தக் காரணத்தை முன்னிட்டும் நீ வேலைக்குப் போறதை நிறுத்த வேண்டியதில்லை. தொடர்ந்து போகணும்."

"சரி. எனக்குப் பிடிச்ச விஷயம்தான் இது."

"ரெண்டு. உன் சம்பளப் பணத்தை அப்படியே உங்க அம்மாவுக்கு அனுப்பி வைச்சாகணும்."

நிவிதா நெகிழ்ந்து போனாள். என்ன சொல்வது என்று வார்த்தை வராமல் தவித்துப் போனாள். எத்தனை விசாலமான மனம்! இவர் சொல்படி, நானே அனுப்பினாலும்... திருமணத்திற்குப் பிறகு உன்னிடம் பணம் பெற்றுக் கொள்வது நியாயமில்லை என்று தன்மானமிக்க அம்மா மறுத்து விடுவாள். அது வேறு விஷயம். எத்தனை பேருக்கு இப்படிச் சொல்லத் தோன்றும்? இவரைப் போய் லேசாகச் சந்தேகப்பட்டேனே.. என்னை...

"என்ன பேச மாட்டேங்கறே நிவி?"

"அதை அப்புறம் முடிவு செஞ்சுக்கலாம்!"

"ம்கூம். இப்பவே முடிவு செஞ்சாகணும்."

"நான் அனுப்பத் தயார் — எங்கம்மா வாங்கிக்கத் தயாரில்லை. விடுங்க. அதைப் பத்திப் பின்னால எல்லாருமாப் பேசி முடிவு செய்யலாம். போகலாம். வாங்க" என்று எழுந்து கொண்டாள்.

நாளைக்குக் காலைல ஏழு மணிக்கு ரெடியா இருப்பேதானே?"

"ஈவினிங் வர்றேனே... எதுக்குக் காலையிலேயே...?"

"சொல்ல மறந்துட்டேனா? நாளைக்கு மத்தியானம் புறப்பட்டுக் கோயமுத்தூர் போறேன், பஸ்ல. வர ஆறு நாள் ஆகும். அதனால்தான் காலைல ரெடியா இருக்கச்

— பட்டுக்கோட்டை பிரபாகர் —

பரிசு ரூ. 1000!

இந்தத் தொடர் கதையைப் படித்து வருகிறவர்களுக்கு ஓர் எளிய போட்டியும் அதற்குப் பரிசாக ரூபாய் ஓராயிரமும் காத்திருக்கின்றன!

சுமார் 20 — 22 அத்தியாயங்கள் வரை கதை வளர்ந்ததும் பட்டுக்கோட்டை பிரபாகர் கேட்கும் சில கேள்விகளுக்கு ஓரிரு வார்த்தை பதில்களை ஒரு தபால் கார்டில் எழுத வேண்டும். கூடவே இந்தத் தொடரில் உங்களை மிகவும் கவர்ந்த 'நறுக்'கென்ற நாலு வரிகளைக் குறிப்பிட வேண்டும்.

சுலபமான இந்தப் போட்டிக்குப் பரிசோ ரூ. 1000! மறவாதீர்கள்!

சொன்னேன்!"

"சரி. ரெடியா இருக்கேன்."

இருவரும் கைகோத்து மணலில் அழுந்த நடந்து, சாலைக்கு வந்து பைக்கில் புறப்பட்டதும் சொன்னான். "நீ இருந்த மூட்ல உன் ட்ரெஸ் பத்திச் சொல்லவே இல்லை. உனக்கு நல்லாப் பொருந்துது நிவிதா. நிறைய மாடர்ன் ட்ரெஸ் வாங்கிக்க."

"சரியான ஆளு நீங்க. நிறைய மாடர்ன் ட்ரெஸ் வாங்கித் தர்றேன்னு சொல்ல மனசு வரலை. வாங்கிக்கவாம்!"

"எனக்கு அளவு தெரியாதில்லே. ஓக்கே. கோயமுத்தூர்லேர்ந்து திரும்பி வர்றப்போ உனக்கு ரெண்டு புது ட்ரெஸ் எடுத்துட்டு வர்றேன்."

ஹோட்டலில் டிபன் சாப்பிட்டு விட்டு ஒன்பதரைக்குத் இருவன்ளுவர் பஸ் ஸ்டாண்ட் வந்தார்கள். வித்யா சாகரின் கையைக் குலுக்கிப் பாராட்டினான் வினோத் குமார். போனதும் கடிதம் எழுதச் சொன்னாள் நிவிதா.

அவனைத் தனியாக அழைத்து, "அக்கா, இனிமே வீட்டுப் பிரச்னையைப் பத்தி நீ கவலையே படாதே. எப்பக்கா கல்யாணம் பண்ணிக்கப் போறே?" என்றான் வித்யா சாகர்.

"சீக்கிரம் சொல்றேன் வித்யா. நீ வண்டில ஏறு. டிரைவர் ஏறி உக்கார்ந்திட்டார்."

வித்யா சாகர் ஏறித் தன் இருக்கையில் அமர்ந்து ஜன்னல் வழியாகக் கையசைத்த போது, அவன் கண்களில் ஈரம் கவனித்த நிவிதாவுக்கும் மனம் திடீரென்று சங்கடமாகிப் போனது.

"**உ**ள்ளே வா நிவிதா!" என்றான் பைக்கை நிறுத்திவிட்டு வீட்டின் வாசலுக்கு வந்த வினோத் குமார்.

தயக்கத்துடனும், லேசான நடுக்கத்துடனும், பரீட்சை ஹாலுக்குள் நுழையும் மாணவனின் பதற்றத்துடனும் உள்ளே வந்தாள்.

ஹாலில் ஊஞ்சல் இருந்தது. ஊஞ்சலில் அமர்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்த வினோத் குமாரின் அப்பா நிமிர்ந்து,

"வாம்மா...." என்றார். உள்ளேயிருந்து வந்த, மூக்கில் பேஸரி அணிந்திருந்த அவன் அம்மா வந்து வாஞ்சையுடன் நிவிதாவின் இரண்டு கைகளையும் பிடித்துக் கொண்டு, "வாம்மா ராஜாத்தி!" என்றவர், "இரு" என்று சுவாமி படத்திற்குக் கீழே இருந்த ஸ்டாண்டில் இருந்து குங்குமச் சிமிழ் எடுத்து வந்து அவள் நெற்றியில் சின்னதாக வைத்து விட்டு, "உக்காரும்மா" என்றார்.

நிவிதா தயக்கமாக நின்று கொண்டேயிருந்தாள்.

"நிவிதா, உக்காரு. சகஜமா இரு" என்று சோபாவில் அமர்ந்து கொண்ட வினோத் குமார், "அம்மா, நீங்க உக்காருங்க. மாமியார் நிக்கிறப்போ மருமகள் உக்காருவாளா?" என்றதும்...

"சும்மா உக்காரும்மா கண்ணு!" என்று நிவிதாவின் கையைப் பற்றி அமர்த்தி, அருகில் அமர்ந்து கொண்டார் அவன் அம்மா.

"என்னப்பா வினோத், அற்புதமா விவாதம் பண்ணுவான்னு சொன்னே... ஒரு வார்த்தையைக் கூடக் காணோம்" என்றார் அப்பா.

நிவிதா எச்சில் விழுங்கினாள்.

"இல்லைப்பா, ஒரு மரியாதை கலந்த பயம்."

"ஏம்மா, அப்படியா?"


லேசாகத் தலையசைத்தாள்.

"இங்கே பாரும்மா. மரியாதை இருக்கட்டும். பயம் வேண்டியதில்லை. உன்னைப் பத்தி விலாவாரியா எல்லாம் சொல்லிட்டான். வினோத் குமார் மேல் எங்களுக்கு எப்பவுமே பரிபூர்ண நம்பிக்கை உண்டு. அவனோட செலக்ஷன் எப்பவும் சோடை போகாது. கல்யாண விஷயத்தில் நான் அவன் ஆசைக்குத் தடையா இருக்க விரும்பலை. வாழப் போறது அவன். அவனோட நிறைவுதான் முக்கியம். நீ படிச்ச பொண்ணு, விவரமான பொண்ணு. நல்ல குடும்பத்தைச் சேர்ந்த பொண்ணுன்னு சொன்னான். இதையெல்லாம் விடக் குடும்பப் பொறுப்புணர்ந்த பொண்ணுன்னு சொன்னான். உடனே நான் சரின்னு சொல்லிட்டேன். சரின்னு சொல்லலைன்னாலும் இவன் மனசை மாத்திக்கப் போறதில்லை. என்னம்மா நானே பேசிக்கிட்டிருக்கேன்..."

கண்களில் நீர் ததும்ப, குரல் கம்ம, "இவ்வளவு திறந்த மனசுள்ள உங்க குடும்பத்துக்கு மருமகளா வர்றதுக்கு நான் கொடுத்து வச்சிருக்கணுங்க. எனக்கு என்ன பேசறதுன்னே தெரியலை." என்றாள் நிவிதா.

"வாம்மா, சாப்பிடலாம்" என்று உள்ளே அழைத்துச் சென்றார் அம்மா.


"நீயும் போப்பா. நான் சாப்பிட்டாச்சு" என்ற அப்பா வினோத்குமாரை அருகில் அழைத்து, "நீ ரொம்ப அதிர்ஷ்டம் செஞ்சவன்ப்பா. லட்சணமா இருக்கா பொண்ணு. எவ்வளவு அடக்கம். எவ்வளவு தீர்க்கமான பேச்சு. ஒரு பேச்சுப் பேசினாலும் நெகிழ வச்சிட்டா பாரு. தேதி பார்த்துட வேண்டியதுதானே?" என்று கேட்டார்.



Boost is the secret of my energy!

"பதினைந்து அல்லது இருபது ஓவர்கள் பந்து வீச்சு அல்லது செமத்தியாக அடிக்கும் பேட்டிங், களத்தில் எப்போதும் ஓட்ட சாட்டம், எமது உத்திகளைக் கையாளுதல். இப்படித்தான் என்னுடைய கிரிக்கெட்டை நான் ரசித்து விரும்புகிறேன்.

இதற்கு உடல் தகுதியான நிலையில் இருப்பதும், ஏராளமான சக்தியும் தேவை. அதனால்தான் நான் ஆண்டு முழுவதும் கடினமாகப் பயிற்சி செய்கிறேன். அதனால்தான் நான் பூஸ்ட் குடிக்கிறேன் நாள் தோறும்."





கபில்தேவ் பூஸ்ட் பருகுவதற்குக் காரணம், அது அவருக்குத் தேவையான சக்தியையும் அவர் விரும்பும் சுவையையும் அளிக்கிறது. பூஸ்டில் கிரீம் நிறைந்த பால் மற்றும் ஆரோக்கியமான மால்ட்டின் குண நலன்களுடன் கோக்கோவும் கலந்துள்ளது.

கபிலைக் கேளுங்கள். அது அவரது ரகசியம்.

பூஸ்ட்

இன்சுவைமிக்க சக்தி

HTA 5060 TAM

தன்னம்பிக்கை



ஒவ்வொரு மனிதனும் முதலில் தன்னிடம் நம்பிக்கை வைக்க வேண்டும். என்னால் இயலாது என்று ஒரு நாளும் சொல்லாதீர்கள். நீங்கள் வரம்பில்லா வலிமை பெற்றவர்கள். எதையும், எல்லாவற்றையும் சாதிக்கும் ஆற்றல் படைத்தவர்கள் நீங்கள்.

மனித வரலாற்றை முழுவதும் பார்க்கும் போது ஆணோ, பெண்ணோ வரலாற்றில் சிறப்புடன் விளங்கினார்கள் என்றால் அதற்கு முக்கியக் காரணம் அவர்களது தன்னம்பிக்கைதான் என்று சுவாமி விவேகானந்தர் வீர முழக்கமிடுகிறார்.

ஆனால் நம்மில் பலர் ஓரளவு கல்வித் தகுதியிருந்தும் மற்றவர்களிடம் ஆங்கிலத்தில் பேசத் தயங்குகிறார்கள்.

தவறாகப் பேசி விடுவோமோ என்ற பயமும், முறையான பயிற்சியின்மையுமே இத்தயக்கத்திற்கான முக்கியமான காரணங்களாகும்.

உங்களது இத்தயக்கத்தைப் போக்கி நீங்கள் ஆங்கிலத்தில் சரளமாக உரையாட, இலக்கணப் பிழையின்றி கடிதங்கள், கட்டுரைகள் எழுத விவேகானந்தா கல்வி நிலையத்தினர் தபால் மூலம் மிகச் சிறந்த முறையில் பயிற்சியளித்து வருகிறார்கள். நேர்முகப் பயிற்சியும் உண்டு. இப்பயிற்சியைப் பற்றி மேலும் தகவல் அறிய விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்குக் கடிதம் எழுதி இலவசமாக தகவல் புத்தகத்தைப் பெற்றுப் பயிற்சியில் சேர்ந்து பயன் பெறலாமே!

விவேகானந்தா கல்வி நிலையம் (Regd)
9, மேட்லி ரோடு, தி. நகர், சென்னை-600 017

NAGA

"அடுத்த வாரம் நிவிதா திருச்சி போய் அவங்கம்மாகிட்டே விஷயத்தைப் பக்குவமாச் சொல்லிச் சம்மதம் வாங்கிட்டு வர்றதாச் சொன்னா. அதுக்கப்புறம் தேதி முடிவு செய்யலாம்.

"இன்னொரு காரியம் இருக்குப்பா. அந்தப் பொண்ணு போய்ட்டு வந்ததும் சொல்லு. முறையா நானும், அம்மாவும் திருச்சி போய் அவங்க அம்மாவைச் சந்திச்சுப் பேசிட்டு வந்துடறோம்."

"சரிப்பா" என்று உற்சாகமாக டைனிங் மேஜைக்கு வந்து நிவிதாவுக்கு எதிரில் அமர்ந்து கொண்டு அவளைப் பார்த்துக் கண்ணடித்தான்.

"உங்க தம்பி எங்கே?" என்றாள்.

"அவன் ஒரு கிரிக்கெட் பைத்தியம். இன்னைக்குக் காலேஜ்ல மேட்ச்னு காலையிலேயே எழுந்து விளையாடப் போய்ட்டான்."

சாப்பிட்டு விட்டுச் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுப் புறப்படும் முன்பு விநோத்குமாரின் அப்பாவையும், அம்மாவையும் சேர்ந்து நிற்கச் சொல்லிக் காலில் விழுந்து வணங்கினாள் நிவிதா.

"நீங்க ரெண்டு பேரும் நல்லா இருக்கணும்மா!"

"போய்ட்டு வர்றேன்."

"அடிக்கடி வந்து போயிட்டிரும்மா. விநோத். இப்ப ஆபீசுக்குத்தானே போறது? கொண்டு போய் விட்டுட்டு உன் கம்பெனிக்குப் போ" என்றார் அப்பா.

"நான் கம்பெனிக்குப் போக வேண்டியதில்லைப்பா. கோயமுத்தூர் டூர் போட்டிருக்காங்க திடீர்னு. மத்தியானம் புறப்படறேன்" என்ற விநோத் குமார் வாசலுக்கு வந்து பைக்கை ஸ்டாண்ட் எடுத்தான்.

நிவிதாவை அவளின் அலுவலகக் கட்டிட வாசலில் இறக்கி விட்டு விட்டு, "எப்படிப் பழகறாங்க உன் மாமனாரும், மாமியாரும்?" என்றான்.

"நேரமாச்சு. சாயங்காலம் சொல்றேன்."

"நான்தான் ஊர்ல இருக்க மாட்டேனே. வந்ததும் கேக்கறேன். சொல்லு. வரட்டுமா?"

அவன் புறப்பட்டுப் போனதும் லிப்ட் உபயோகித்துத் தன் அலுவலகம் வந்து, தன் நாற்காலியில் அமர்ந்த போது மனம் விநோத்குமாரின் அப்பாவும், அம்மாவும் பொழிந்த பாசமான வார்த்தைகளை அசை போட ஆரம்பித்த போது...

வேறு ஒரு மேஜையில் விசாரித்து விட்டு இவளை நோக்கி வந்த போஸ்ட்மேன், "உங்க பேருதானே நிவிதா? உங்களுக்கு ஒரு ரெஜிஸ்தர் தபால் இருக்கு" என்று கையெழுத்து வாங்கிக் கொண்டு நகர...

கவரின் மேல் 'ஃப்ரம் ஹரி' என்று ஏதோவொரு முகவரி டைப் செய்யப்பட்டிருப்பதைப் பார்த்ததுமே உள்ளுக்குள் லேசான நடுக்கம் ஏற்பட்டது. தயக்கமாகக் கிழித்து உள்ளே இருந்ததை எடுக்க..

அது அவள் பெயருக்கு எடுக்கப்பட்ட இருபத்தி ஐயாயிரம் ரூபாய்க்கான டிராஃப்ட்!

(தொடரும்)

இந்தியாவின் பிசினஸ் உலகில், யாவரும் அறிந்த பெயர் கிருஷ்ணமூர்த்தி. ஆமாம், 'செயில்' என்கிற ஸ்டீல் அதாரிடி ஆஃப் இந்தியாவின் தலைவரான கிருஷ்ண மூர்த்திதான் அவர். அவர்தாம் பிரபலமான மாருதி நிறுவனத்தின் தலைவரும் கூட. இது தவிர, ஐ.ஐ.எம்.மின் விசிடிங் புரொபசர்... என பல்வேறு பொறுப்புக்கள். இத்தனை பெரிய மனிதரை நேரில் சந்தித்த போது,

மாருதி காரின் புதிய மாடல்!



'அட! இவரா அவர்?' என்ற ஆச்சரியம் தான் மேலோங்கியது. அத்தனை எளிமை! கூடவே உற்சாகம்.

ஆரம்பத்தில் ஒரு சாதாரண இஞ்சினியராய்த் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் தம் வாழ்க்கையைத் துவக்கியவர். பின் திருச்சி பி.ஹெச்.ஈ.எல்.லின் தலைவராய் உயர்ந்தார். பின் பற்பல பொறுப்பான பதவிகள் இவரைத் தேடி வர ஆரம்பித்தன.

''உங்களின் வெற்றிக்கு மிக முக்கியமான காரணமாய் நீங்கள் கருதுவது எதை?''

''சின்சியரிடி... அப்புறம் கடுமையான உழைப்பு. எந்த வேலையானாலும், மனத்தில் முழுமையான ஈடுபாட்டுடன் செய்ய வேண்டும்.''

''மாருதி நிறுவனம் பற்றி?''

''இப்படி ஒரு காரை உருவாக்குவது சாத்தியமா என்கிற நெடுநாளையக் கனவை நனவாக்கியது மாருதி. இன்றைக்கு மாருதி காருக்கு உள்ள வரவேற்பு அளப்பரியது. இப்போது மாருதி கார் ஹங்கேரி, நேபாளம், பங்களாதேஷ் முதலிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யுமளவுக்கு அனைவரையும் கவர்ந்துள்ளது. விலை ஏறிவிட்டது என்று ஒரு குற்றச்சாட்டுச் சொல்லப்படுகிறது. இதற்குத் தொழிற்சாலையைக் குறை சொல்வது தவறு. இன்று கூட தயாரிப்புச் செலவு நாற்பது, நாற்பத்தைந்தாயிரத்தைத் தாண்டவில்லை. அரசாங்கத்தின் வரி விதிப்புகள் தான் விலை உயர்வுக்குக் காரணம். விரைவில் மாருதியில் இன்னொரு புதிய மாடலையும் அறிமுகப்படுத்தவிருக்கிறோம். அது மாருதி காரை விட இன்னும் வசதியானதாக இருக்கும்.''

''அடிக்கடி பப்ளிக் செக்டார் நிறுவனங்களின் தலைவர்களை மாற்றுவதும், அரசாங்கத்தின் குறுக்கீடுகள் அதிகரித்து வருவதும், அவற்றின் செயல்பாடுகளைப் பாதிக்காதா?''

''நிச்சயம் பாதிக்கவே செய்யும். ஒரு சேர்மனைப் போட்டால், அவர் இஷ்டப்படி செயல்பட விட வேண்டும். அவ்வப் போது அரசு, அந்த நிறுவனத்தின் முன்னேற்றத்தை அலசுவதை வரவேற்கலாம். ஆனால் அதன் பணிகளில் குறுக்கிடுவதை அனுமதிக்கவே கூடாது.''

''பொதுத்துறை நிறுவனங்களில் பெரும்பாலானவை, நஷ்டத்தில்தான் இயங்குகின்றன. இதைத் தடுக்க என்ன வழி?''

''பொதுத் துறை நிறுவனங்களில் வேலை செய்பவர்களிடையே, பொறுப்புக்களை உணரச் செய்ய வேண்டும். மேலதிகாரிகள், தங்கள் கீழே பணிபுரிபவர்களுக்கு எடுத்துக் காட்டாய் இருக்க வேண்டும். நான் கோடையில் காலை ஏழரை மணிக்கு ஆபீஸில் இருப்பேன். (ஆனால் காலை ஒன்பதரைக்கு மேல் தான் வேலை நேரம்) குளிர்காலத்தில் எட்டு மணிக்கு வேலையை ஆரம்பித்து விடுவேன். 'செயில்' நிறுவனத்தில் முந்தைய வருடங்களில் பல கோடி ரூபாய்கள் 'ஓவர் டைம்'க்கு செலவழிக்கப்பட்டது. ஆனால் இப்போது ஓ.டி. என்று ஒரு பைசாக்கூட செலவழிப்பதில்லை. உற்பத்தியும் பெருகியிருக்கிறதே யொழியக் குறையவில்லை!''

தம்மை ஊக்கப்படுத்தியவர்கள் என இவர் குறிப்பிடுபவர்கள்: ஆர்.வி., சி. சுப்ரமணியம், இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி, மோகன் குமார மங்கலம், கே.சி. பந்த், பொட்டேடார் ஆகியோரை.

சேலம் இரும்பு எஃகு தொழிற்சாலை பற்றிக் கேட்ட போது, ''அது சிறப்பாகவே செயல்படுகிறது என்றாலும், எங்களுக்குள்ள பெரிய குறைபாடு, அங்கே மின்சாரத்துக்குச் செலவு அதிகமாகிறது என்பதுதான். இதனால் தயாரிப்புச் செலவு கூடுகிறது. எனவே, விலையைக் குறைப்பது சாத்தியமில்லாமல் போய் விடுகிறது!'' என்றார்.


குட்டிக்யூரா அழகி
Cuticura
TALCUM POWDER
SOOTHES
COMFORTS
BEAUTIFIES
Cuticura
TALCUM POWDER
குட்டிக்யூரா
டால்க்
இளம் பெண்கள் இதை
விரும்புவது இயற்கையே
CHAITRA-B-MP-2 TMR



• டெல்லி தமிழ்ச் சங்கக் கட்டடம்.



• டெல்லியிலுள்ள வள்ளுவர் சிலை

தலைநகரில் தமிழ் வளர்க்கும் தமிழ்ச் சங்கம்

1940களின் ஆரம்பத்தில் வேலை தேடித் தில்லி வந்த தமிழர்களுக்கு எந்தப் பக்கம் திரும்பினாலும், இந்தி, பஞ்சாபி போன்ற பிற மொழிகளே காதில் ஒலித்துக் கொண்டிருந்தன. 'செந்தமிழ் என்னும் இன்பத் தேன் வந்து பாயாதா' என்ற ஏக்கம் பசியைப் போல் வதைக்க அந்த இலக்கியப் பசிக்கு மாமருந்தாக 1946—ல் தோன்றியது தான் தில்லித் தமிழ்ச் சங்கம்.

கன்னாட் ப்ளேஸில், தாங்கள் தங்கி வந்த நியூ மதராஸ் போர்டிங் ஹவுஸில், ஒரு மிகச் சிறிய அறையில் ஒன்பது தமிழர்களால் உருவாக்கப்பட்டதுதான் இந்தத் தமிழ்ச் சங்கம். அந்த ஒன்பது பேரில் ஒருவரான சுப்புசாமி, சங்கத்தின் கிடுகிடு வளர்ச்சியை விரிவாகத் தெரிவித்தார்.

''ஓட்டல் அறையில் ஆரம்பித்த சங்கப் பணிகள் பின்பு அன்பர் ஒருவருக்குச் சொந்தமான வீட்டில் தொடர்ந்தது. அவர் தம்முடைய வசதிகளைக் குறைத்துக் கொண்டு, நூலகம் நடத்த ஓர் அறையை ஒழித்துக் கொடுத்தார். தில்லியில் உள்ள தமிழ் அன்பர்கள் எல்லோரும் தங்களிடமிருந்த நூல்களைக் கொடுத்து நூலகத்தை விரிவுபடுத்தினார்கள். இதற்கிடையில் நிறையத் தமிழர்கள் வேலை நிமித்தமாகத் தில்லிக்கு வந்தனர். அவர்கள் யாவரும் சங்கமித்துப் பேசிக் கொள்ள — 'ஹோம் சிக்' ஆகாமல் தப்ப சங்க நூலகம் பயன்படுத்தப் பட்டது. அதற்கு அந்த இடம் போதவில்லை. எனவே கன்னாட் ப்ளேஸில் இரண்டாம் உலகப் போரின் போது ராணுவத்துக்காகப் பயன்பட்ட மூன்று அறைகள் கொண்ட பழைய கட்டடம் ஒன்று வாடகைக்குக் கிடைக்கவே, அங்கு இடம் மாறினோம்.

''நல்ல சென்டரான — வசதியான அந்த இடம் கிடைத்தவுடன், சங்கத்தின் ஆக்கப் பணிகள் பெருகின. இலக்கியச் சொற்பொழிவு, கருத்தரங்கம், கவியரங்கம், பட்டி மன்றம், கலந்துரையாடல், வரவேற்பு, வழியனுப்பு விழா என்று சங்கக் கட்டடம் தினமும் களை கட்ட ஆரம்பித்தது. தமிழ்ப் புத்தாண்டு, பொங்கல், குடியரசு தினம், சுதந்திர தினம் என்று விழாக்கள் கொண்டாடப்பட்டன. தமிழர்களின் பண்பாட்டைப் பிறமொழி மக்கள் உணர்ந்து கொள்வதற்கு ஒரு வாய்ப்பாகவும் தமிழ்ச் சங்கம் விளங்கியது. வடநாட்டவருக்குத் தமிழ் வகுப்புகள் நடத்தப்பட்டன. அதே போலப் புதிதாகத் தில்லி வந்த தமிழர்கள் அன்றாட வாழ்க்கையில் தவிக்காமல் இருப்பதற்காக அவர்களுக்கு இந்தி வகுப்புகளும் நடத்தப் பட்டன!

''பல்வேறு ஆக்கப் பணிகள் நடந்ததன் காரணமாக கன்னாட் ப்ளேஸ் அலுவலகம் இடம் போதாமல் போனது. அப்போது தான் சொந்தக் கட்டடம் வேண்டுமென்று பலர் உணர்ந்தார்கள். ராமகிருஷ்ணபுரத்தில் நிலம் வாங்கப்பட்டது. பூர்ணம், சுந்தா, சுப்புடு. போன்றவர்கள் பல கலை நிகழ்ச்சிகளை நடத்தியும், ஏற்பாடு செய்தும், கட்டடப் பணிக்கு நிதியுதவி செய்தார்கள். சிண்டிகேட் வங்கியும் நிதியுதவி செய்தது.'' — விளக்கிக் கொண்டே சென்றார் அவர்.

• தமிழ்ச் சங்க நிர்வாகிகள்.



தில்லி தமிழ்ச் சங்கத்திற்கு வராத பெரும் தலைவர்களே இல்லை. ராஜாஜி, இதன் வளர்ச்சியில் மிகவும் அக்கறை கொண்டிருந்தார். 'டெல்லி தமிழ்ச் சங்கம்' என்று சொல்ல வேண்டாம். 'தில்லித் தமிழ்ச் சங்கம்' என்று வைத்துக் கொள்ளுங்கள்' என்று மாற்றியவர் ராஜாஜிதானும்.

பக்தவத்சலம், கருணாநிதி ஆகியோர் முதல்வர்களாக இருந்த போது சங்கக் கட்டட வளர்ச்சிக்கு உதவியிருக்கிறார்கள். தமிழ்ச் சங்கம் பல விழாக்களைக் கொண்டாடினாலும், மிகச் சிறப்பாகக் கொண்டாடுவது பாரதி விழாவைத்தான். இவ்விழாவையொட்டி நடத்தப்படும் திறனாய்வு, பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டிகளில் பல நூறு பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்து கொள்கிறார்கள்.

சங்கக் கட்டடத்தின் இரண்டாவது மாடியில் இருக்கும் சங்க நூலகத்திற்குப் பல சிறப்புகள் உண்டு. பத்தாயிரத்துக்கும் அதிகமான தமிழ் நூல்களோடு தமிழ் மொழியைப் பற்றிப் பிறமொழிகளில் வந்துள்ள புத்தகங்களும் இருக்கின்றன. தமிழகத்திற்கு வெளியே உள்ள தமிழ் நூலகங்களில் மிகப் பெரியது இதுதான். இந்த நூல் நிலையத்திற்கு ஏழு நாட்களும் வேலை நாட்கள்தான்.

சங்க உறுப்பினர்களால் 1952 — ல் கையெழுத்துப் பத்திரிகையாக ஆரம்பிக்கப்பட்ட 'சுடர்' பத்திரிகை தமிழ் இலக்கியத்துக்குச் சேவை செய்யும் விதத்தில் பல சிறப்பு மலர்களை அச்சிட்டு வெளியிட்டு இருக்கிறது. கடல் கடந்த தமிழ் மலர், இந்திய இலக்கியங்கள் மலர், சமுதாய மறுமலர்ச்சி மலர் என்று பல சிறந்த மலர்கள் வெளிவந்திருக்கின்றன. 1971—ம் ஆண்டு வெளிவந்த 'சுடர்', சங்கத்தின் வெள்ளி விழா மலராகத் திகழ்ந்தது. இந்த மலர் மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தில் துணைப் பாடமாக, வைக்கப்பட்டதிலிருந்தே, மலரின் சிறப்புப் புரியும்.

வெள்ளி விழாவுக்குப் பிறகு, சங்கத்திற்கென ஓர் அரங்கம் தேவை என்பதை உறுப்பினர்கள் உணர்ந்தார்கள். எண்பது லட்சம் ரூபாய்ச் செலவில் திட்டம் போட்டு வேலை ஆரம்பமானது. ஆனால் காலப்போக்கில், திட்டமிட்டபடி வேலை செய்ய முடியாததால், செலவுத் தொகை அதிகமாகிக் கொண்டே போனது. இப்போது கிட்டத்தட்ட முற்றிலும் முடிந்த நிலையில் — இருக்கைகள், குளிர் சாதன வசதி மட்டும் செய்ய வேண்டியிருக்கிறது. அதைப பூர்த்தி செய்யப் பணமில்லாமல் தவிக்கிறது தமிழ்ச் சங்கம். தமிழ்ச் சங்கம் இருக்கும் சாலைக்குத் 'தமிழ்ச் சங்கம் மார்க்' (தெரு) என்றே பெயர்!

தான் செய்து வரும் பல்வேறு தமிழ்ப் பணிகளுக்கு இடையில், தில்லியில் இருக்கும் திருவள்ளுவர், காமராஜ் சிலைகளைப் பராமரிக்கும் வேலையையும் சங்கம் ஏற்றிருக்கிறது. அதே போல் பாரதி சிலை, ராஜாஜி சிலை ஆகியவற்றைப் பராமரிக்கும் பொறுப்பையும் தமிழ்ச் சங்கமே ஏற்றுக் கொண்டால் என்ன?

அமரர் கல்கி

நினைவுச் சிறுகதைப் போட்டி–1988



முதல் பரிசு	ரூ.	1500
இரண்டாவது பரிசு	ரூ.	750
மூன்றாவது பரிசு (இரு கதைகளுக்குத் தலா ரூ. 375 வீதம்	ரூ.	750

ஆக மொத்தம் ரூ. 3000 பரிசுக ளாக வழங்கப் பெறும்.

தவிர பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு கதையும் ரூ. 125 சன் மானம் பெறும். அறிமுக எழுத்தாளர் களுக்குப் போனஸ் உண்டு.

• கதைகள் சொந்தக் கற்பனை என் றும், இதற்கு முன் வேறு எந்த உருவி லும் பிரசுரமானதில்லை என்றும் உறுதி மொழி தேவை.

• அறிமுக எழுத்தாளர் எனில் இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லைஎன்றும்போட்டி முடிவு அறிவிக்கப்படும்வரை எழுத மாட் டேன் எனவும் உறுதிமொழி தரவேண் டும்.

• நடுவர் குழு கதைகளைப் பரிசீலித் துப் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந் தெடுக்கும்.

கதைகளை அனுப்ப வேண்டிய கடைசித் தேதி: ஜூன் 15.

• உறையின் மேல் அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி என்று குறிப்பிடுதல் அவசியம்.

• பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதை களைத் திரும்பப் பெறப் போதிய அளவு தபால் தலை ஒட்டிய சுய விலாச மிட்ட உறையைக் கதையுடன் கூடவே அனுப்புதல் வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.

• கதைகள் கல்கியில் நாலு பக்கங் களுக்கு மேற்படாதிருப்பது நலம். ஒருவர் எத்தனை கதைகள் வேண்டு மானாலும் அனுப்பலாம்.

• எவ்விதக் கடிதப் போக்குவரத் தும் கிடையாது.

• சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

• போட்டி முடிவும் முதல் பரிசுக் கதையும் கல்கி ஆகஸ்டு 7 ஆண்டு மலரில் பிரசுரமாகும்.

• எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

ஆசிரியர், கல்கி, சென்னை— 600 032.

பத்திரிகை உலகில் தமிழர்கள்...

கே. ஸ்ரீனிவாஸன்:

தில்லியில் உள்ள பத்திரிகையாளர்களிடையே பல 'ஸ்ரீனிவாஸன்'கள் இருந்தாலும், பளிச்சென்று மனத்தில் படுபவர் கே. ஸ்ரீனிவாஸன்தாம். (சொந்த ஊர் தஞ்சை மாவட்டம் திருக்காட்டுப்பள்ளி அருகில் உள்ள கண்டமங்கலம்) தில்லியில் இவர் வேலை பார்க்காத பெரிய பத்திரிகைகளே இல்லை என்று சொல்லலாம். எந்தெந்தப் பத்திரிகையில் வேலை செய்கிறாரோ, அவ்வப்போது அந்தந்தப் பத்திரிகையின் பெயரோடு இவர் பெயரும் இணைத்துக் குறிப்பிடப்படும். தற்போது 'துக்ளக்' ஸ்ரீனிவாஸன் என்றால் வாசகர்கள் சுலபமாகப் புரிந்து கொள்வார்கள். தற்போது அறுபத்தெட்டு வயதாகும் ஸ்ரீனிவாஸன் வாழ்க்கையில் கிட்டத்தட்ட ஐம்பது வருடங்கள் பத்திரிகையாளர் வாழ்க்கைதான். 1940—ல் நீலகிரி மாவட்டம் குன்னூரில் 'மெயில்' நிருபராகத் துவங்கி, 1943—ல் வானொலியில் தொடர்ந்து ஹிந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ், இந்தியன் ரிபப்ளிக், ஹிந்துஸ்தான் டைம்ஸ் என்று இவர் வேலை செய்த பத்திரிகைகளின் பட்டியல் நீண்டு கொண்டே போகும். இன்னும் உற்சாகத்தோடு, பாராளுமன்றத்திற்கும், பத்திரிகையாளர் சந்திப்புக்களுக்கும் சென்று வரும் ஸ்ரீனிவாஸன் பல தலைவர்களுடன் நெருங்கிப் பழகியவர். இவரால் மறக்க முடியாதவர் காமராஜர். பூனாவுக்கு அருகில் உள்ள ராணுவத் தளவாடத் தொழிற்சாலையில் சில மாதங்கள் வேலை செய்த அனுபவமும் இவருக்கு உண்டு.

இன்னும் மறக்க முடியாத வடுவாக இவரது நெஞ்சில் நிற்பது யு. என். ஐ. யில் வேலை பார்த்த இவர் மகன் பிரகாஷின் சந்தேகத்துக்குரிய மரணம். எமர்ஜென்ஸி கால கட்டத்தில், அரசை எதிர்த்து ரகசியக் கூட்டங்கள் நடத்தி வந்த பிரகாஷ் ஒரு நாள் பிரதமர் வீட்டின் அருகில் காயங்களோடு இறந்து கிடந்தார். போலீஸைக் கேட்ட போது, 'விபத்து' என்று சொல்லி விட்டார்கள். எமர்ஜென்ஸி ஆதலால் வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை.

விஸ்வம்:

தில்லி பத்திரிகை உலகில் விஸ்வம் பிரபலமானவர். தமிழ்நாட்டின் பிரதிநிதி என்று தம்மை எந்தவிதத்திலும் சொல்ல முடியாது என்கிறார் சுத்தத் தமிழில்!

தாயும், தந்தையும் திருநெல்வேலியைச் சேர்ந்தவர்கள். குடும்பம் வாரணாசியில் இருந்தது. வெள்ளமாய்ப் பொங்கிக் கொண்டிருந்த கங்கையைக் கடந்து பிரசவத்திற்காக இவர் தாய் திருநெல்வேலி போக முடியாத காரணத்தினாலேயே விஸ்வம் என்ற விஸ்வேஸ்வரன் வாரணாசியில் பிறந்தார். வாரணாசியில் உருதுவை இரண்டாம் மொழியாகக் கொண்டு, இவர் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் போது, சென்னையில்தான் நல்ல கல்வி முறை என்று தந்தை எண்ணியதால் சென்னைக்கு அனுப்பப்பட்டுப் பிறகு, மதனபள்ளி 'தியோசாஃபிகல் பள்ளியில்' சேர்ந்து, சமஸ்கிருதத்தை இரண்டாம் பாடமாக எடுத்துக் கொண்டு 'மெட்ரிகுலேஷன்' முடித்தார்.

பள்ளியை முடித்ததும், தந்தைக்குப் பம்பாய்க்கு மாற்றல் ஆயிற்று. பம்பாயில் செயின்ட் ஜோசப் கல்லூரியில் சேர்ந்த போது, அங்கிருப்பவர்களுக்கு விஸ்வேஸ்வரன் என்று உச்சரிக்கக் கஷ்டமாயிருந்ததால் பெயரை விஸ்வம் என்று மாற்றிக் கொண்டார். 1942—ல் சுதந்திர இயக்கத்தில் சேர்ந்ததும் படிப்பு நின்று போயிற்று. அதன் பிறகு படிப்பைத் தொடராமல் வேலையைத் தேடி அலைந்து சோர்ந்த நிலையில் 'ஃப்ரீ பிரஸ்' ஜர்னலில் 75 ரூபாய் மாதச் சம்பளத்தில்

விஸ்வம்







ரிப்போர்ட்டர் வேலை கிடைத்தது. மதனை பள்ளியில் ஆங்கிலேயரிடம் ஆங்கிலம் கற்றிருந்ததால் விஸ்வத்தின் ஆங்கில அறிவு சற்றுக் கூடுதலாகவே இருந்தது. ஆறே மாதங்களில் 'சீஃப்ரிப்போர்ட்டராக' நியமிக்கப்பட்டார்.

அந்தச் சமயத்தில் பம்பாய் ஆல் இந்தியா ரேடியோ இவர் தமிழர் என்று தெரிந்ததும் தங்களுடைய ஒரு நிகழ்ச்சிக்காக ஒரு தமிழ்ச் சிறுகதையை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துத் தரும்படி கேட்டுக் கொண்டது. இவருக்குத் தமிழ் எழுதவும் படிக்கவும் தெரிந்திருந்ததால் கல்கியின் 'கணையாழியின் கனவு' என்ற கதையை மொழிபெயர்த்துக் கொடுத்தார்.

அதற்குப் பிறகு டைம்ஸ் ஆப்இந்தியா, டெக்கான் ஹெரால்டு, ஸ்டேட்ஸ்மன் போன்ற பல பத்திரிகைகளில் பணிபுரிந்து விட்டு இப்பொழுது "டிரிபியூனின்" ஆசிரியராக இருக்கிறார்.

தில்லிக்கு வந்த பிறகு, இங்கிருக்கும் தமிழர்களின் போக்கே தம்மை, அவர்களிடமிருந்து ஒதுங்க வைத்திருப்பதாகச் சொல்கிறார். முதலாவதாக இங்கு ரொம்பவும் அதிகமான 'OFFICIAL DOM–! தங்கள், தங்கள் மட்டத்தில்தான் எல்லோரும் பழகுவார்கள். இரண்டாவதாக, இங்கு அநேகமாகத் தமிழர்களின் பல வகைச் சங்கங்கள் எல்லாம், மத சம்பந்தமான நிகழ்ச்சிகளுக்குத்தான் அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றன; ஹோமங்கள், அர்ச்சனைகள், யாகங்கள் என்று செலவு செய்த வண்ணம் இருக்கின்றன; இங்கு, வரும் மடாதிபதிகளும், மதத் தலைவர்களும், கோவிலுக்கு என்றும், கும்பாபிஷேகத்திற்கு என்றும் பணம் வசூலிக்கிறார்களே தவிர, ஓர் ஆஸ்பத்திரி கட்டவென்றோ, பள்ளிக் கூடம் கட்டவென்றோ யாரும் கேட்டதாக இது வரை தமக்குத் தெரியவில்லை என்கிறார். தமிழ்ச் சங்கத்தில் கூட நல்ல இலக்கியக் கூட்டங்கள் நடப்பது இல்லை; மதம், சங்கீதம் இந்த இரண்டில்தான் இங்கிருக்கும் தமிழர்களுக்கு அதிக ஆர்வம் என்பது விஸ்வத்தின் கருத்து.

"இந்த மாதிரியெல்லாம் நான் நினைப்பதற்கு என்னுடைய பிறப்பும், வளர்ப்பும் காரணமாயிருக்கலாம். தாய்மொழி என்பதால் வீட்டில் தமிழ் பேசினாலும் என்னையும் ஒரு வடக்கத்திக்காரனாகத்தான் வடக்கு என்னை ஏற்றிருக்கிறது. ஆனாலும் இப்பவும் மதராஸ் ஸ்டோர்ஸில் தொங்கும் தமிழ்ப் பத்திரிகைகளைப் பார்க்கும் பொழுது, அவற்றைப் புரட்டிப் பார்க்காமல் வர மனம் கேட்காது. வீட்டில் தமிழ்ச் சமையல்தான். சம்பிரதாயங்கள் எதுவும் அனுஷ்டிப்பதில்லை. தீபாவளிக்கு மட்டும் புதிய துணிமணிகள் வாங்குவதுண்டு. மூத்த மகன் ஒரு மகாராஷ்டிரப் பெண்ணையும் இரண்டாம் மகன் குஜராத்திப் பெண்ணையும் மகள் ஒரு ஸ்வீடிஷ் காரரையும் ஆரிய சமாஜ முறைப்படி திருமணம் செய்து கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது சொல்லுங்கள், நான் எந்த வகையில் தமிழன் என்று!"



வெளிநாட்டுக்காரன்: எங்க நாட்டு அரசியல்வாதிகள் பொழுதுபோக்கா, ஏதாவது ஒரு கேம் விளையாடுவாங்க. உங்க நாட்டு அரசியல்வாதிகளுக்கு என்ன பொழுதுபோக்கு?

இந்தியன்: எங்க நாட்டு அரசியல்வாதிகளுக்குப் பொழுதுபோக்கே ஆட்சி நடத்தறதுதாங்க!

— பட்டுக்கோட்டை வெங்கடேஷ்.

என்கிறார் விஸ்வம்.

வி. எஸ். மணியம்:

தில்லிக்கு வந்து முப்பது வருஷங்களுக்கு மேலாகியும் இப்பவும் 'மதுரை மணி பாட்டுன்னா கண்ணுல தண்ணி வருது...'' என்று உணர்ச்சி வசப்படும் தமிழர் இவர். வடார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவர். வேலூரில் பள்ளிப்படிப்பும், சென்னையில் கல்லூரிப் படிப்பும் முடித்து 1952—ல் வேலையைத் தேடித் தில்லிக்கு வந்தார். 'தாட்' என்ற பத்திரிகையில் சேர்ந்து ஆறு வருஷம் அங்கிருந்தார். கல்கி அவர்கள் அமரரான போது 'தாட்' பத்திரிகையில் மணியம் ஒரு கட்டுரை எழுதினார். ''இதுவரை கல்கியைப் பற்றி எழுதப்பட்ட இரங்கல் கட்டுரைகளில் இதுதான் மிகச் சிறந்தது'' என்று ராஜாஜியே தம் கைப்பட 'தாட்'டுக்கு ஒரு கடிதம் எழுதினார் என்றால், மணியத்தின் எழுத்தாற்றலைப் பற்றிச் சொல்லவே தேவையில்லை!

கு. பா. ரா., புதுமைப்பித்தன், அகிலன் ஆகியோரின் கதைகளை மணியம் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கிறார். ஸ்டேட்ஸ்மேனில் சேர்ந்த பிறகு, பல தமிழ் எழுத்தாளர்களைப் பேட்டி கண்டு எழுதியிருக்கிறார். தமிழ் இலக்கியத்தைப் பற்றியும், மதுரை மணி ஐயரைப் பற்றியும் எழுதிய கட்டுரைகள் வடநாட்டவரிடையே பெரும் வரவேற்பைப் பெற்றன.

'பிழைப்புக்காக தில்லிக்கு வரவேண்டிய நிர்ப்பந்தத்தினால் ஏதேனும் பிரச்னைகளோ, மனக்குறைகளோ உங்களுக்கு உண்டா?' என்று கேட்டதற்கு, ''நிச்சயமாக இல்லை. தில்லி யாரையும் ஒதுக்குவதில்லை; அன்னியமாக நினைப்பதுமில்லை. எப்போதும் இங்கு ஒரு சினேகிதமான சூழல் உண்டு. அவரவரும் அவரவர் வேலையைப் பார்த்துக் கொண்டு போவதால் வம்பு தும்பு கிடையாது. அனாவசியக் கட்டுப்பாடுகளும், மனக்கூச்சங்களும் கிடையாது. இந்தச் சூழலில் பழக்கப்பட்டுப் போன என் பெண்கள் கூட சென்னையிலோ, தமிழ்நாட்டில் வேறு எந்த ஊரிலோ தங்கினால் ஒத்து வருமோ என்று பயப்படுகிறார்கள். என் வரையில் தமிழ்நாட்டில் எப்படி இருப்பேனோ அப்படித்தான் என் வாழ்க்கை ஓடுகிறது!'' என்கிறார்.



கடலுக்குப் போகாத கட்டுமரங்கள்....

— கவர் ஸ்டோரி



இந்த இதழில் வெளிவராத தில்லித் தமிழர் பற்றிய சுவையான செய்திகள், கட்டுரைகள்......

அதிக சக்தி, அதிக போஷாக்கு,

அதிக சாக்கலேட் சுவை...



அருந்துங்கள்

கேம்ப்கோ

வின்னர்

இது ஒரு சுவை மிகுந்த மாறுபட்ட சாக்கலேட் பானம். அதிக சக்தியை அளிப்பதற்காக குளுக்கோஸ் நிறைந்தது. போஷாக்கினை அளித்திட வைட்டமின்கள் மற்றும் தாதுச் சத்துக்களைக் கொண்டது.

மேலும் குழந்தைகள் மிகவும் விரும்பிடும், இதுவரைக் கிடைத்திராத அதிக சாக்கலேட் சுவை.

அருந்திப் பாருங்கள். இதைவிடச் சிறந்ததொரு சுவை மற்றும் சக்திமிக்க சாக்கலேட் பானம் இல்லை என்பதைக் கண்டுகொள்வீர்கள்.

இந்தியாவின் மிகப்பெரிய அதிநவீன ஆலை அளிப்பது.



கேம்ப்கோ லிமிடெட்
மங்களூர்.

R K SWAMY/CL/5828



நீதிபதி ரங்கநாதன் தமது மனைவியுடன்.

தலைநகரில் சில தமிழ்ப் புள்ளிகள்

நீதிபதி ரங்கநாதன்:

தலைநகரில் இரண்டு தமிழர்கள் நீதிபதிகளாய் இருக்கிறார்கள். ஒருவர் நீதிபதி நடராஜன். (தாக்கர் — நடராஜன் கமிஷனில் இடம் பெற்ற நடராஜன்) ''ஸாரி... பிஸி...'' என்று நமது சந்திப்பைத் தவிர்த்து விட்டார் அவர். இன்னொரு தமிழரான நீதிபதி ரங்கநாதன் மகிழ்ச்சியுடன் நம்மைச் சந்திக்க ஒப்புக் கொண்டார்.

சொந்த ஊர் தஞ்சை. சென்னையில் படிப்பு. இந்திரா காந்தி கொலை வழக்கில் தீர்ப்பு வழங்கியவர் இவர்தாம். அப்போது தில்லி உயர்நீதி மன்றத்தில் இவர் நீதிபதி. இப்போது, இந்திரா காந்தி கொலை வழக்கு அப்பீல் சுப்ரீம் கோர்ட்டில் இருக்கிறது. இதனால் இவருக்கு அதிகப்படியான பாதுகாப்பு அளித்துள்ளது அரசாங்கம். கேட் அருகே தானியங்கித் துப்பாக்கியோடு நிற்கும் காவலர் தவிர, நிரந்தரமாக ஒரு சிறு காவல்படையே முகாமிட்டிருக்கிறது இவர் வீட்டுத் தோட்டத்தில்.

இவருடைய திருமதிக்குத் தோட்டக் கலையில் ரொம்ப ஆர்வம் உண்டு. தோட்டத்தில் முட்டைக் கோஸ், காலி ஃப்ளவர் புடலங்காய் என்று ஆரம்பித்து, வகை வகையான பூச்செடிகளையும் போட்டிருக்கிறார்.

இரண்டு பெண்கள். இரண்டு பேருமே சட்டம் படிக்கிறார்கள். ''இந்தி பேசினால் புரிந்து கொள்வேன்; ஏதோ கொஞ்சம் கொஞ்சம் பேசுவேன்; கோர்ட் ஊழியர்கள், மற்ற பணியாட்களிடம் பேசுகிற அளவுக்கு இந்தி தெரியும்'' என்கிறார் நீதிபதி.



லக்ஷ்மி கண்ணன்

ஜி. ராமசாமி:

''தில்லியில் இருந்தால், காலையில் லோடி கார்டனுக்குச் சென்று ஒரு மணி நேரம் வாக்; பின்னர் வீட்டுக்கு வந்து குளித்து விட்டு ஒரு மணி நேரம் கணபதி பூஜை. அப்புறம் கன்னாட் ப்ளேஸ் பிள்ளையார் கோயிலுக்குச் சென்று தரிசனம். அப்புறம்

தான் என் வேலை ஆரம்பம்'' — கட, கடவென்று சொன்னார் பிரபல வழக்கறிஞரும் தற்போது அடிஷனல் சொலிசிட்டர் ஜெனரலுமாக இருக்கும் ஜி. ராமசாமி.

''அடிஷனல் சொலிசிட்டர் பதவியைப் பற்றி...?''

''மத்திய அரசு மீது பல வழக்குகள் போடப்பட்டுள்ளன. அந்த வழக்குகளில் ஆஜராகி, மத்திய அரசின் சார்பாகச் செயல்படுவதுதான் என் வேலை. இது சம்பந்தமாக நாட்டிலுள்ள அனைத்து உயர் நீதி மன்றங்களுக்கும் செல்ல வேண்டியிருக்கும். வேலைப் பளு அதிகம். என் வீட்டிலேயே வீடியோ இருந்தாலும் அதில் படம் பார்ப்பது தமிழர்களான என் வீட்டு வேலைக்காரர்கள்தான். நான் சினிமா பார்த்துப் பதினெட்டு ஆண்டுகள் ஆகின்றன என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்...'' என்றார்.

எத்தனை வேலைப் பளுவிலும் கோயிலுக்குச் சென்று வராமல் தமது அலுவல்களைத் துவங்குவதில்லை அவர்!



● வை. கோபாலசாமி: எப்போதும் ஒலிக்கும் குரல்.



● ஜி. ராமசாமி:



● குமாரி ஜலஜா: ஒரு கலாசாரப் பாலம்!

காவேரி:

'காவேரி' என்ற புனை பெயரில் சிறு பத்திரிகைகளில் தமிழ்ச் சிறுகதைகளும், நாவலும் எழுதி வரும் டாக்டர் லக்ஷ்மி கண்ணன், ஆங்கிலத்திலும் கவிதைகளும், கட்டுரைகளும் எழுதி வருகிறார். இப்போது தில்லியில் விளம்பரத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் இவருடைய 'ஆத்துக்குப் போகணும்' என்ற நாவல், முக்கியமான ஒன்று. 1954 'ஹிந்து ஸக்செஷன் ஆக்ட்'படி, இந்தியப் பெண்களுக்குக் குடும்பச் சொத்தில் மரபுரிமை இருக்கும் நிலையிலும், பெரும்பான்மையான இந்தியப் பெண்கள் தங்களுக்குச் சேர வேண்டிய சொத்தின் பங்கை இழந்து கொண்டே வருவதை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டது இந்நாவல். வேலை பார்க்கும் படித்த மத்தியதர வர்க்கப் பெண்கள், சமூகத்தில் எத்தனை ஆயிரம் கொடூரங்கள் மற்றும் வேதனைகளுக்கு இரையாகிறார்கள் என்பதையும் அவர் இந் நாவலில் விவரித்திருக்கிறார்.

உஷா கிருஷ்ணமூர்த்தி:

இன்றைய தினம் தில்லி டெலிவிஷனில் தெரியும் ஒரே ஒரு தமிழ் முகம் உஷா கிருஷ்ணமூர்த்தி முகம்தான். ஊர் தஞ்சாவூர்.

'அப்னா உஸ்தவ்' நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்க வாய்ப்புக் கிடைத்த போது, இவருக்கு அகில இந்திய அறிமுகம் கிட்டியது. இப்போது மாதத்தில் பத்துப் பன்னிரண்டு நாட்களாவது காலை பிரேக்—ஃபாஸ்ட் டெலிவிஷனில் அறிவிப்பாளராய் வருகிறார்: பிரமுகர்களைப் பேட்டி காண்கிறார்.

உடல் ஊனமுற்ற, சரளமாய்ப் பேச முடியாத பார்வைக் குறைவான பெண் ஒருவரை டீ.வி.க்காக உஷா பேட்டி காண வேண்டியிருந்ததாம். டீ.வி. நிலையத்திற்கு வந்த அந்தப் பெண் மிரண்டு போய் ஒளிப்பதிவுக்கு ஒத்துழைப்புத் தரவில்லையாம். இந்தப் பிரச்னையை உஷா எப்படிச் சமாளித்தார் தெரியுமா? சில நாட்கள் தொடர்ந்து, அந்தப் பெண்ணின் வீட்டுக்குப் போய், ஒருவித நட்பை ஏற்படுத்திக் கொண்டு, பயத்தைப் போக்கிப் பிறகு அந்தப் பெண்ணைப் பேட்டியின் போது பயமின்றிப் பேச வைத்தாராம்.

''தமிழ்நாட்டுக்காரர் யாரையாவது பேட்டி காண வேண்டியிருந்தால் இடையிடையே தமிழ் வார்த்தைகளை உபயோகிப்



● உஷா கிருஷ்ணமூர்த்தி: டி.வி.யில்...



தலைவர்: டாக்டர்! என்ன செய்தா என்னோட உடம்பு குறையும்?

டாக்டர்: அடிக்கடி உண்ணாவிரதத்துல கலந்துக்காதீங்க!

— ஏ. குமார்.



"உண்ணும் உணவை நன்கு அரைத்துக் கொடுத்து விழுங்கும் வேலையைச் செய்யும் எனக்கு உற்ற துணைவனாய் இருக்கிறாய். உனக்கு எனது நன்றி" என்று நாக்கு பற்களுக்கு நன்றி கூறியது.

பல் உடனே கூறியது: எனக்கு நன்றி கூறுவது இருக்கட்டும். நீ அடக்கமாகப் பேசு. எதையாவது நீ ஏடாகூடமாகப் பேசித் தொலைத்தால் உன்னை விட்டு விட்டு என்னையல்லவா உடைக்க வருகிறார்கள்!

— வாரியார் கூறிய கதை.

— காயத்ரி.



"நல்ல துணிங்கம்மா; நல்லா உழைக்கும்; ஐயாவுக்கும் பிடிக்கும். எடுத்துக்குங்கம்மா."

"அது சரிப்பா; பாத்திரக்காரனுக்கும் பிடிக்கணுமே. அதைத்தான் யோசிக்கிறேன்...."

— எஸ். ராகவேந்திரா.

பது. தமிழில் ஓரிரு கேள்விகளைக் கேட்பது... எனக்கு மிகவும் பிடித்த விஷயம்" என்கிறார் உஷா.

குமாரி ஜமுனா:

தமிழ் இலக்கியங்களையும் கலாசாரங்களையும் இந்தி மொழிக்காரர்களுக்கு அறிமுகப்படுத்தும் ஒரு கல்ச்சர்ப் பாலமாக விளங்குகிறார் குமாரி ஜமுனா என்றால் அதில் துளியும் மிகையில்லை. பாலக்காடு குன்னச்சேரி கிராமத்தைச் சேர்ந்த இவர்தான் ஞானபீடப் பரிசு பெற்ற அகிலனின் 'சித்திரப் பாவை'யை இந்தியில் மொழி பெயர்த்தார். வேறு பலவற்றை மொழி பெயர்த்தும் வருகிறார். தில்லியில் இருக்கும் ஜானகி தேவி மஹிளா வித்யாலயாவில் (பெண்கள் கல்லூரி) இந்தி போதிக்கும் இவர் பேசும் இந்தியைக் கேட்டு வடக்கத்திக்காரர்களே வியக்கிறார்கள். அத்தனை சுத்தம்; பாண்டித்யம்!

வை. கோபால்சாமி:

இந்தித் திணிப்புக்கு எதிர்க் குரல் கொடுக்க வேண்டுமா, இலங்கைத் தமிழர்களின் இன்னல்களை எடுத்துரைக்க வேண்டுமா, காவிரிப் பிரச்னை பற்றி மத்திய அரசின் கவனத்தை ஈர்க்க வேண்டுமா?

கடந்த எட்டு வருடங்களாக ராஜ்ய சபையில் தமிழகத்தின் குரலாக ஒலித்துக் கொண்டு வருவது தி.மு.க. உறுப்பினரான வை. கோபால்சாமியின் குரல்தான். சொந்த ஊர் சங்கரன் கோயிலுக்கு அருகில் உள்ள கலிங்கப்பட்டி என்னும் சிறிய கிராமம். ராஜ்ய சபையின் விவாதங்களில் இவரும் ராஜீவ் காந்தியும் மோதிய சம்பவங்கள் ஏராளம்.

காலையில் எழுந்து டீ குடித்து விட்டு, எதிர்க் கட்சித் தலைவர்கள், உறுப்பினர்கள் ஆகியோரின் வீடுகளுக்குச் சென்று, ராஜ்ய சபையில் அன்றைக்கு நடக்கப் போகும் நிகழ்ச்சிகளைப் பற்றி விவாதித்து விட்டே தினமும் அவைக்குச் செல்கிறார். காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டங்களில் கோபால்சாமியை எப்படிச் சமாளிப்பது என்று கூட சில சமயங்களில் விவாதிக்கப்படுமாம்! அந்த அளவுக்கு 'டெரராக'ச் செயல்படுகிறார் கோபால்சாமி. விவாதத்தின் போது ஒரு சமயம் இந்திய ராணுவத்தை வாபஸ் பெற வேண்டும் என்று பேசிக் கொண்டிருந்த போது பல குறுக்கீடுகளால் விவாதம் சூடு பிடித்தது. அப்போது 'நான் முதலில் தமிழன்; அப்புறம்தான் இந்தியன்' என்று ஒரு போடு போட்டதைக் கண்டு சக உறுப்பினர்கள் அசந்து போய் விட்டார்களாம். பாராளுமன்றத்தில் பேசியே அறியாத பல தமிழ்நாட்டு உறுப்பினர்களுக்கு மத்தியில், இவர் தமது பாராளுமன்றப் பேச்சுக்களை இரண்டு புத்தகங்களாகவே வெளியிட்டிருப்பது ஆச்சரியமான விஷயம்.



தலைநகரத் தரகர்கள்

ராஜாஜியின் பேச்சைக் கேட்காமல் எதற்கெடுத்தாலும் பர்மிட், லைசென்ஸ், கோட்டா என்று தொழில்களின் தன்னிச்சையான வளர்ச்சிக்குத் தடை போடும் அரசாங்கத்தின் அர்த்தமற்ற கொள்கை ஏற்படுத்தின ஒரு சமாசாரம்தான் இந்த 'லையசன் ஆபீஸர்'கள் என்னும் 'தரகர்கள்' விவகாரம்.

தில்லியில் இப்படி 'லையசன்' வேலை பார்க்கிறவர்கள் சில ஆயிரம் பேர்கள் தேறுவார்கள். இவர்களில் ஒரு கணிசமான பகுதியினர் தமிழர்கள் என்று அறிந்தபோது இந்த 'வேலை'யைப் பற்றி இன்னும் அறிய உந்துதல் ஏற்பட்டது. ஒரு சில 'லையசன் ஆபீஸர்'களைச் சந்தித்தோம். எல்லாருமே மனம் விட்டுப் பேசினார்கள். (பெயர், போட்டோவை மட்டும் மறுத்துவிட்டார்கள்) உரையாடலின் போது, 'அட! அப்படியா?' என்னும் படியான தகவல்கள் வெளிவந்தன. "இதெல்லாம் ரொம்ப சகஜமான விஷயம். யாரைக் கேட்டாலும் சொல்வார்கள்; உங்களுக்கு வேண்டுமானால் கேட்க வியப்பாய் இருக்கலாம்" என்றார்கள்.

ஒரு சிறு அறை. அதிலே ஒரு எக்ஸிகியூடிவ் மேஜை, நாற்காலி. எதிரே சில நாற்காலிகள், ஸ்டெனோ, டெலிபோன். வசதியானவர்களாய் இருந்தால் உபரியாய் டெலக்ஸ். சில அலமாரிகள் முழுக்க ஃபைல்கள்.


இதுதான் ஒரு டிபிகல் லையசன் ஆபீஸரின் அலுவலகம். இந்த அறைக்குள் உட்கார்ந்து கொண்டு ஜகஜ்ஜாலக் கில்லாடி வேலைகளையெல்லாம் செய்து முடிப்பார் அந்த லையசன் ஆபீஸர். இந்தக் கையில் பணம் வரும். அந்தக் கையில் மாறி, வேறு எங்கோ போகும். ஃபைல் 'மூவ்' ஆகும். வேலை முடியும்!

இந்த லையசன் ஆபீஸர்களின் பணிதான் என்ன? பல்வேறு தொழில் நிறுவனங்களும் லைசென்ஸ், பர்மிட், இத்யாதிகள் என பல விஷயங்களில் அரசாங்கத்தின் தயவை நாடுகின்றன. சட்டப்படி அவைகளைப் பெற, அந்த நிறுவனங்களுக்கு உரிமை உண்டு என்றாலும், இந்தக் கறைபடிந்த அரசு யந்திரத்தில் அது சாத்தியமில்லையே! அப்ளை பண்ணிவிட்டு, அதுவாக வரட்டுமென்றால், கலியுகம் போய் அடுத்தது பிறந்துவிடும். இதை எப்படிச் சமாளிக்க? இந்த இடத்தில் தோன்றிப் பிரச்னையைத் தீர்த்து வைப்பவர்கள்தான் லையசன் ஆபீஸர்கள் என்கிற 'தொடர்பு அதிகாரிகள்.'

இவர்களில் பெரும்பாலானவர்கள் பத்துப் பதினைந்து வருடங்கள் மத்திய அரசின் பல்வேறு துறைகளில் சர்வீஸ் போட்டு விட்டுத் தங்கள் சர்வீஸின் போது, ஏற்படுத்திக் கொண்ட தொடர்புகள், தெரிந்து கொண்ட நெளிவு, சுளிவுகள் — என்னதான் கடினமான சூழ்நிலையானாலும் புறப்பட்டுப் புகுந்து, 'ஐயா எப்படி பார்த்தியா?' என்று சுட்டு விரலை உயர்த்தியபடி வெளியில் வரும் திறமை ஆகியவற்றை மூலதனமாய் வைத்து 'லையசன்' வேலையைச் செய்கிறார்கள். நல்ல பணப்புழக்கம். நிறையப் பணம் கைமாறுகிறது. மாறுகிற பணத்தில் கணிசமான பகுதி இவர்களின் கைகளிலும் தங்குகிறது.

அரசு அலுவலகத்தில் நுழைந்தால் இவர்கள் பணி பியூனிடமிருந்தே ஆரம்பமாகிறது. அவர்களைச் சரியானபடி கண்டுகொள்வதுதான் இவர்களுடைய முதற்படி. கண்டு கொண்டு விட்டால், ஆள் தலையைக் கண்டதுமே, 'நமஸ்தே சாப்! ஆயியே! ஆப்கோ ஃபர்ஸ்ட் பிரிபரென்ஸ்!' என்று முன்னுரிமை தருவார்கள். கண்டுகொள்ளாவிட்டாலோ, 'சாப் கோ டைம் நஹி' என்று சொல்லி விடுவார்கள் . நிர்தாட்சண்யமாய். அப்புறம் எல். டி. சி., யூ. டி. சி., செக்ஷன் ஆபீஸர், அண்டர் செக்ரட்டரி, அந்த செக்ரட்டரி, இந்த செக்ரட்டரி... எனப் பட்டியல் நீளமாய்ப் போகும். கீழ்மட்டங்களில் வேலை நடக்க வைட்டமின் 'ப' போதும். மேலே போகப் போகக் கொஞ்சம் மாற்றமிருக்கும். வீட்டுச் சாதனப் பொருட்கள், அது இது என்று வாங்கிக் கொடுக்கச் சொல்வார்களாம். குடும்பத்துடன் வெளியூர்ப் பயணத்தின்போது கார், கெஸ்ட் ஹவுஸ், இன்ன பிற வசதிகள் செய்துதரச் சொல்வார்களாம். மேல்மட்டத்தில், இதுபோன்ற 'மற்ற வகை' உதவிகள் கணிசமாய் எதிர்க்கப்படும்.

ஜனதா ஆட்சிக் காலத்தில், இந்த லையசன் ஆபீஸர்கள் பாடு கொஞ்சம் திண்டாட்டமாகிவிட்டது. ஜனதா ஆட்சி கவிழ்ந்ததும், மறுபடியும் இழந்த கோட்டையைப் பிடித்து விட்டார்கள், இவர்கள்!



* மலை மந்திர்.

தலைநகரில் கலைமிளிரும் தமிழர் கோயில்கள்

அமெரிக்காவில் உள்ள சிகாகோ நகரிலும், பிட்ஸ்பர்க்கிலும், நம் ஊர் மக்கள் கோயில்களைக் கட்டியிருக்கும் போது, கிட்டத்தட்ட ஐந்து லட்சம் தமிழர்கள் வாழும் தில்லியில் கோயில்கள் இல்லாமல் இருக்குமா? ஒரு கோயில் அல்ல; எட்டுக் கோயில்கள் இருக்கின்றன. தில்லி விரிவாகிக் கொண்டிருப்பதால் ஆங்காங்கே குடியேறும் தமிழர்களும் புதுப் புதுக் கோயில்களை நிர்மாணித்துக் கொண்டே இருக்கிறார்கள்.

தில்லியில் உள்ள நம் ஊர்க் கோயில்களிலேயே, பிரபலமாக இருப்பது 'மலை மந்திர்' எனப்படும் சுவாமிநாத சுவாமி மலை. தென்னாட்டில் கும்பகோணத்துக்கு அருகில் இருக்கும் சுவாமி மலை போன்று அமைக்கப்பட்டிருக்கும் இந்த மலைமந்திரை 'உத்தர ஸ்வாமி மலை' என்றும் அழைக்கிறார்கள்.

இராமகிருஷ்ணபுரம் — செக்டர் ஏழில் இருக்கும் மலை மந்திருக்கு இன்று தமிழர்கள் மட்டுமல்ல; ஏராளமான வட இந்திய பக்தர்களும் வந்து தொழுது சென்று கொண்டிருக்கிறார்கள்.



* முத்தையா ஸ்தபதி



கல்யாண சுந்தர குருக்கள்.

ஒரு சின்னக் குன்றின் மீது அமைந்திருக்கிறது மலை மந்திர். மேலே மூலஸ்தானத்துக்குப் போகும் முன்னர், பாதி வழியில் பிள்ளையார் சன்னதி. மேலே செல்லும் போது ஜிலு, ஜிலுவென்று காற்று படும் போது உடலுக்கு மட்டுமல்ல; அந்தச் சூழ்நிலையில் மனமும் சுத்தமாகிப் போகிறது.

'கந்தா, கார்த்திகேயா, சண்முகா, சுப்ரமண்யா...' என்று பக்திப் பரவசத்துடன் குரல்கள் ஒலிக்க, ஸ்வாமிநாதஸ்வாமி வேலுடனும், சேவற்கொடியுடனும் கம்பீரமாகக் காட்சியளிக்கிறார்.

காஞ்சி பரமாச்சாரியாரின் நேரடியான ஆலோசனையின் பேரில் கட்டப்பட்ட கோயில் என்ற சிறப்போடு, சோழர் காலத்துச் சிற்பக் கலையை அடிப்படையாகக் கொண்டு கட்டப்பட்ட கோயில் என்ற சிறப்பும் உண்டு. உள்ளே துர்க்கையின் சன்னதியும் இருக்கிறது.

நாச்சியார் கோயிலைச் சேர்ந்த சித்தனாத குருக்கள் இந்தக் கோயிலில் பணி புரிந்து வருகிறார். "நம்ம ஊரில் எப்படியிருக்கோமோ அப்படித்தான் நான் இங்கேயும் இருக்கிறேன். இங்கே வர்றவாளும், ரொம்ப பக்தி சிரத்தையா இருக்கா. எனக்கு ஐந்து குழந்தைகள். எல்லோரும் இங்கேதான் படிக்க

ருங்க! தில்லி ரொம்ப பிடிச்சுட்டுது!'' என்கிறார் அவர்.

எம். கல்யாண சுந்தர குருக்கள் ''கோயில் நிர்வாகம் நல்ல வசதிகளைச் செய்து தந்திருக்கிறது. நாங்கள் ஐந்து குருக்கள் இருக்கிறோம். எங்களுக்கு குவார்ட்டர்ஸ் வசதி இருக்கு. மருத்துவ வசதி, இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை சொந்த ஊருக்குச் சென்று வரப் பணம், வருடத்திற்கு ஒரு மாதம் விடுமுறை, உண்டு... ஒரு கஷ்டமுமில்லை!'' என்கிறார்.


தில்லியில் பல தமிழர் கோயில்கள் இருந்தாலும் ரொம்ப வருஷங்களாக நாதஸ்வரக் குழு இல்லாமல் இருந்ததாம். பிறகு கும்பகோணத்திலிருந்து கல்யாண சுந்தர குருக்கள்தான் ஒரு குழுவை அழைத்துக் கொண்டு வந்தாராம். ''இப்போது அவர்களுக்கு நல்ல வாய்ப்பு!'' என்றார் அவர்.

மலையை விட்டு கீழே வந்தோமானால் 'சில்ப கலா மண்டபம்'. தென்னிந்திய (குறிப்பாகத் தமிழ்நாட்டு) சிற்பக் கலையின் அதிசயங்களை வடக்கிலுள்ளவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கில் அமைக்கப்பட்டது இந்த மண்டபம்.

ஆவுடையார் கோயில் கல் சங்கிலி, கொடுங்கை, சிங்கத்தின் வாயிற் சுழலும் கல் உருண்டை என்று பல அதிசயங்களை இங்கே நிர்மாணித்திருப்பது பிரமிப்பாக இருக்கிறது. இவற்றை அதே பாணியில் மீண்டும் உருவாக்கியவர் கணபதி ஸ்தபதி. பல இந்திக்காரர்கள் இந்தச் சிற்ப அதிசயங்களைக் கண்டு மூக்கில் விரல் வைத்துக் கொண்டு செல்கிறார்கள்.

மலை மந்திரில் உள்ள மற்றொரு சிறப்பு, குறிப்பிட்ட அளவு பணத்தைச் செலுத்திவிட்டால், உங்கள் ஆயுள் முழுவதும் வருடத்தில் நீங்கள் குறிப்பிடும் ஏதாவது ஒரு நாளில் பூஜைகள் நடத்தப்படும். நானூறுக்கும் மேற்பட்டவர்கள் பணத்தைச் செலுத்தி இருப்பதால் பூஜைகள் எந்தவிதச் சிரமமும் இல்லாமல் தொடர்ந்து நடக்கின்றன.

இந்தக் கோயிலின் அருகிலேயே, இப்போது



சரோஜினி நகர் கோயில்.

சிக்கநாத குருக்கள்



மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில் ஒன்று உருவாகி வருகிறது. முத்தையா ஸ்தபதியின் மேற்பார்வையில், பாண்டிய, பல்லவ சிற்ப வேலைப்பாடுகளைக் கொண்டு கட்டப்பட்டு வரும் இந்தக் கோயிலின் வளர்ச்சியை வேகப்படுத்திவருபவர் நம் ஆர்.வி. அவர்கள் தாம். அவர்தாம் உத்தர சுவாமி மலைக் கோயிலின் நிர்மாணத்திலும் பிரதானப் பங்கு வகித்தவர்.

மலைமந்திருக்கு அடுத்தபடியாக சரோஜினி நகருக்கும் வினய் நகருக்கும் நடுவிலுள்ள பிள்ளையார் கோயில் மிகவும் பிரசித்தமானது. இந்தக் கோயிலில், சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. காலை வேளைகளில் வடக்கத்திக்காரர்கள் அவர்கள் வழக்கப்படி இந்தச் சிவலிங்கத்தைத் தொட்டுப் பூஜை செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள். மாலை நான்கு மணியிலிருந்து ஆறு மணி வரை இந்தக் கோயிலில் புரோகிதர்கள் வந்து குவிகிறார்கள். தமிழர்கள் தங்கள் வீட்டில் ஏதாவது வைதீக காரியங்கள் நடத்தப் புரோகிதர்கள் தேவைப்படும் போது நேராக சரோஜினி நகருக்கு வந்து அழைத்துச் செல்கிறார்கள்.

இந்தக் கோயில் மடப்பள்ளியில் வேலை பார்க்கும் தேனியைச் சேர்ந்த ராஜாத்தினம், ''வடைமாலை, என்னுருண்டை, போன்றவற்றை நாங்கள் செய்கிறோம். பல இந்திக்காரர்கள் இப்போது வடைமாலை சாத்த ஆரம்பித்திருக்கிறார்கள்'' என்று சொல்கிறார்.

இந்தக் கோயில்களைத் தவிர, லோதி காலனியில் உள்ள ராமர் கோயில், ஜனக்புரியிலுள்ள ராஜராஜேஸ்வரி கோயில், ஆர். கே. புரத்திலுள்ள வெங்கடேஸ்வரா மந்திர் என்று தில்லி தமிழர்களின் ஆன்மீக வாழ்க்கையின் அடையாளங்களாகக் கோயில்களின் பட்டியல் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்!

* வெறும் வாய்ப்பேச்சுடன் இருக்காமல், செயலிலும் பின் பற்றும் நமது ஜனாதிபதியின், செய்கை நல்ல செய்திதான்! அதை விட நல்ல சேதி, வித்தியாசமான ஜனாதிபதியாக இருக்கும் ஆர்.வி. தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் என்பது...!

குத்தாலம். எஸ். ராஜா.

* ஜனாதிபதி ஆர். வெங்கட ராமன் அவர்கள் சென்னை விஜயத்தின் போது அவருக்களிக்கப் பட்ட அன்பளிப்புக்களைப்பொதுத் தொண்டுக்கு வழங்கிவிட்டார் என்பதோடு உயர் பதவியிலுள்ள மற்றவர்களுக்கும் முன்னுதாரண மாகத் திகழ்கிறார் என்பது வாஸ்தவமே! ஆனால், அதற்காகத் தற்போதைய அரசியல் சாசனத் திருத்த மசோதாவில் கையெழுத்துப் போடாமலிருப்பார் என எதிர்பார்த்தது எத்தனை ஏமாற்றமாகிவிட்டது! முன்பு அவர் எமர்ஜென்சியை எதிர்த்து எழுதி இருக்கலாம்; ஆனால் இப்போது...? கொள்கையா, பதவியா? என்று பார்த்தால், பதவியே பெரிது என்றுதான் நம்நாட்டுத் தலைவர்களின் வரலாறு கூறுகிறது!

திருமுகை. ஜி. கதிரேசன்.

* ஆனந்தாயியின் சோகக்கதை படித்தேன். குடும்பக் கட்டுப் பாட்டுத் திட்டத்தை அமுல்படுத்திய சாதனை(?)க்காக மத்திய அரசிடமிருந்து விருதுபெற வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் செயல்பட்டதால்வந்தவினைதான் இது. இது இனிமேலும் தொடர்ந்தால் எத்தனையோ ஆனந் தாயிகளின் உயிர்களும் பலியாக்கப்படும் என்பது மட்டும் சர்வ நிச்சயம்!

திருத்துறைப்பூண்டி. ஜெயந்திப்ரியன்.

* கு. க. ஆபரேஷனுக்குப் பலியான ஆனந்தாயியின் சோகக்கதையைப் படித்தேன். இதற்குக்காரணமானவர்கள் நிச்சயமாகத் தண்டிக்கப்பட வேண்டியவர்கள். அப்போதுதான் இதுபோன்ற தவறுகள் நடக்காமல் இருக்கும். இல்லையென்றால் கு. க. திட்டத்தைக் 'கொலைகாரத் திட்டம்' என்று மக்கள் கணித்து அதை ஒதுக்கித் தள்ளும் நிலை ஏற்பட்டு விடும்.!

விருதுநகர்—1. கே.டி. ஆர். சேகர்.

கல்கி



* 'மூப்பனாரிடம் பேசமாட்டேன் என்கிறாரே ஜெயலலிதா?' —என்பதற்கெல்லாம் தராசு பதில் கூற வேண்டுமா என்று நினைத்தேன், பதிலைப் படித்துச் சுவைக்கும் முன்னர்... பதில் அபாரம்...!

மேல்பட்டி. வைரம்.

* 'ராமநாதன் நம்முடன் வாழ்ந்த போதும் சரி, நம்மை விட்டு அவர் பிரிந்த பின்னரும் சரி, அவர் உயிர் மட்டும் இசையுடனேயே ஒன்றிக் கலந்திருந்தது; இன்றும் இசையுடன் இழைந்து உயிர் வாழ்கிறது...' என்ற வார்த்தைகளைப்படித்தபின்மெய்சிலிர்த்தது.

சென்னை—33. எஸ். ராம்கோபால்.

* பணம் பகட்டு ஆகியவற்றைக் காட்டிலும் குணம்தான் மனிதனுக்குஉயர்த்துஎன்பதை, சுப்பத்தையின் சாபம் என்ற சிறுகதை மூலம் மிக அருமையாக எடுத்துக் காட்டியுள்ளீர்கள்; பாராட்டுக்கள்.

வால்குடி. எம். இராஜேந்திரன்.

* தெள்ளத் தெளிவாக அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில், அருமையான எடுத்துக்காட்டுக்கள் மூலம் திவாரியின் பட்ஜெட்டைப் படம் பிடித்துக் காட்டிய 'கல்கி'க்குப் பாராட்டுக்கள்.

சீர்காழி. சண்பை. சி. சண்முகம்.

* 'மூடநம்பிக்கை' என்ற வார்த்தையைப் புதிய முறையில் அணுகி விருந்த ஒருபக்கக் கதையும், பாமர மக்கள் எந்த அளவுக்கு இன்றைய அரசியல்வாதிகளை நம்பி வாழ்க்கை நடத்துகிறார்கள் என்பதனை நாசுக்காக எடுத்துரைத்த 'ஏக்கம்' கதையும் ஓராயிரம் கருத்தைக் கொண்டிருந்தன.

சென்னை — 80.
கே. என். 'ஸ்ரீ' மகுடப்ரியன்.

* ஜெயலலிதா தம்மைச் சுற்றி ஒரு மாய வலையைப் பின்னிக் கொண்டு நடக்கும் ஆணவப் போக்கால் ஏற்பட்டு வரும் சரிவை மிகத் தெளிவாகக் கார்ட்டூன் போட்டுள்ளீர்கள். அருமையான கார்ட்டூன்.

இராமநாதபுரம். எஸ். ஜஹாங்கீர்.

* "துணை"—சிறுகதை, நெஞ்சின் உச்சகட்டம். குழந்தைக்குத் துணை தாய் என்பதையும், அந்தத் தாய்க்குத் துணை கணவன் என்பதையும் கதையில் வெளிப்படுத்திய விதம் கதையின் உச்சம்.

தத்தம்—1. மதுரைமூர்த்தி ப்ரியை

* ஜெர்மானியச் சிறுகதை (ரகசிய மோதிரம்) காதலின் உண்மை தத்துவார்த்தத்தை உணர்த்துவதாக அமைந்திருந்தது. காதலின் நேர்த்தி என் நெஞ்சை நெகிழ வைத்தது.

சுரியாபட்டினம்.
செல்லே. பன்னீர்செல்வன்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை—600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 4 3154 3, 4 34 157; ஆசிரியர் குழு அலுவலகம்: 4 34 14 5.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104 |—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 280|—; விமானத் தபால் ரூ. 680|—.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 53|—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 14 0|—; விமானத் தபால் ரூ. 34 0|—.


பற்களைப் பற்றிய ஒரு பெரிய உண்மை
வாய் துர்நாற்றம் என்பது பற்களைவிட அதிகம், ஈறுகள் சம்பந்தப்பட்டதாகும்.
மற்றுமொரு பெரிய உண்மை
போர்ஹென்ஸ் டூத்பேஸ்ட்டில் உள்ள ஒப்பற்ற அஸ்ட்ரிஞ்ஜெண்ட் மட்டுமே ஈறுகளை வலுவாக்கி அவற்றை ஆரோக்கியமாக வைக்கிறது. அதனால் வாய் துர்நாற்றம் ஏற்பட வாய்ப்பே இல்லை.
நுரை வளமுள்ள போர்ஹென்ஸ் —நீல நிறப் பேக்கிலே.
Forhan's
TOOTHPASTE
Forhan's
கட்டுப்படுத்தப்பட்ட நுரையுள்ள —ஆரஞ்சு பேக்கிலே.
போர்ஹென்ஸ்
ஒரு பல் டாக்டரால் உருவாக்கப்பட்ட டூத்பேஸ்ட்.

GM.27/88.Tm

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka



PONDS

பொன் நகைகள் மின்னிட... சந்தன நறுமணம் கமழ்ந்திட...

இனிய உணர்வுகள் மனதில் மலர்ந்திடும் கணங்கள். உங்கள் மேனியில் பொன் நகைகள் மின்னிட, தூய சந்தனத்தின் நறுமணம் கமழ்ந்திட இதுவரை அனுபவித்தறியா உணர்வுகளால் உள்ளம் பூரிக்கிறது: பெண்மை உங்களிடம் பூரண பொலிவு பெறுகிறது.

அரிய நறுமணம்.
மதிப்பில் பொன்னைப்
போல் உயர்ந்தது.

பாண்ட்ஸ் சாண்டல் டால்க்

HTA 7023